மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரைகள்

(18.10.2022 முதல் 21.04.2023 வரை)

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்

ஆற்றிய உரைகள்

(18.10.2022 முதல் 21.04.2023 வரை)

சிறப்பு வெளியீடு

தமிழரசு

இலவச வெளியீடு

மே 2023

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்,
இராஜீவ் காந்தி சாலை,
தரமணி, சென்னை - 600 113.

பொருளடக்கம்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

1. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்தித் திணிப்புக்கு எதிராக அரசினர் தனித் தீர்மானம் கொண்டுவந்து ஆற்றிய உரை - 18.10.2022 1

2. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தீர்மானத்தினை முன்மொழிந்தும், பல்வேறு உறுப்பினர்கள் உரையாற்றியதற்குப் பிறகு பதிலளித்தும் ஆற்றிய உரை - 19.10.2022 11

3. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விருகம்பாக்கம் சம்பவம் குறித்து எழுப்பிய கேள்விக்கு ஆற்றிய உரை - 11.01.2023........ 21

4. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

தொட்டியில் மனித கழிவுகளை போட்டு
அசுத்தம் செய்துள்ளது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை
குறித்த சிறப்பு கவன ஈர்ப்பில்
ஆற்றிய உரை - 11.01.2023 25

5. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,
சேது சமுத்திரத் திட்டம் குறித்த
அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து
ஆற்றிய உரை – 12.01.2023 31

6. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு
ஆற்றிய பதிலுரை – 13.01.2023 37

7. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு
பதிலளித்துப் பேசியபோது வெளியிட்ட
அறிவிப்புகள் - 13.01.2023 69

8. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,,
கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில்
நடைபெற்ற ஒரு நிகழ்வு குறித்து
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய
கவன ஈர்ப்புக்கு, அளித்த பதில் - 23.03.2023 73

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

9. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,
தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல்
மற்றும் இணையவழி விளையாட்டுக்களை
ஒழுங்குமுறைப்படுத்துதல் சட்டமுன்வடிவு,
2022-ஐ, மறுஆய்வு செய்திடக் கோரி,
ஆற்றிய உரை - 23.03.2023 75

10. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,
மகளிர் உரிமைத் தொகை குறித்து,
அளித்த விளக்கம் - 27.03.2023 83

11. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,
சட்டம்-ஒழுங்கு தொடர்பான கவன ஈர்ப்புக்கு
ஆற்றிய உரை - 29.03.2023 91

12. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,
விழுப்புரத்தில் இஸ்லாமிய நபர்
கத்தியால் தாக்கப்பட்டு உயிரிழந்தது
தொடர்பாக அளித்த பதில் - 30.03.2023 95

13. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்,
திருவான்மியூர், கலாஷேத்திரா பவுன்டேஷன்
விவகாரம் குறித்து அளித்த பதில் - 31.03.2023 97

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

14. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதற்கான ஏல அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது குறித்த சிறப்புக் கவன ஈர்ப்புக்கு, அளித்த பதில் - 05.04.2023 100

15. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து, ஆற்றிய உரை - 10.04.2023 103

16. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்ட மசோதாவிற்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ள நிலையில், ஆற்றிய உரை - 10.04.2023 113

17. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆலங்குளம் பேரூராட்சியில் தீயணைப்பு நிலையக் கட்டடம் கட்டுவது தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் கேட்ட வினாவிற்கு, அளித்த பதில் - 12.04.2023 115

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

18.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தில், பள்ளிச் சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது குறித்த தகவல் கோரலுக்கு அளித்த பதில் - 12.04.2023	119
19.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்கள், அனைத்து வகையிலும் சமூகநீதியின் பயன்களைப் பெற, அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ள இந்திய அரசை வலியுறுத்திடும் அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை - 19.04.2023	121
20.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், முன்னாள் சட்டமன்ற மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் மருத்துவப் படி தொடர்பாக, வெளியிட்ட அறிவிப்பு - 19.04.2023	127
21.	மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், ஆருத்ரா உள்ளிட்ட நிதி நிறுவனங்களின் மோசடி குறித்து ஆற்றிய உரை - 20.04.2023	129

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

22. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், அதிமுக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வு குறித்து மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் எழுப்பிய கேள்விக்கு அளித்த பதில் - 20.04.2023 133

23. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அளித்த பதில் - 20.04.2023 135

24. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்து மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் எழுப்பிய கேள்விக்கு அளித்த பதில் - 20.4.2023 139

25. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், அம்பாசமுத்திரம் நிகழ்வு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அளித்த பதில் - 20.04.2023 143

வ. எண்.	உரை விவரம்	பக்கம் எண்

26. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், கொடநாடு விவகாரம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அளித்த பதில் - 20.04.2023 145

27. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், கோயம்புத்தூர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அளித்த பதில் - 20.04.2023 149

28 மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், குட்கா விவகாரம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அளித்த பதில் - 20.04.2023 151

29. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து, ஆற்றிய உரை - 21.04.2023 155

இந்தி பேசாத மாநிலங்களின் உரிமைகளை நிலைநாட்ட தமிழ்நாடு மீண்டும் முன்னோடி மாநிலமாக நின்றிடும்

“வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்” என்ற கொள்கைக்குச் சொந்தக்காரர்களாகிய நாம், அன்னைத் தமிழைக் காப்பதற்காக மட்டுமல்ல; ஆதிக்க மொழித் திணிப்புக்கு எதிராக என்றும் குரல் கொடுப்பவர்கள் என்ற அடிப்படையில், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் முன்மொழிவதற்கு முன்பாக ஒரு முன்னுரையை வழங்க விரும்புகிறேன்.

தமிழ் காக்க சிறை சென்று மரணம் அடைந்த நடராசன் - தாளமுத்து தொடங்கி, தீக்குளித்த கீழப்பழுவூர் சின்னச்சாமி, துப்பாக்கிக் குண்டுக்குப் பலியான சிதம்பரம் ராசேந்திரன் வரையிலான தியாகிகளை இந்த நேரத்தில் நினைவுகூர்வது பொருத்தமாக இருக்கும் என நான் நினைக்கிறேன்.

மொழி என்பது, நமது உயிராய், உணர்வாய், விழியாய், நம் அனைவரின் எதிர்காலமாய் இருக்கிறது. அத்தகைய நம்

தாய் மொழியை வளர்க்கவும், பிறமொழி ஆதிக்கத்தில் இருந்துகாக்கவேதிராவிட முன்னேற்றக்கழகம்தோன்றியது. தோன்றிய காலம் முதல், இன்றுவரை தமிழ் மொழிக்கான ஒரு தனிப்பெரும் பாதுகாப்பு இயக்கமாகவே செயல்பட்டு வருகிறது. 1938ஆம் ஆண்டு முதல், இந்தி மொழித் திணிப்பு தொடர்ந்து கொண்டே இருக்கிறது. நாமும் எதிர்த்துக் கொண்டே இருக்கிறோம். ஆதிக்கச் சக்திகளும் விடுவதாக இல்லை; நாமும் விடுவதாக இல்லை. இது வெறும் மொழிப் போராட்டம் மட்டுமல்ல; தமிழினத்தை, தமிழர் பண்பாட்டைக் காக்கும் போராட்டமாக நாம் தொடர்ந்து கொண்டு இருக்கிறோம்; தொடரவே செய்வோம் என்று இந்தப் பேரவையின் வாயிலாகத் தமிழ்நாட்டு மக்களுக்கு நான் உறுதி அளிக்கிறேன்.

இந்திய ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசானது, இந்தி மொழியைத் திணிப்பதைத் தனது வழக்கமாகவே வைத்துள்ளது. ஆட்சி நிர்வாகத்தில் இந்தியைத் திணிப்பது தொடங்கி, கல்வி மூலமாகத் திணிப்பதுவரை, தாங்கள் ஆட்சிக்கு வந்ததன் நோக்கமே இந்தியைத் திணிப்பதுதான் என்று நினைக்கிறார்கள்.

"ஒரே நாடு - ஒரே மதம் - ஒரே தேர்தல் - ஒரே தேர்வு - ஒரே உணவு - ஒரே பண்பாடு" - என்ற வரிசையில் ஒரே மொழியை வைத்து, மற்ற தேசிய இன மக்களின் மொழிகளை அழிக்கப் பார்க்கிறார்கள். இந்தியா என்பது, பன்முகத்தன்மைக் கொண்ட நாடு. பல்வேறு இனங்கள், மொழிகள், மதங்கள், பண்பாடுகள் கொண்ட மக்கள் வாழும் நாடு, இந்தியா. வேற்றுமையிலும் ஒற்றுமை கண்டு, சகோதரத்துவத்துடன் வாழ்ந்து வருகிறோம். விடுதலை பெற்ற இந்தியா, ஓராண்டுகூட ஒற்றுமையாக இருக்காது என்று வெளிநாட்டுப் பத்திரிக்கைகள் எழுதிய நிலையில், நமது பன்முகத் தன்மையைக் காப்பதன் மூலமாக இந்தியா எழுபத்தைந்து ஆண்டுகளாகக் காப்பாற்றப்பட்டு வருகிறது.

பல்வேறு மொழியினர் வாழும் நாடு இது. ஆனாலும் மொழிவாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டதால் அனைத்து மொழியினரும் மனநிறைவோடு வாழ்ந்து வருகிறார்கள். பல்வேறு மத நம்பிக்கையாளர்கள் இருந்தாலும், இந்தியா மதச்சார்பற்ற நாடாகவே அரசியல் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பல்வேறு மொழி பேசுபவர்களின் நாடாக இருந்தாலும், ஒரு மொழியின் ஆதிக்கம் இருக்காது என்பதை, இந்தியாவை ஆட்சி செய்த பிரதமர்கள் உறுதிப்படுத்தி வந்திருக்கிறார்கள். 'இந்தி பேசாத மக்கள் மீது இந்தி மொழி திணிக்கப்படாது. அவர்கள் விரும்பும்வரை ஆங்கிலம் ஆட்சிமொழியாக நீடிக்கும்' என்று பிரதமர் நேரு அவர்கள் அளித்த உறுதிமொழிதான் இன்றுவரை இந்தி பேசாத பெரும்பான்மை மக்களைக் காக்கும் அரணாக இருக்கிறது.

அனைத்து மாநிலங்களையும் உள்ளடக்கியதாக ஐந்தாண்டுத் திட்டங்களும், பொதுத் துறை நிறுவனங்களும் அமைக்கப்பட்டன. இப்படி நடந்ததால்தான், எல்லையால் மட்டுமல்ல; எண்ணங்களாலும் ஒற்றுமைக் கொண்ட நாடாக இந்திய நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. இதற்குக் குந்தகம் ஏற்படுத்தும் வகையிலான செயல்கள் அண்மைக் காலமாக நடந்து வருகின்றன. இதில் மிகமிக முக்கியமானது, இந்தி மொழித் திணிப்பு! இந்திமொழித் திணிப்பை பட்டவர்த்தனமாக ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்கிறது. இந்திமொழி தினம் கொண்டாடும் ஒன்றிய அரசு, மற்ற மாநில மொழிகளின் தினம் கொண்டாடுவது இல்லை. இந்தி மொழிக்குத் தரப்படும் முக்கியத்துவம் என்பது, மற்ற மொழிகளைப் புறக்கணிப்பதாக மட்டுமில்லை; அழிப்பதாகவும் அமைந்திருக்கிறது.

இந்தியை ஆட்சிமொழியாக, அலுவல் மொழியாக மட்டுமல்ல; அதிகாரம் செலுத்தும் மொழியாகவும் பா.ஜ.க. அரசு உயர்த்திக் கொண்டு இருக்கிறது. மேலாதிக்கம்

செலுத்தும் மொழியாக அதனை மாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இந்தியும், ஆங்கிலமும்தான் அலுவல் மொழியாக இத்தனைகாலம் இருந்துவரும் நிலையில், ஆங்கிலத்தை மொத்தமாக அகற்றப் பார்க்கிறது பா.ஜ.க. அரசு.

இந்த வரிசையில் கடந்த 13ஆம் நாளன்று, ஆங்கில ஊடகங்களில் சில செய்திகள் வெளியாகி உள்ளன. அவை நமக்கு பெரும் கவலை அளிப்பதாக உள்ளன. மாண்புமிகு ஒன்றிய உள்துறை அமைச்சர் அமித் ஷா அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட அலுவல் மொழிக்கான நாடாளுமன்றக் குழுவின் அறிக்கையானது, மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருப்பதாக அச்செய்தி கூறுகிறது.

நாட்டில் உள்ள இந்தி பேசும் மாநிலங்களில், இந்திய தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் (ஐ.ஐ.டி.), மத்திய பல்கலைக்கழகங்களில், கேந்திரிய வித்யாலயா கல்வி நிறுவனங்களில் பயிற்று மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்றும், போட்டித் தேர்வுகளில் கட்டாய ஆங்கில மொழி வினாத்தாள் நிறுத்தப்பட வேண்டும் என்றும், இந்தியில் பணிபுரியாத அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் எச்சரிக்கப்பட வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் பணியாளர் தேர்வில் தேர்வாளர்களின் இந்திமொழி அறிவை உறுதிசெய்ய வேண்டும் என்றும், ஒன்றிய அரசின் அலுவலகங்கள், அமைச்சகங்கள், கடிதங்கள் போன்றவை இந்திமொழியில் இருக்க வேண்டும் என்றும் பரிந்துரை செய்துள்ளார்கள் என்று செய்திகள் மூலமாக தெரிய வருகிறது. முழுக்க முழுக்க இந்தியின் ஆதிக்கத்தை வலுப்படுத்தும் அறிக்கையாக இது அமைந்துள்ளது.

இந்தி பேசும் மாநிலங்களில் இந்தியை வலுப்படுத்தும் போர்வையில் இந்தியா முழுவதும் இந்தியை வலுப்படுத்தவே துடிக்கிறார்கள். கேந்திரிய வித்யாலயா பள்ளி முதல்

ஐ.ஐ.டி. வரை இந்தி மட்டும்தான் என்றால், மற்ற மொழி மக்களுக்கும் இந்தக் கல்வி நிறுவனங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று தடுக்க நினைக்கிறார்கள். ஆங்கிலத்தை முற்றிலுமாக தடுப்பதன் மூலமாக, ஆங்கில அறிவையே முற்றிலுமாகத் தடுக்கிறார்கள். மாநில மொழி என்று ஒப்புக்காகச் சொல்கிறார்களேத் தவிர, முழுக்க முழுக்க இந்திக்காகவே துடிக்கிறது அவர்களது இதயம்.

மாநில மொழிகள் மீது இவர்கள் இவ்வளவு பற்று வைத்திருப்பது உண்மையானால், அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளையும், இந்திக்கு இணையான ஒன்றிய அரசின் அலுவல் மொழிகளாக அறிவிக்கத் தயாரா? என்று நான் இந்த நேரத்தில் கேட்க விரும்புகிறேன்.

அனைத்துத் தேர்வுகளிலும் கட்டாய ஆங்கிலமொழி வினாத்தாள் இருப்பதைக் கைவிடச் சொல்வதன் மூலமாக, அனைத்து இந்தியத் தேர்வுகளையும் இந்திமயமாக்கத் துடிக்கிறார்கள் என்பதே தெரிகிறது. இந்தித் தெரியாதவர்கள் ஒன்றிய அரசுப் பணி பெறமுடியாத வகையில் இந்தப் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன என்று கருதவேண்டி உள்ளது. இனி நடக்கும் அனைத்துத் தேர்வுகளும் இந்தியில்தான் என்று சொல்வதன் மூலமாக, இந்திப் பேசும் மாநில மக்களுக்கு மட்டும்தான் இனி அனைத்திந்திய பணி இடங்கள் என்பதை வெளிப்படையாக அறிவித்துவிட்டார்கள்.

"பணியாளர் தேர்வுகளுக்கு நடைபெறும் போட்டித் தேர்வுகளின் வினாத்தாள்களில் ஆங்கில மொழியை அறவே நீக்கிவிட்டு, இந்திமொழியில்தான் வினாத்தாள் இருக்க வேண்டும் என்பதைச் சட்டப்பூர்வமாக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளோம்" என்று இக்குழுவின் துணைத் தலைவரான பார்த்ருஹரி அவர்கள் கூறியிருக்கிறார். இது எங்கே போய் முடியும் என்றால், இந்திப் பேசாத மாநில

மக்களை மொத்தமாக தேசிய நீரோட்டத்திலிருந்து அந்நியமாக்குவதில் போய்தான் முடியும். ஆங்கிலத்தை அகற்றுவதே இந்தியை அந்த இடத்தில் அமர்த்துவதற்காகத்தான்.

முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராசர் அவர்கள் தன்னிடம் சொன்னதாகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிடுவார். "சட்டமன்றத்தில் ஆங்கிலத்துக்கு எதிராக சிலர் பேசியபோது, முதலமைச்சர் காமராசர் அவர்கள் எங்களிடம் காதில் இரகசியம் போலச் சொன்னார். 'ஆங்கிலத்தை எதிர்த்தீங்கன்னா, அந்த இடத்துல இந்தி வந்து குந்திக்கும்னேன்' என்று சொன்னார். எவ்வளவு பெரிய அரசியல் பாடத்தை அவ்வளவு எளிமையாகக் காமராசர் அவர்கள் சொன்னார்கள் பார்த்தீர்களா?" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு ஆங்கிலத்தை அகற்றுவதற்குப் பின்னால் இந்தியைக் கொண்டு வந்து உட்கார வைக்கும் மறைமுகத் திட்டம்தான் இருக்கிறது என்பதை இம்மாமன்றத்தில் அழுத்தம் திருத்தமாக நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

1968, 1976 ஆம் ஆண்டுகளில் அலுவல் மொழி தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், அதனடிப்படையிலான விதிகளின்படி ஒன்றிய அரசுப் பணிகளில் ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்தகைய ஆங்கிலத்தை அகற்றுவது எப்படிச் சரியாக இருக்க முடியும்? தற்போதைய நிலையில், அறிவியல் வளர்ச்சியையும் தொழில்நுட்ப வசதிகளையும் கவனத்தில் கொண்டு, எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளையும் இந்திக்கு இணையான அலுவல் மொழியாக்குவதே ஒன்றிய அரசின் நோக்கமாக இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, ஆங்கிலத்தையும் நீக்கிவிட்டு, இந்தியை மட்டும் வைப்பது அரசியல் சட்டத்தை மதிக்காத தன்மையாகும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் உள்ள தமிழ் உள்ளிட்ட 22 மொழிகளுக்கும் சம வாய்ப்பு, சம உரிமை வழங்கி, அந்த மொழிகளை இந்திய நாட்டின் ஆட்சி மொழி மற்றும் அலுவல் மொழிகள் ஆக்கிட முயற்சிகள் எடுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு முழுக்க முழுக்க இந்திமயமாக்குவது சரியா? என்பதுதான் நாம் எழுப்பும் கேள்வி!

தமிழ்நாட்டின் மொழிக் கொள்கை என்பது, தமிழும், ஆங்கிலமும் என்ற இருமொழிக் கொள்கை! தமிழ் மொழி இந்திய அரசின் ஆட்சிமொழிகளில் ஒன்றாக ஏற்கப்பட வேண்டும். மாநில ஆட்சி மொழிகள் அனைத்தும் இந்திய அரசின் ஆட்சிமொழியாக ஆக வேண்டும். இந்திப் பேசாத மாநில மக்கள் மீது இந்தி மொழி எந்த வகையிலும் திணிக்கப்படக் கூடாது. இந்தி பேசாத மாநில மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் தொடர வேண்டும். கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் இந்தித் தெரிந்தவர்களுக்கு மட்டுமே சாதகமான வழிவகைகள் செய்யப்படக் கூடாது. அது நம் அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிரானதாக அமைந்துவிடும்.

தமிழகத்தில் இயங்கும் ஒன்றிய அரசின் அலுவலகங்களில் இணை அலுவல் மொழியாக தமிழை அங்கீகரித்து, அனைத்து அலுவலகச் செயல்பாடுகளும் தமிழிலேயே இயங்க உரிய சட்டத் திருத்தம் செய்ய வேண்டும். சென்னை உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக தமிழை ஆக்க வேண்டும். இவைதான் நமது மொழிக் கொள்கை! இந்தித் திணிப்பை எதிர்ப்பதும், நீட் தேர்வு, புதிய கல்விக் கொள்கையை நிராகரிப்பதும் இதனால்தான் என்பதை இந்த மாமன்றமும், தமிழ்நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள்.

இந்தி மொழி பயன்பாடு அடிப்படையில் இந்தியாவை இவர்கள் மூன்றாகப் பிரிக்கப் பார்க்கிறார்கள். இந்தி மொழி பயன்பாடு அதிகம் உள்ள மாநிலங்கள், இந்தி மொழி பயன்பாடு குறைவான மாநிலங்கள், இந்தி பேசாத

மாநிலங்கள் என்று மூன்றாக இந்தியாவைப் பிரிக்கிறார்கள். நாம் மூன்றாவதாக இருக்கிறோம். ஆனால், பெரும் மொழி மற்றும் பண்பாட்டிற்குச் சொந்தக்காரர்களாகிய நம்மை மூன்றாம்தரக் குடிமக்களாக நம்மை ஆக்கிவிடப் பார்க்கும் முயற்சிகளுக்கு நாம் எதிர்க்குரல் எழுப்பிட வேண்டும்.

இந்திக்குத் தாய்ப்பாலும், இந்தியாவின் மற்ற மொழிகளுக்குக் கள்ளிப் பாலும் புகட்ட நினைப்பது, இந்திய அரசியல் சட்டத்திற்கு எதிரானது. இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்குப் பேராபத்தை விளைவிக்கக் கூடியது என்பதால் பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

அரசினர் தனித் தீர்மானம்

"ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சராகவும், அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுத் தலைவராகவும் உள்ள மாண்புமிகு திரு.அமித் ஷா அவர்கள் தலைமையிலான குழு சமீபத்தில் மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் அளித்துள்ள அறிக்கை இன்று நாடு முழுவதும் விவாதத்திற்கு உள்ளாகியிருக்கிறது.

குறிப்பாக, தமிழ்நாடு உள்ளிட்ட இந்தி பேசாத மாநில மக்களுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் வகையிலும், இந்த நாட்டின் பிரதமராக இருந்த திரு. நேரு அவர்கள் அளித்த வாக்குறுதிக்கு முரணாகவும் பல பரிந்துரைகளை அளித்துள்ளது.

அந்தப் பரிந்துரைகளில்,

❖ ஒன்றிய அரசின் கல்வி நிறுவனங்களான ஐ.ஐ.டி., ஐ.ஐ.எம்., எய்ம்ஸ் மற்றும் மத்திய பல்கலைக்கழகங்களில் ஆங்கிலத்திற்கு பதில் இந்தி மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும்;

❖ இந்தியை பொது மொழியாக்கிடும் வகையில், தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் சாராத கல்வி

நிறுவனங்கள், கேந்திரிய வித்யாலயா பள்ளிகள் உள்ளிட்ட ஒன்றிய அரசின் அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் இந்தி மொழியே பயிற்று மொழியாக ஆக்கப்பட வேண்டும்;

❖ இளைஞர்களின் வேலைவாய்ப்பில், கட்டாயத் தாள்களில் ஆங்கிலத்தை நீக்கி விட்டு, இந்தியை மட்டுமே முதன்மைப்படுத்த வேண்டும்;

என்பன உள்ளிட்டவையும் அடங்கும்.

இப்படி ஆங்கிலத்தைப் புறந்தள்ளி, அரசமைப்பு சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் உள்ள இந்திப் பேசாத மாநில மக்களின் 22 மாநில மொழிகளையும் அடியோடு ஒதுக்கி வைத்து, எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கும் வகையில், அரசமைப்பு சட்டத்தின் கூட்டாட்சிக் கொள்கைகளுக்கு எதிரான, நம் நாட்டின் பன்மொழிக் கட்டமைப்பிற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் அளிக்கப்பட்டுள்ள இந்தப் பரிந்துரைகளை ஏற்கக் கூடாது, நடைமுறைபடுத்தக் கூடாது என மாண்புமிகு பிரதமர் அவர்களுக்கு 16.10.2022 அன்று தமிழக அரசால் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

இந்த மாபெரும் அவையில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றிய இரு மொழிக் கொள்கை தீர்மானத்திற்கு எதிராக, பிரதமராக இருந்த திரு. நேரு அவர்கள் இந்தி பேசாத மாநிலங்களுக்கு அளித்த வாக்குறுதிக்கு மாறாக, 1968 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் அலுவல் மொழி தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மற்றும் அதன் அடிப்படையில், ஆங்கில மொழி பயன்படுத்துவது உறுதி செய்யப்பட்டுள்ளதற்கும் எதிராக, இப்போது அளிக்கப்பட்டுள்ள பாராளுமன்றக் குழுவின் பரிந்துரைகள் அமைந்திருப்பது கவலைக்குரியதாக இப்பேரவை கருதுகிறது.

அன்னைத் தமிழ்மொழியைக் காத்திட, ஆங்கிலம் அலுவல் மொழியாக தொடர்ந்திட, ஏன் அரசமைப்பு சட்டத்தின் 8ஆவது அட்டவணையில் உள்ள 22 மொழிகளையும் அழியாது காத்திட, இந்தி பேசாத மாநில மக்களின் உரிமைகளை நிலைநாட்டிட தமிழ்நாடு மீண்டும் முன்னோடி மாநிலமாக நின்றிடும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

அலுவல் மொழி தொடர்பான பாராளுமன்றக் குழுத் தலைவர் அவர்களால் கடந்த 09.09.2022 அன்று மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களிடம் அளிக்கப்பட்டுள்ள அறிக்கையில், தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளுக்கும், அம்மொழிகளைப் பேசும் மக்களின் நலனுக்கு எதிராகவும் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என ஒன்றிய அரசினை இந்தப் பேரவை வலியுறுத்துகிறது.”

பேரவையில் இருமொழிக் கொள்கையை நிறைவேற்றிய பேரறிஞர் அண்ணா அவர்களின் அதே உணர்வுடன், இந்தத் தீர்மானத்தைத் தற்போது முன்மொழிந்துள்ளேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தத் தீர்மானத்தை ஒருமனதாக நிறைவேற்றித் தருமாறு கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
இந்தித் திணிப்புக்கு எதிராக அரசினர்
தனித் தீர்மானம் கொண்டுவந்து
ஆற்றிய உரை – 18.10.2022

அதிகாரமும், சட்டமும் மக்களைக் காக்கவே என்பதை அனைவரும் உணரவேண்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'18.10.2022ஆம் நாளன்று பேரவைமுன் வைக்கப்பெற்ற, 22.05.2018ஆம் நாள் தூத்துக்குடியில் நடந்தத் துப்பாக்கிச் சூட்டின் விளைவாக இறப்பு, காயங்கள் ஏற்பட்டதற்கான காரணங்கள், சூழ்நிலைகள் குறித்தும், சட்டம் மற்றும் ஒழுங்கு சீர்குலைவுகள் காரணமாக பொதுச் சொத்துக்கள், தனியார் சொத்துக்கள் ஆகியவற்றிற்கு ஏற்படுத்தப்பட்ட சேதம் உள்ளிட்டப் பிந்தைய நிகழ்வுகள் குறித்தும் விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்களின் விசாரணை ஆணைய அறிக்கையில் அடங்கிய பரிந்துரைகள் மீதும், 17.10.2022ஆம் நாளிட்டப் பொது (மி.க.)-த் துறையின் SSII/320-16/2022ஆம் எண் அரசாணையில் குறிப்பிடப்பெற்றவாறு அரசு எடுத்த நடவடிக்கைக் குறித்தும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்'

என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை கமிஷன் மூலமாக நீதி விசாரணை நடைபெற்று, அதன் அறிக்கை என்னிடத்திலே கொடுக்கப்பட்டு, நேற்றைய தினம் அந்த அறிக்கை சட்டமன்றத்திலே வைக்கப்பட்டு, அதையொட்டி விவாதத்தை நடத்துவதற்காக அரசினர் தீர்மானத்தினை நான் முன்மொழிந்தேன்.

அதைத் தொடர்ந்து இங்கே இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் திரு. தி. வேல்முருகன், திரு. ரா. ஈஸ்வரன், திரு. ஜவாஹிருல்லா, திரு. சதன் திருமலைக்குமார், திரு. இராமச்சந்திரன், திரு. சின்னத்துரை, திரு. சிந்தனைச்செல்வன், திரு. கோ.க. மணி, திரு. செல்வப்பெருந்தகை ஆகியோர் தங்களுடைய கருத்துக்களையெல்லாம் இங்கே எடுத்து உரையாற்றி இருக்கிறார்கள். எனவே, நான் இதுகுறித்து அதிகம் விளக்கம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நீங்கள் இங்கே வழங்கியிருக்கக்கூடிய கருத்துகள் மட்டுமல்லாமல், நேற்றையதினம் தாக்கல் செய்யப்பட்டிருக்கக்கூடிய அந்த விசாரணை ஆணையத்தின் அறிக்கையிலே மிக விளக்கமாக எல்லாச் செய்திகளும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. அதுகுறித்து இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறது? அதை எப்படி எடுக்க வேண்டும் என்பதை அழுத்தந்திருத்தமாக நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தூத்துக்குடியில் நடந்த துப்பாக்கிச் சூடானது தமிழ்நாட்டு வரலாற்றில் மிகப்பெரிய கரும்புள்ளி! அதை யாரும் மறுக்கவோ,

மறைக்கவோ முடியாது. துயரமும், கொடூரமுமான அந்தச் சம்பவத்தை இன்று நினைத்தாலும் உடல் நடுங்குகிறது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நான், உடனடியாக தூத்துக்குடிக்குச் சென்றேன். துப்பாக்கிச் சூட்டின் சத்தமும், மக்களின் மரண ஓலமும் ஒலித்துக் கொண்டிருந்த காட்சியானது இன்றும் என் மனதை வாட்டிக் கொண்டு இருக்கிறது. இத்தகைய உணர்வோடுதான் இங்கே உரையாற்றியிருக்கக்கூடிய அனைத்துக் கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் தங்களுடைய கருத்துகளை இந்த மன்றத்திலே பதிவு செய்திருக்கிறீர்கள்.

ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிரான போராட்டம் அமைதி வழியில் மிகத் தொடர்ச்சியாக பல்லாண்டு காலமாக தூத்துக்குடி மண்ணில் நடந்த போராட்டமாகும். இதை மேலும் வலியுறுத்தக்கூடிய வகையில் கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் 22.05.2018 அன்று மாபெரும் ஊர்வலத்தை அந்தப் பகுதி மக்கள் நடத்தினார்கள். மாவட்ட ஆட்சியரிடத்திலே மனு கொடுக்கவே அவர்கள் இந்த ஊர்வலத்துக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். இந்தப் பிரச்னையை அன்றைய அ.தி.மு.க. அரசு சரியாகக் கையாளவில்லை. ஊர்வலமாக வரக்கூடிய மக்களை அழைத்துப் பேசவில்லை. அவர்களிடம் மனுக்களைப் பெற்று கருத்துகளைக் கேட்டறிய அன்றைக்கு அந்த அரசு தயாராக இல்லை.

இதுமட்டுமல்லாமல், ஊர்வலமாக வந்த மக்கள்மீது அதிகாரத்தை அத்துமீறிப் பயன்படுத்தி கலைப்பதற்கு திட்டமிட்டார்கள். துப்பாக்கிச் சூடும் திட்டமிட்டு நடத்தப்பட்டது என்பதை நீதியரசர் அருணா ஜெகதீசன்

ஆணையம் உறுதி செய்து அறிக்கை கொடுத்திருக்கிறது. அந்தச் சம்பவத்திலே 11 ஆண்கள், 2 பெண்கள் என 13 பேர் துள்ளத்துடிக்க பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். 40 பேர் பலத்த காயங்களை அடைந்தார்கள். 64 பேர் சிறிய அளவிலான காயங்களை அடைந்தார்கள்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் அன்றைய முதலமைச்சர் திரு. பழனிசாமியின் எதேச்சதிகார நினைப்புக்கு எடுத்துக்காட்டாக இந்தச் சம்பவம் அமைந்துள்ளது. அதாவது, அ.தி.மு.க. ஆட்சியின் ஆணவத்துக்கு தூத்துக்குடியில் இத்தனை உயிர்கள் பலியானது. கேட்பவர் அனைவருக்கும் இரத்தம் உறைய வைக்கக்கூடிய இந்தச் சம்பவம் குறித்து, அன்றைய முதலமைச்சர் பழனிசாமியிடம் ஊடகங்கள் கேட்டபோது, 'இப்படி ஒரு சம்பவம் நடந்ததே எனக்குத் தெரியாது; உங்களைப் போல நானும் டி.வி. பார்த்துத்தான் தெரிஞ்சுக்கிட்டேன்' என்று பேட்டி அளித்ததை யாரும் மறந்திருக்க முடியாது.

'உள்துறையை கையில் வைத்திருந்த இந்த நாட்டினுடைய முதலமைச்சர் பேசும் பேச்சா இது?' என்று நாடே கோபத்தால் கொந்தளித்தது. அந்தளவுக்கு மிகப் பெரிய, உண்மைக்கு மாறான தகவலை தற்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடியவர் அன்றைக்குப் பேசியிருக்கிறார். இந்தக் கருத்தைச் சொன்னார். கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். 'கடப்பாறையை முழுங்கிட்டு கசாயம் குடிச்சிடுவான்' என்று. அந்தளவுக்கு மிகப் பெரிய, உண்மைக்கு மாறான தகவலை அவர் அன்றையதினம் சொல்லியிருக்கிறார். அப்படி அவர் சொன்னது மிகப்

பெரிய தவறு என்று, அவர்கள் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட ஆணையமே சொல்லி விட்டது. அந்த ஆணையம் நம்மால் அமைக்கப்பட்டது அல்ல. அவர்கள் அமைத்த ஆணையம்தான். ஒருவேளை அதை நாம் அமைத்திருந்தால், இதில் அரசியல் இருக்கிறது என்றுகூட சொல்லியிருக்கலாம். ஆனால், அவர்கள் அமைத்த ஆணையமே சொல்லியிருக்கிறது. நேற்றைக்கு தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அறிக்கைகளுமே, அவர்கள் அமைத்த ஆணையங்களால் அளிக்கப்பட்ட அறிக்கைகளாகும். நாம் வந்து எந்த ஆணையமும் இதற்காக அமைக்கவில்லை.

நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆணைய அறிக்கையில் பக்கம் 252இல் இது அம்பலம் ஆகி இருக்கிறது. "தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி அப்போதைய முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமி, 'அந்தச் சம்பவத்தை மற்றவர்களைப் போல ஊடகங்களில் வந்த செய்தி மூலம் அறிந்து கொண்டேன்' என்று பத்திரிக்கையாளர்களுக்கு பேட்டியும் அளித்திருக்கிறார். ஆனால் இந்த ஆணையத்திடம் மிக வலுவாக இருக்கும் ஆதாரம் என்னவென்றால், சாட்சியாக விசாரிக்கப்பட்ட அப்போதைய தலைமைச் செயலாளர் திருமதி கிரிஜா வைத்தியநாதன், அப்போதைய டி.ஜி.பி. திரு. ராஜேந்திரன், அப்போதைய உளவுத் துறை ஐ.ஜி. திரு. சத்தியமூர்த்தி ஆகியோர் தூத்துக்குடியில் நடக்கும் சம்பவங்களையும், அங்குள்ள நிலவரங்களையும் நிமிடத்துக்கு நிமிடம் அன்றைய முதலமைச்சராக இருந்த திரு. எடப்பாடி பழனிசாமியிடம் தெரிவித்து வந்ததாகக் கூறினார்கள். எனவே, ஊடகங்கள் மூலமாகத்தான் அந்தச் சம்பவம் பற்றி தெரிந்து கொண்டதாக அவர் கூறியது தவறான கருத்து

என்பது இந்த ஆணையத்தின் கருத்தாகும். இது ஆணையத்தின் அறிக்கையில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்ட ஆணையமே, இதனை உறுதிப்படுத்தி இருக்கிறது. கொடூரமான கொலைவெறித் தாக்குதல் தொடர்பாக நேரடி வர்ணனைகளை தனது அறையில் உட்கார்ந்து கேட்டுவிட்டு, வெளியில் வந்து 'எனக்கு எதுவும் தெரியாது' என்று சொன்னவர்தான் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த திரு. பழனிசாமி அவர்கள். அவரது துரோகங்களும், தவறுகளும் அவரது அரசியல் வாழ்க்கையை அறிந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். புதிதாக நாம் எதையும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இதனால் நான் இதற்கு மேல் எதையும் சொல்ல விரும்பவில்லை. இதற்கான தண்டனையின் தொடக்கத்தைத்தான் தேர்தல் தோல்வி மூலமாக அ.தி.மு.க.-வுக்கு தமிழ்நாட்டு மக்கள் வழங்கினார்கள்.

நீதியரசர் அருணா ஜெகதீசன் அவர்களின் இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளின் அடிப்படையில் நம்முடைய கழக அரசு பல நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதைப்பற்றி இங்கே பேசிய பல உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். கலவரத்தில் ஈடுபடாத நபர்கள் மீது பதிவுசெய்யப்பட்ட 38 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டன. போராட்டத்தின்போது காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்ட 93 நபர்களுக்கு, அந்த நபர்கள் மற்றும் அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் அனுபவித்த

மனவேதனைகளைக் கருத்தில்கொண்டு, 1 இலட்சம் ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டது.

இங்கேகூட பேசிய சட்டமன்ற உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி வழங்குவதைப் பற்றி அழுத்தத்தோடு சொன்னீர்கள். இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர்களின் கருத்துக்களின் அடிப்படையில், துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த 13 பேரின் குடும்பத்தினருக்கு, ஏற்கெனவே வழங்கிய நிதியோடு, மேலும், கூடுதலாக 5 இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல் துறையினரால் கைது செய்யப்பட்டு, பாளையங்கோட்டை மத்தியச் சிறையில் அடைக்கப்பட்டு, பின்னர் 30.05.2018 அன்று இறந்த திரு. பரத்ராஜ் என்பவரின் தாயாருக்கு ரூ.2 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது. திரும்பப் பெற தகுதியுள்ள 38 வழக்குகளில் தொடர்புடைய நபர்களின் உயர்கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்காக "தடையில்லாச் சான்றிதழ்" வழங்குவதற்கு நாம் ஆணையிட்டோம். இவையெல்லாம் நாம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு நடந்தவை என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது, நாம் ஆட்சிக்கு வந்தவுடன் 26.05.2021 அன்று நாம் உத்தரவிட்டு, அந்த ஆணைகளை வழங்கியிருக்கிறோம்.

தூத்துக்குடி சம்பவத்தில் பாதிக்கப்பட்ட 21 நபர்களுக்கு கடந்த ஆட்சியில் கண்துடைப்பாக சில பணிகள் வழங்கப்பட்டன. அவர்கள் தங்கள் படிப்பு, தகுதிக்கு ஏற்ற பணிகளைக் கேட்டார்கள். அதைப்

பற்றிக் கவலைப்படவே இல்லை, காதில் போட்டுக் கொள்ளவுமில்லை. ஆனால், தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடனே, அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப பணியிடங்கள் 18 நபர்களுக்கு கடந்த 21.05.2021 அன்று வழங்கப்பட்டன.

விசாரணை ஆணையம் தனது இறுதி அறிக்கையினை 18.05.2022 அன்று அரசிடம் அளித்தது. அந்த ஆணையத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்த கருத்துக்களை, அந்தப் பரிந்துரைகளை அரசு கவனமாக பரிசீலனை செய்தது; இன்னும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். கலவரம் ஏற்பட்டதற்கான காரணங்கள், கலவரத்தை கையாண்ட முறை, கலவரத்திற்குப் பிறகு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்த ஆணையத்தின் முடிவுகள் மற்றும் பரிந்துரைகள் அரசால் ஆய்வு செய்யப்பட்டன. இந்த விசாரணை அறிக்கை குறித்து 29.08.2022 அன்று அமைச்சரவைக் கூட்டத்தில் நாங்கள் விவாதித்தோம். அந்த அடிப்படையிலேதான் இந்த அவையில்கூட அந்த அறிக்கையை நாம் தாக்கல் செய்தோம்.

ஆணையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள, இச்சம்பவத்தில் தொடர்புடைய சில அலுவலர்கள்மீது துறைரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கான அந்தப் பணிகளைத் தொடங்கியிருக்கிறோம். அதனுடைய விவரத்தை இந்த அவைக்கு நான் இப்போது தெரிவிக்க விரும்புகிறேன்.

தூத்துக்குடி மாவட்டத்தின் அப்போதைய ஆட்சியர்மீது, துறைரீதியான நடவடிக்கை பொதுத் துறை மூலமாக எடுக்கப்பட்டு வருகிறது. அதேபோல், வருவாய் மற்றும்

பேரிடர் மேலாண்மைத் துறையினை சேர்ந்த மூன்று வருவாய் துறை அதிகாரிகள்மீது தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு & மேல்முறையீடு) விதிகளின் பிரிவு 17(B)-ன்கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை துவங்கப்பட்டுள்ளது. உள்துறை மூலமாக, அப்போதைய தென் மண்டல காவல் துறைத் தலைவர், திருநெல்வேலி சரக காவல் துறை துணைத் தலைவர், தூத்துக்குடி மாவட்ட காவல் கண்காணிப்பாளர், ஒரு காவல் துணைக் காண்காணிப்பாளர், மூன்று ஆய்வாளர்கள், ஒரு சார்-ஆய்வாளர் மற்றும் 7 காவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளன. இதில் நேரடியாக ஈடுபட்ட ஒரு ஆய்வாளர் உட்பட 4 காவலர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் இந்த அவையினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இந்த ஒழுங்கு நடவடிக்கைகள் அனைத்திலும் விரைவாக விசாரணை மேற்கொள்ளப்பட்டு முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்பதையும் இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு ஆட்சி நிர்வாகம் இரக்கமற்று எப்படி நடக்கக் கூடாது என்பதற்கு உதாரணம்தான், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நடந்த தூத்துக்குடி கொடூரம் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது. நிர்வாகத்தை நடத்தக்கூடிய அதிகாரிகளாக இருந்தாலும், சட்டம்-ஒழுங்கைக் காக்கக்கூடிய காவலர்களாக இருந்தாலும், மனிதாபிமானம் கொண்டவர்களாக, மக்கள் சேவகர்களாக மட்டுமே நடந்து கொள்ள வேண்டுமே தவிர, வேறு மாதிரியாக நடந்து கொள்வது மனிதத் தன்மைக்கே விரோதமானது என்பதை

உணர வேண்டும். அதிகாரமும், சட்டமும் மக்களைக் காக்கவே என்பதை அனைவரும் உணர வேண்டும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இது ஏதோ இப்பொழுது சொல்கிற உறுதிமொழி அல்ல; ஆட்சிக்கு வருவதற்கு முன்பே தேர்தல் நேரத்தில் சொன்ன உறுதிமொழிதான். யார், யார் குற்றவாளிகளோ, அவர்களெல்லாம் நிச்சயமாக கூண்டில் ஏற்றப்படுவார்கள், தண்டிக்கப்படுவார்கள் என்பதை மாத்திரம் தெரிவித்து, என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பாக
எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அரசினர் தீர்மானத்தினை
முன்மொழிந்தும், பல்வேறு உறுப்பினர்கள்
உரையாற்றியதற்குப் பிறகு பதிலளித்தும் ஆற்றிய உரை – 19.10.2022

இந்த ஆட்சி அரசியல், கட்சி பார்க்காமல் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆட்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விருகம்பாக்கத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றி எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே கேள்வி எழுப்பியிருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அவர்கள் குற்றச்சாட்டைத் தெரிவித்துவிட்டு ஓடி, ஒளியாமல் இருந்து என்னுடைய பதிலைக் கேட்டிருக்க வேண்டும். அதுதான், உள்ளபடியே நியாயமாக இருக்கும். அதனால்தான் நான் சொன்னேன்; நான் ஓடி, ஒளிய மாட்டேன், பதில் சொல்வதற்குத் தயாராக இருக்கின்றேன் என்று சொன்னேன்.

31.12.2022 அன்று இரவு 10-45 மணிக்கு பெண் காவலர் R-5 விருகம்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து

உடனே எப்.ஐ.ஆர். போடப்பட்டிருக்கிறது. இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 353, 354 மற்றும் தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமைச் சட்டப் பிரிவு 4-ன்கீழும் பதிவு செய்யப்பட்ட அந்த வழக்கு புலன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. சம்பவ இடத்தில் இருந்த காவலர்கள் மற்றும் சாட்சிகளைக் காவல் ஆய்வாளர் விசாரணை செய்து, சிசிடிவி காட்சிகளும் ஆய்வு செய்யப்பட்டன.

இதனைத் தொடர்ந்து அச்சம்பவத்தில் ஈடுபட்ட பிரவின்குமார், ஏகாம்பரம் ஆகியோர் 03.01.2023 இரவு 10-00 மணிக்கு கைது செய்யப்பட்டு, அடுத்த நாள் 04.01.2023 அன்று காலையே நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். புகார் கொடுத்த அன்றே எப்.ஐ.ஆர் பதிவு செய்து, புலன் விசாரணை நடத்தி, 72 மணி நேரத்தில் அவர்களைக் கைது செய்ததுபோல், எந்த வழக்கிலாவது அ.தி.மு.க. ஆட்சியில் நடவடிக்கை எடுத்ததுண்டா என்ற அந்தக் கேள்வியைத்தான் நான் கேட்கிறேன்.

எஸ்.பி. அந்தஸ்த்தில் இருந்த பெண் போலீஸ் அதிகாரிகள் இருவரை, இதுமாதிரி புகாரில் அலைகழித்த ஆட்சிதானே அ.தி.மு.க. ஆட்சி.

இந்த அரசைப் பொறுத்தவரையில், பெண்களுக்கு எதிராக, பெண் காவலர்களுக்கு எதிராக இதுபோன்ற குற்றங்களில் ஈடுபடுவோர் யாராக இருந்தாலும் கடுமையாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தனது உரையின் தொடக்கத்தில், ஒட்டுமொத்தமாக, தினந்தோறும் வழிப்பறி, கொலை, கொள்ளை நடந்து கொண்டிருக்கிறதென்று சொன்னார்.

❖ இராமநாதபுரம், பரமக்குடி இம்மானுவேல் சேகரன் நினைவு விழாவில் துப்பாக்கி சூடு நடத்தியதில் 5 பேர் மரணம், யாருடைய ஆட்சியில்?

❖ தேவர் ஜெயந்தி விழாவில் மதுரையில் வெடிகுண்டு வீச்சு - 4 பேர் மரணம்.

❖ சிவகங்கை, திருப்பாச்சேத்தி உதவி ஆய்வாளர் ஆன்வின் சுதன் படுகொலை 2012இல் செய்யப்பட்டது.

❖ கன்னியாகுமரி உதவி ஆய்வாளர் வில்சன் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டது...

❖ தூத்துக்குடி ஸ்டெர்லைட் துப்பாக்கி சூட்டில் 13 அப்பாவிகள் மரணம், யாருடைய ஆட்சியில், அ.தி.மு.க. ஆட்சியில்தானே?

❖ கூடங்குளத்தில் போராட்டம் நடத்திய மக்கள் மீது காவல்துறை தடியடி நடத்தியது, பொதுமக்கள் ஐ.ஜியை தரையில் இழுத்துச் சென்றது, அவரது கைத்துப்பாக்கி காணாமல் போனது.

❖ அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சி சம்பவம் ஒன்று போதாதா?

❖ வன்னியர் சங்க மாநாட்டைத் தொடர்ந்து எழுந்த சட்டம்-ஒழுங்குப் பிரச்சனையில் நூறு வாகனங்கள் எரிப்பு, ஆயிரம் வாகனங்கள் உடைத்ததும் அ.தி.மு.க. ஆட்சியில்தான்

❖ ஜல்லிக்கட்டு அனுமதிக்கு அமைதிப் போராட்டம் நடத்தியவர்கள் மீது தடியடி நடத்தி, பொதுமக்கள் வாகனங்களை காவல் துறையினரே தீயிட்டு கொளுத்தியதும் அ.தி.மு.க ஆட்சியில்தான்.

❖ சாத்தான்குளத்தில் லாக்கப் வன்முறை, காவல் நிலையத்தில் தந்தை மகன் அடித்துக் கொலை செய்யப்பட்ட விவகாரம்.

இதுபோன்றச் சம்பவங்கள் எல்லாம் இந்த ஆட்சியில் இல்லை, அ.தி.மு.க ஆட்சியில்தான்.

இந்த ஆட்சியைப் பொறுத்தவரை, யாராக இருந்தாலும், அரசியல் பார்க்காமல், கட்சிப் பார்க்காமல் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கக்கூடிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி. எனவே, எதிர்க்கட்சித் தலைவர் சொல்லிய, அவருடைய குற்றச்சாட்டுக்கு இதையே பதிலாகச் சொல்லி நான் அமைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்
விருகம்பாக்கம் சம்பவம் குறித்து எழுப்பிய கேள்விக்கு
ஆற்றிய உரை– 11.01.2023

வேங்கைவயல் கிராமத்தில் நடைபெற்றக் கீழ்த்தரமான செயல்களில் ஈடுபட்டோர் மீது மிகக் கடுமையான நடவடிக்கை இரும்புக்கரம்கொண்டு எடுக்கப்படும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவுகளை போட்டு அசுத்தம் செய்தது தொடர்பாக இங்கே பல்வேறு கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்தி, இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து உரிய நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டுமென்று ஒட்டுமொத்தமாக உணர்வுகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இது தொடர்பாக, அரசின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு உள்ள, தொடர்ந்து மேற்கொள்ளப்படவிருக்கக்கூடிய

நடவடிக்கைகள் குறித்து இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

“எல்லோருக்கும் எல்லாம்” என்பதை அடிப்படையாகக் கொண்டதுதான் சமூகநீதி. அனைவருக்கும் சமமான பொருளாதார, அரசியல், சமூக உரிமைகளும், வாய்ப்புகளும் அமைய வேண்டும் என்ற எண்ணம்தான் சமூகநீதி. அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் என்பதை உறுதி செய்வதன் மூலமாகத்தான் அத்தகைய சமூகநீதியை நாம் வழங்கிட முடியும். அந்த வகையில், தமிழ்நாட்டில் இன்றைக்கு அனைத்துத் துறைகளிலும் சமூகநீதி என்னும் அசைக்க முடியாத தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

சாதிக் கொடுமையை, சான்றோர்களேத் தவறு என்று உணர்ந்துக் கொள்ளச் செய்து, தன் ஓங்கி உலகளந்த கல்வியால், சட்டமும், பொருளாதாரமும் கற்றுத் தேர்ந்தவர் மாமேதை டாக்டர் அம்பேத்கர் அவர்கள். அத்தகைய மாமேதைப் பிறந்த இந்த மண்ணில், சாதியப் பாகுபாடு சார்ந்த தீண்டாமை இன்னும் அங்கொன்றும், இங்கொன்றுமாக இருப்பதை, புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வு வெளிப்படுத்தியிருக்கிறது. இந்த நிகழ்வு உண்மையிலேயே வருத்தத்திற்குரியது; கண்டனத்திற்குரியது; கண்டிக்கத்தக்கது.

வேங்கைவயல் கிராமத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனிதக் கழிவு கலக்கப்பட்டுள்ளது தொடர்பான தகவல் எனக்குக் கிடைத்தவுடனே,

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய சிகிச்சை அளித்திடவும், பாதுகாப்பான குடிநீர் தங்குதடையின்றி கிடைப்பதை உறுதி செய்திடவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள நான் அறிவுறுத்தியதன் அடிப்படையில், கடந்த 27.12.2022 அன்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் கண்காணிப்பாளர் மற்றும் உயர் அலுவலர்கள் அக்குடியிருப்புப் பகுதிக்கு நேரடியாகச் சென்று கள ஆய்வு மேற்கொண்டார்கள். அவர்கள் உரிய நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட துறைகள் வாயிலாக மேற்கொண்டு வருகின்றனர் என்பதை இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

வேங்கைவயல் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு குழந்தைகள் உடல்நலம் பாதிக்கப்பட்டு, புதுக்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வந்தனர். மேலும், அந்த கிராமத்திலிருந்து இதுபோன்ற நோய்த் தொற்றுடைய நோயாளிகள் வருகை அதிகரித்த நிலையில், அவர்கள் பயன்படுத்தி வரும் குடிநீரைப் பரிசோதனை செய்திட மருத்துவர்கள் அறிவுறுத்தி இருந்தனர். அதனடிப்படையில், வேங்கைவயல் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை ஆய்வு செய்தபோது, மனிதக் கழிவுகள் கலந்துள்ளது தெரிய வந்தது. அதனைத் தொடர்ந்து, மருத்துவர்கள் குழு வேங்கைவயல் கிராமத்திற்கு சென்று 26.12.2022 முதல் இன்றுவரையில் அந்தக் கிராமத்திலேயே முகாமிட்டு நோய்த் தடுப்புப் பணிகளையும், மருத்துவப் பரிசோதனைகளையும் மேற்கொண்டு வருகிறார்கள். தற்போது அந்தக் கிராமத்தில் பொது சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்காக வட்டார மருத்துவ அலுவலர்

தலைமையில், ஒரு மருத்துவ அலுவலர், 3 செவிலியர், 2 மருத்துவமனைப் பணியாளர்கள், 3 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் 10 பணியாளர்கள் அடங்கிய குழுவினர் பணியாற்றி வருகிறார்கள்.

அதோடு மட்டுமல்லாமல், உள்ளாட்சி அமைப்பின் உதவியோடு, அந்த கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, சிறுமின்விசைத் தொட்டி ஆகியவை சுத்தம் செய்யப்பட்டதோடு, அனைத்து குடிநீர் வழங்கு குழாய்களும் கிருமி நீக்கம் செய்யப்பட்டு, அதன்மூலமாக நீரேற்றப்பட்டு, நீர்மாதிரி சேகரிக்கப்பட்டு, அறந்தாங்கி பொது சுகாதார ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டதில், தற்போது குடிநீர் சுத்தமாக உள்ளது என அறிக்கை வரப்பெற்றுள்ளது.

இந்தச் சூழ்நிலையில், அந்த கிராமத்திலுள்ள 32 வீடுகளுக்கும் 2 இலட்சம் ரூபாய் செலவில் முற்றிலும் புதிய இணைப்புக் குழாய்கள் மற்றும் குடிநீர்க் குழாய்கள் அமைக்கப்பட்டு, 05.01.2023 முதல் சீரான குடிநீர் விநியோகம் நடைபெற்று வருகிறது. அதோடு, அங்கு ஒரு புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி 7 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்திடவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், அங்கு தற்போது தினசரி டேங்கர் லாரி மூலம் சுகாதார ஆய்வாளர் மேற்பார்வையில் காலையும், மாலையும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இச்சம்பவம் தொடர்பான புகாரின் அடிப்படையில், வழக்குப் பதிவு செய்யப்பட்டு, புதுக்கோட்டை மாவட்டக்

காவல் கண்காணிப்பாளர் அவர்கள் மேற்பார்வையில் ஒரு சிறப்புப் புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில், இதுவரையில் 70 நபர்களிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்சம்பவத்தில் ஈடுபட்ட உண்மைக் குற்றவாளிகளைக் கைது செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

நாம் எவ்வளவுதான் பொருளாதாரத்திலும், அறிவியல் தொழில்நுட்பத்திலும் முன்னோக்கிச் சென்று கொண்டிருந்தாலும், இதுபோன்ற நிகழ்வுகள் சமூக வளர்ச்சியில், ஒற்றுமையில் அவ்வப்போது தடைக்கற்களாக அமைந்து விடுகின்றன. சமூகத்தில் உள்ள இன்னும் சில பகுதிகளில் காணப்படும் சாதி மத வேறுபாடுகளே இதற்குக் காரணம் என்பதை உணர்ந்து, 'மதம் உன்னை மிருகமாக்கும் – சாதி உன்னை சாக்கடையாக்கும்' என்ற பகுத்தறிவுச் சுடர் தந்தை பெரியாரின் வார்த்தைகளை மனதிலே கொண்டு, நாம் அனைவரும் சகோதரத்துவத்துடன் வாழவேண்டும்.

ஆனால், சாதி, மதங்களைத் தூக்கிப் பிடித்து, பிரிவினையை ஏற்படுத்தி வரும் சில சமூக விரோதிகள் இன்னும் இந்த நாட்டிலே இருக்கின்றார்கள் என்பதையும் நாம் நினைவிலேக் கொள்ளவேண்டும். இவர்களை எல்லாம் தாண்டி, சாதி, இன, மத வேறுபாடுகள் அனைத்தையும் களைந்து, நாம் அனைவரும் சமஉரிமை கொண்ட மனிதர்கள் என்ற உணர்வோடும், மனிதநேயத்தோடும்

விளங்கிட வேண்டும். இதுபோன்ற கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுவோர் மீது மிகக் கடுமையான நடவடிக்கை இரும்புக் கரம் கொண்டு எடுக்கப்படும் என்பதையும் இந்த தருணத்தில் இங்கே கவன ஈர்ப்பு அறிவிப்பு கொடுத்த அத்தனை பேருக்கும் தெரிவித்து, இந்த அளவில் எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் மனித கழிவுகளை போட்டு அசுத்தம் செய்துள்ளது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த சிறப்பு கவன ஈர்ப்பில் ஆற்றிய உரை – 11.01.2023

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றிட ஒன்றிய அரசு உடனடியாக முன்வரவேண்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

150 ஆண்டு காலக் கனவுத் திட்டமான சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்ற தீர்மானத்தை இம்மாமன்றத்தில் முன்மொழிவதை வரலாற்றுக் கடமை என்று நான் கருதுகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவுத் திட்டம் அது. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் நிறைவேற்றப் பாடுபட்ட திட்டம் அது. பாக் நீரிணையையும், மன்னார் வளைகுடாவையும் இணைக்கும் ஆடம்ஸ் பாலத்தின் குறுக்கே வெட்டப்பட வேண்டிய கால்வாயின் பெயர்தான் சேதுசமுத்திரத் திட்டம்.

இந்தியாவினுடைய முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தலைமையில் 1963ஆம் ஆண்டு நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம்பெற்ற திட்டம் இது. 1967ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பேரறிஞர் அண்ணா அவர்கள், 'தம்பிக்கு' எழுதிய மடலில் இத்திட்டதை நிறைவேற்றியே ஆகவேண்டும் என்பதை வலியுறுத்தினார்கள். 'சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றினால், வர்த்தகம் பெருகும். இலங்கையைச் சுற்றிக் கொண்டு கப்பல் போக வேண்டிய நீளம் குறையும். இங்கேயுள்ள மீனவர்களின் வாழ்வு செழிக்கும். தமிழ்நாடு எல்லா வளமும் கொண்ட நாடாக மாறும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் எழுதினார்கள். இத்திட்டத்தை நிறைவேற்றித் தருவதற்கு எழுச்சி நாள் கொண்டாடுவது என்றும் அறிவித்தார்கள்.

1972ஆம் ஆண்டு தூத்துக்குடி துறைமுக நுழைவு வாயிலில் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனாரின் சிலையைத் திறந்து வைக்க பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் வந்தபோது, அன்றைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் இதனை வலியுறுத்தினார். தூத்துக்குடி துறைமுகத்தின் பயன் மேலும் வளர வேண்டுமானால், சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் மிகமிக அவசியம் என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வலியுறுத்திப் பேசினார்கள்.

1998ஆம் ஆண்டு அன்றைய பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் அவர்கள், இத்திட்டத்துக்கான திட்டப் பணிகளுக்காக நிதியினை ஒதுக்கினார். பா.ஜ.க. ஆட்சியில்தான் சேதுசமுத்திரத் திட்டத்துக்கான பாதை எது எனத் தீர்மானிக்கப்பட்டது.

2004ஆம் ஆண்டு ஒன்றிய அளவில் ஆட்சி மாறி, காங்கிரஸ் தலைமையில் தி.மு.க.வை உள்ளடக்கிய

கூட்டணி ஆட்சி மலர்ந்த பிறகு 2,427 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டு, திட்டப் பணிகள் பாதியளவு முடிந்த நிலையில், அரசியல் காரணங்களுக்காக பா.ஜ.க. சார்பில் இத்திட்டத்துக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது என்பதும், இத்திட்டத்தை ஆரம்பம் முதல் ஆதரித்து வந்த அ.தி.மு.க. பொதுச் செயலாளர் அம்மையார் அவர்கள் திடீரென நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டு இத்திட்டத்துக்கு எதிராக வழக்குப் போட்டார் என்பதையும் இம்மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

இந்த அரசியல் முட்டுக்கட்டை போடும் செயல் மட்டும் நடக்காமல் இருந்தால் இத்திட்டம் தொடங்கப்பட்டு பத்தாண்டு காலத்தில் ஏராளமான பயன் கிடைத்திருக்கும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சுட்டிக் காட்டியதைப் போல, நாட்டினுடைய அந்நியச் செலாவணி வருவாய் அதிகரிக்கும்; தமிழ்நாட்டிலே தொழில் வணிகம் பெருகும்; கப்பல்களின் பயண தூரம், நேரம் பெருமளவு குறையும்; தமிழ்நாடு மற்றும் அண்டை மாநில துறைமுகங்களில் சரக்குகளைக் கையாளும் திறன் அதிகரிக்கும்; சிறு சிறு துறைமுகங்களை உருவாக்க முடியும்; சேதுக் கால்வாய் திட்டத்தின்கீழ், மீன்பிடித் துறைமுகங்கள் மேம்படுத்தப்படுவதால், கடல்சார் பொருள் வர்த்தகம் பெருகி, அதன் காரணமாக மீனவர்களுடைய பொருளாதாரம், வாழ்க்கைத் தரம் உயரும்.

மீனவர்களுடைய பாதுகாப்பைக் கணக்கில் கொண்டுதான் இந்தத் திட்டத்தினுடைய காரியங்கள் நடைபெறுகின்றன. மன்னார் வளைகுடாவில் இருந்து பாக் கடல் சென்று வர மீனவர்களுக்கு இந்தக் கால்வாய் வசதி அளிக்கும். இலங்கை உள்ளிட்ட வேறு நாடுகளின் துறைமுகங்களில் இந்திய சரக்குகள் பரிமாற்றம் செய்வது தடுக்கப்படும். நாட்டின் கடலோரப் பாதுகாப்பு வலுப்படுத்தப்படும். இத்திட்டத்தினால் மிக முக்கியமாக,

ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு தொடர்ந்து கிடைக்கும். இவை எல்லாம்தான் அப்போது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் சுட்டிக்காட்டியவை. இவை அனைத்தும் நடந்திருக்கும். நடக்காமல் போனதற்கான அரசியல் காரணங்களை நான் விரிவாகப் பேச விரும்பவில்லை.

தமிழ்நாட்டு மக்களின் நீண்டகால கனவு திட்டமான சேது சமுத்திரத் திட்டம் தொடர்புடைய வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடந்து வருகிறது. சேது சமுத்திரத் திட்டத்தை மாற்றுப்பாதையில் செயல்படுத்துவோம் என்று ஒன்றிய பா.ஜ.க. அரசு சொல்லி இருக்கிறது. ஆனால் ''ராமேஸ்வரம் கடற்பகுதியில் இருந்தது எந்த மாதிரி கட்டுமானம் என்பதை கூறுவது கடினம்'' என்று ஒன்றிய அமைச்சர் நாடாளுமன்றத்தில் சொல்லி இருக்கிறார். இத்தகைய நிலைப்பாட்டுக்கு பா.ஜ.க. அரசு வந்துள்ள நிலையில் சேது சமுத்திரத் திட்டத்தைப் போராடியும் வாதாடியும் செயல்படுத்த வைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை இப்பேரவையின் சார்பில் நிறைவேற்றித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்!

சேது சமுத்திரம் திட்டம் தொடர்பானத் தீர்மானத்தை நான் இப்பொழுது முன்மொழிகிறேன்.

தீர்மானம்

''தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும், இந்திய நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் வலுப்பெறச் செய்வதற்கு மிக இன்றியமையாத திட்டமாக சேது சமுத்திரத் திட்டம் விளங்கி வருகின்றது.

1860ஆம் ஆண்டு 50 இலட்சம் ரூபாயில் Commander Taylor என்பவரால் உருவாக்கப்பட்ட மகத்தான திட்டம் இது.

அதன்பிறகு 1955இல் தமிழ்நாட்டின் சிறந்த நிபுணர் டாக்டர் ஏ. இராமசாமி முதலியார் குழு, 1963இல் நடைபெற்ற ஒன்றிய அமைச்சரவைக் கூட்டம், 1964,இல் அமைக்கப்பட்ட டாக்டர் நாகேந்திரசிங், ஐ.சி.எஸ் தலைமையிலான உயர்நிலைக் குழு - ஆகிய பொறியியல் வல்லுநர்களால் பல்வேறு ஆண்டு காலம் ஆராய்ந்து வடிவமைக்கப்பட்டதுதான் சேது சமுத்திரத் திட்டமாகும். இதன் வழித்தடங்கள் ஆய்வு செய்யப்பட்டு, சுற்றுச்சூழல் பாதிக்கப்படாத வகையில் பணிகளை மேற்கொள்ள திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியின்போது பிரதமராக இருந்த மாண்புமிகு அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் "Feasibility Study"-க்கு அனுமதியளித்தார்கள். அப்போதுதான் சேதுசமுத்திரத் திட்டத்தின் வழித்தடம் எது என்பதும் இறுதி செய்யப்பட்டது. பின்னர் ஒன்றியத்தில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு பொறுப்பேற்றது.

திராவிட முன்னேற்றக் கழகம் பங்கேற்றிருந்த ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் பிரதமரான டாக்டர் மன்மோகன் சிங் அவர்களால் 2004ஆம் ஆண்டு 2,427 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் அனுமதிக்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவராக இருந்த அன்னை சோனியா காந்தி அவர்களும் முன்னிலை வகிக்க இந்தத் திட்டத்தை பிரதமர் டாக்டர் மன்மோகன்சிங் அவர்கள் 02.07.2005 அன்று துவக்கி வைத்தார்கள்.

திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை தலைநிமிர வைக்கும் இத்திட்டத்துக்கு, குறிப்பாக தென் மாவட்டங்களைச் செழிக்க வைக்கக்கூடிய இந்தத் திட்டத்துக்கு, தமிழ்நாட்டு இளைஞர்களின் வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய இந்த சேது சமுத்திரத் திட்டத்துக்கு

முட்டுக்கட்டை போடப்பட்டது. எந்தக் காரணத்தைக் கூறி முட்டுக்கட்டை போடப்பட்டதோ, அதையே நிராகரிக்கக்கூடிய வகையிலே, தற்போது "இராமேஸ்வரம் கடற்பகுதியில் இருந்தது எந்த மாதிரி கட்டுமானம் என்பதைக் கூறுவது கடினம்" என்று ஒன்றிய அமைச்சர் மாண்புமிகு ஜிதேந்திர சிங் அவர்கள் நாடாளுமன்றத்தில் சொல்லி இருக்கிறார்.

இப்படி ஒன்றிய அரசு தெரிவித்துள்ள நிலையில், சேது சமுத்திரத் திட்டத்தை இனியும் நிறைவேற்றாமல் இருப்பது தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு - வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போடும் நிகழ்வாகவே கருதி, இந்த மன்றம் கவலை தெரிவிக்கிறது.

இனியும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவிடாமல் சில சக்திகள் முயல்வது நாட்டின் வளர்ச்சிக்கு எதிரானது என்று இந்த மாமன்றம் கருதுகிறது. எனவே, மேலும் தாமதமின்றி இந்த முக்கியமான சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றிட, ஒன்றிய அரசு உடனடியாக முன்வர வேண்டும் என்றும், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசு அனைத்து ஒத்துழைப்பையும் நல்கும் என்றும் இந்த மாமன்றம் ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.'

- இந்த தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று அனைவரையும் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
சேது சமுத்திரத் திட்டம் குறித்த அரசினர் தனித் தீர்மானத்தை
முன்மொழிந்து ஆற்றிய உரை – 12.01.2023

தலை நிமிர்ந்த தமிழ்நாடு
தனித்துவமான பொன்நாடு...

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடல்கண்டு மலைகண்டு பயன் கொண்ட தமிழ்நாடு வாழ்க!

களங்கண்டு கலை கண்டு கவின் கொண்ட தமிழ்நாடு வாழ்க!

உடல்கொண்டு உரங்கொண்டு உயர்வாண்ட தமிழ்நாடு வாழ்க!

உளமாண்டு உலகாண்டு புகழாண்ட தமிழ்நாடு வாழ்க! வாழ்கவே!

என்று தாய்த் தமிழ்நாட்டை வாழ்த்தி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், இந்த மாமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய ஆங்கிலப் புத்தாண்டு

வாழ்த்துக்களையும், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் வாழ்த்துக்களையும் கூறி, எனது உரையை நான் தொடங்குகிறேன்.

தாய்த் தமிழ்நாட்டைக் காக்க ஒப்படைத்துக் கொண்டு தூங்காமை, கல்வி, துணிவுடமை ஆகிய மூன்றையும் முறைமேற்கொண்டு முறைசெய்து வெல்லும் திராவிட மாடல் ஆட்சியானது நடைபெற்று வரும் வேளையில் மகிழ்ச்சியான மனநிலையில் இந்த மாமன்றத்தில் நான் கம்பீரமாக நிற்கிறேன்.

சமூகநீதி, சுயமரியாதை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி, சமத்துவம், பெண்ணுரிமை, மதநல்லிணக்கம், பல்லுயிர் ஓம்புதல் ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய திராவிட மாடல் ஆட்சியானது வீரத்துடனும், விவேகத்துடன் நடைபெற்று வருகிறது என்பதை தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியத் துணைக்கண்டமே இப்போது உணர்ந்துவிட்டது.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், சமத்துவப் போராளி அண்ணல் அம்பேத்கர், பெருந்தலைவர் காமராசர், அறிஞர்களுக்கெல்லாம் பேரறிஞர் அண்ணா, எங்களை எல்லாம் ஆளாக்கி அழகு பார்த்த நவீன தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர், இவர்களது கொள்கைகளையும், இலட்சியங்களையும் கொண்டு செலுத்துவதற்காக உருவாக்கப்பட்டதே இந்த திராவிட மாடல் ஆட்சி!

இருபது மாதங்களைக் கடந்திருக்கிறது கழக அரசு. அதற்குள் இமாலய சாதனைகளைச் செய்திருக்கிறோம். நாம் கடந்துள்ள காலம் குறைவுதான். ஆனால் ஆற்றியுள்ள பணிகள் அதிகம். அதேநேரத்தில், இந்த இருபது மாத காலம் போனதே தெரியவில்லை. இலக்கினை அடைவதை

நோக்கமாகக் கொண்டு நாம் செயல்பட்டோம். மக்களின் நலன் மட்டுமே நம்முடைய சிந்தையில் நின்றது; அதுவே மக்களின் மனதை வென்றது.

சமூகநீதி - சமத்துவம் - சுயமரியாதை - மொழிப்பற்று - இன உரிமை - மாநில சுயாட்சி ஆகிய தத்துவங்களின் அடித்தளத்தில் எழுப்பப்பட்ட பலம் வாய்ந்த இயக்கம்தான் திராவிட முன்னேற்றக் கழகம். அரசியல் களத்தில் எந்த நோக்கத்தை விதைத்ததோ, அதே நோக்கம் கொண்ட மக்களாட்சியை எந்தவித சமரசத்துக்கும் இடமின்றி கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக நாங்கள் நடத்தி வருகிறோம்.

தமிழ்நாட்டின் மேன்மைக்கும் வளர்ச்சிக்கும் செழிப்புக்கும் உயர்வுக்கும் வழிவகுக்கும் 'திராவிட மாடல்' கொள்கையை உருவாக்கி அதன் தடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி செயல்பட்டு வருகிறது. செயல்பட்டு வருகிறது என்பதை விட - திராவிட மாடல் ஆட்சியானது வெற்றி பெற்று வருகிறது என்பதுதான் சரியானதாகும்.

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற அடிப்படையிலேயே தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியானது அமைய வேண்டும் என்று நாம் திட்டமிட்டோம். தொழில் வளர்ச்சி - சமூக மாற்றம் - கல்வி மேம்பாடு ஆகிய அனைத்தும் ஒரே நேரத்தில் நடக்க வேண்டும்; அனைவருக்கும் பயனளிக்க வேண்டும் என்று விரும்பினோம். வளர்ச்சி என்பது பொருளாதாரவளர்ச்சியாகமட்டுமல்ல,சமூகவளர்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று திட்டமிட்டோம்.

பொருளாதாரம் - கல்வி - சமூகம் - சிந்தனை - செயல்பாடு ஆகிய ஐந்தும் ஒருசேர வளர வேண்டும். அதுதான் தந்தை பெரியாரும், பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர்

கலைஞரும் காணவிரும்பிய வளர்ச்சி. அது தான் திராவிட மாடல் வளர்ச்சி! அதுதான் தமிழ்நாடு காணும் தனித்துவமான வளர்ச்சி. அத்தகைய திராவிட மாடல் சிகரத்தை நோக்கிய பயணமானது ஒரு சரித்திரப் பயணமாக - ஏறுமுகத்தில் சென்று கொண்டிருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்.

கடந்த 9ஆம் தேதியன்று மாண்புமிகு ஆளுநர் அவர்கள் இந்த மாமன்றத்தில் 2023-2024ஆம் ஆண்டின் தொடக்கத்துக்கான தொடக்கவுரையை ஆற்றினார்கள். தமிழ்நாடு அரசின் பன்முகக் கூறுகளை விளக்கியும், தமிழ்நாடு அரசு எந்த வகையில் எல்லாம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதைப் பாராட்டியும், எதிர்காலத்தில் செயல்படுத்த இருக்கக்கூடிய முன்னேற்ற நடவடிக்கைகள் குறித்து சுருக்கமாக அறிவித்தும் தனது உரையை இந்த மாமன்றத்துக்கு ஆற்றினார்கள்.

அன்றையதினம் நிகழ்ந்தவற்றை மீண்டும் பேசி அரசியலாக்க நான் விரும்பவில்லை. அதே நேரத்தில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியின் மாண்பைக் காக்கவும், மக்கள் எங்களுக்கு வழங்கிய ஆட்சியின் வலிமையை உணர்த்தவும், நூற்றாண்டைக் கடந்த இந்த சட்டமன்றத்தின் விழுமியங்களைப் போற்றவும் நான் என்னுடைய சக்தியை மீறியும் செயல்படுவேன் என்பதை இந்த மாமன்றமும் என்னை இச்சட்டமன்றத்துக்கு தேர்ந்தெடுத்து அனுப்பிய தமிழ்ப் பெருமக்களும் நன்கு அறிவார்கள்.

ஆயிரம் கைகள் மறைத்து நின்றாலும் ஆதவன் மறைவதில்லை

ஆணைகள் இட்டே யார் தடுத்தாலும்

அலைகடல் ஓய்வதில்லை

செந்தமிழே நீ பகைவென்று முடிசூடிவா

மயிலாட வான்கோழி தடை செய்வதோ

மாங்குயில் பாட கோட்டான்கள் குறை சொல்வதோ?

முயர்கூட்டம் சிங்கத்தின் எதிர்நிற்பதோ

அதன் முறையற்ற செயலை நாம் வரவேற்பதோ ?

உயிருக்கு நிகர் இந்த நாடு அல்லவோ

அதன் உரிமைக்கு உரியவர்கள் நாம் அல்லவோ?

என்ற திராவிட இயக்கக் கவிஞர் முத்துக்கூத்தன் அவர்களின் கவிதையை நாம் என்றும் நினைவில் கொண்டு, பெருமித நடைபோடுவோம்.

தமிழ்காக்க, தமிழர் நலன் காக்க, தமிழ்நாட்டின் மானம் காக்க என்றும் உழைக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மகன் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்பதை மெய்ப்பித்துக் காட்டும் நாளாக, அன்றைய தினம் அமைந்திருந்ததே தவிர வேறல்ல.

ஆண்டின் முதல் கூட்டத் தொடரில் இம்மாமன்றத்துக்கு வருகை தந்து உரையாற்றிய மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு இந்த அரசின் சார்பிலான நன்றியை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளில் நாட்காட்டியில் நகரும் ஒவ்வொரு நாளும் தமிழ்நாட்டுக்கு நன்மை தரும் நாளாக உயர்ந்து வருகிறது என்பதை தமிழ்நாட்டு மக்கள் அறிவார்கள். அதற்காக அவர்கள் பாராட்டி வருகிறார்கள்.

‘கடிகாரம் ஓடும் முன் ஓடு’ என்று புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எழுதினார். அதேபோலத்தான் நாங்கள் வேகமாகவும் - அதே நேரத்தில் விவேகமாகவும் செயல்பட்டு வருகிறோம். ‘நான்’ என்று சொல்லும் போது என்னை மட்டுமல்ல; அமைச்சரவையை மட்டுமல்ல; நமது சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் உள்ளடக்கி ஒட்டுமொத்தமாகச் சேர்த்துத்தான் நான் சொல்கிறேன்.

ஆட்சிப் பொறுப்பேற்றபின் மேற்கொண்ட எனது பயணங்கள் குறித்து பின்னோக்கிப் பார்க்கும் போது எனக்கே மலைப்பாக இருக்கிறது. கடந்த ஓராண்டு காலத்தில் மட்டும் 655 நிகழ்ச்சிகளில் நான் பங்கெடுத்துள்ளேன். ஓராண்டு என்பது 365 நாட்களாக இருந்தாலும் - ஒரு நாளைக்கு இரண்டு நிகழ்ச்சிகள் கலந்து கொண்ட அளவுக்கு நான் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துள்ளேன். அதிலே 551 நிகழ்ச்சிகள் அரசு நிகழ்ச்சிகள். இடையில் கொரோனா தாக்கப்பட்டு சில நாட்கள் ஓய்வெடுக்க வேண்டியதாக இருந்தது. கால் வலி மற்றும் முதுகு வலி காரணமாக சில நாட்கள் மருத்துவர்களின் ஆலோசனைப்படி ஓய்வெடுத்தேன். இத்தகைய இடர்பாடுகள் இல்லாமல் இருந்தால் இன்னும் 50 நிகழ்ச்சிகள் அதிகம் ஆகியிருக்கும்.

மொத்தமாகச் சொல்வதாக இருந்தால் கடந்த ஆண்டில் மட்டும் தமிழ்நாட்டில் 9 ஆயிரம் கிலோ மீட்டர் தூரத்திற்கும் மேல் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, மக்களைச் சந்தித்து விட்டு வந்திருக்கிறேன். நாள்தோறும் உழைப்பதாகச் சொல்வார்கள் - இல்லை இல்லை நொடிக்கு நொடி உழைத்து வருகிறேன். என்னை வருத்திக் கொண்டு நான் அலையவில்லை.யாரும்பாராட்டவேண்டும்என்பதற்காகவும் நான் ஓயாத அலைச்சல்களை உருவாக்கிக்

கொள்ளவில்லை. நான் என்னுடைய இயல்பில் தான் இருக்கிறேன். இதில் ஆச்சர்யப்படுவதற்கு எதுவுமில்லை. தலைவர் கலைஞர் எங்களுக்கு இப்படித்தான் உழைக்கக் கற்றுக் கொடுத்தார்கள். அவரிடம் கற்ற பாடங்கள் என்னை இப்படி உழைக்கத் தூண்டுகிறது.

என்னுடைய அறையில் 'டேஷ் போர்டு' வைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு திட்டமும் ஒவ்வொரு நாளும் எந்தளவுக்கு முன்னேறிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை தொடர்ந்து நான் கண்காணித்து வருகிறேன். தீட்டிய திட்டங்கள் அனைத்தும் எந்தளவுக்கு ஒவ்வொரு நாளும் நகர்ந்து கொண்டிருப்பதை அறிவதன் மூலமாக அரசாங்கத்தை முடுக்கிவிட்டுக் கொண்டு இருக்கிறேன். இரவுத் தூக்க நேரம் மட்டுமே எனது ஓய்வு நேரமாக இருக்கிறது. பொறுப்பு கூடக்கூட ஓய்வு என்பது குறைந்துவிடும். 'மரம் ஓய்வை விரும்பினாலும் காற்று விடுவதாக இல்லை' என்றார் புரட்சியாளர் மாவோ. அப்படித்தான் பணிகள் அதிகம் வந்து, என்னை செயல்பட வைத்துக் கொண்டே இருக்கிறது.

9 ஆயிரம் கிலோ மீட்டர் தூரம் சுற்றி வந்து மக்களைச் சந்தித்தேன், விழாக்களில் கலந்து கொண்டேன் என்றால் அதன் மூலமாக பயனடைந்த மக்களின் எண்ணிக்கை எவ்வளவு தெரியுமா? மக்களுக்கு நேரடியாக வழங்கப்பட்ட நலத்திட்ட உதவிகள் மூலமாக ஒரு கோடியே 3 இலட்சத்திற்கும் அதிகமான பேர் பயனடைந்துள்ளார்கள். அதாவது ஒரு கோடிப் பேருக்கு தனிப்பட்ட முறையில் உதவிகள் செய்து கொடுத்துள்ளது தமிழ்நாடு அரசு. தமிழ்நாடு முழுவதும் பல்வேறு மாவட்டங்களில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டதன் மூலமாக பயனடைந்தவர்கள் இவர்கள்.

மொத்தமுள்ள மாவட்டங்களில் 28 மாவட்டங்களில் நலத் திட்ட விழாக்கள் நடந்துள்ளன. முடிவுற்ற மொத்தப் பணிகள் 7 ஆயிரத்து 430; இதன் மொத்த மதிப்பு 3 ஆயிரத்து 50 கோடி ரூபாய் ஆகும். இதுவரை அடிக்கல் நாட்டி, தொடங்கி வைக்கப்பட்ட மொத்தப் பணிகள் 13 ஆயிரத்து 428; இதன் மொத்த மதிப்பு 4 ஆயிரத்து 744 கோடி ரூபாய் ஆகும். இந்த அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து வெளியிடப்பட்ட அறிவிப்புகளின்கீழ், தமிழ்நாடு முழுவதும் இதுவரை அனைத்து அரசுத் துறைகளின் சார்பிலும் 2 இலட்சத்து 57 ஆயிரத்து 850 கோடி ரூபாய் மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலமாக அரசு எந்தளவுக்கு வேகத்துடன் செயல்படுகிறது என்பதை அறியலாம்.

ஏதோ முதலமைச்சர் செயல்படுகிறார்; அமைச்சர்கள் செயல்படுகிறார்கள்; தலைமைச் செயலகம் செயல்படுகிறது என்பதாக இல்லாமல் ஒட்டுமொத்தத் தமிழ்நாடே செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. பத்து ஆண்டுகளாகத் தேங்கிக் கிடந்த தமிழ்நாட்டை முன்னோக்கி ஓட வைத்திருக்கிறோம். தேய்ந்து கிடந்த தமிழ்நாட்டை வளப்படுத்தி வருகிறோம்.

இந்த அரசு பதவியேற்றதிலிருந்து பல்வேறு அறிவிப்புகளைச் செய்துள்ளது. அதாவது, ஆளுநர் உரை அறிவிப்புகள் – 75; என்னால் சட்டமன்றப் பேரவை விதி எண். 110-ன்கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – 67; மாவட்ட விழாக்களில் செய்த அறிவிப்புகள் – 88; மாவட்ட ஆட்சியர்கள் மாநாடு அறிவிப்புகள் – 5; செய்தி வெளியீடு அறிவிப்புகள் – 154; நிதிநிலைஅறிக்கை – 254; வேளாண்மை நிதிநிலை அறிக்கை – 237; மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால்

மானியக் கோரிக்கைகளின் போது வெளியிடப்பட்ட அறிவிப்புகள் – 2424; இதர அறிவிப்புகள் – 42 என இதுவரை மொத்தம் 3,346 அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன. இதில் 86 விழுக்காடு அறிவிப்புகள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன. அதாவது 2,892 அறிவிப்புகளுக்கு அரசாணை / அறிவுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றில் 852 அறிவிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2,040 பணிகள் நடைபெற்று வருகின்றன. 422 அறிவிப்புகளுக்கு அரசாணை வெளியிட தொடர்புடைய துறைகளால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 32 அறிவிப்புகள் குறித்த கருத்துருக்கள் ஒன்றிய அரசினுடைய பரிசீலனையில் உள்ளன. கடந்த ஒன்றரை ஆண்டில் எப்படி வளர்ச்சி அடைந்தோம் என்றால், சொன்னதைச் செய்தோம் அதனால் வளர்ந்துள்ளோம். அதுதான் உண்மை.

தமிழ்நாட்டின் வளர்ச்சி குறித்து ஒன்றிய அரசு வெளியிட்டுள்ள புள்ளிவிபரம் மிக விளக்கமாகச் சொல்லி இருக்கிறது. பிரதமரின் பொருளாதார ஆலோசனை குழு அண்மையில் மாநிலங்களினுடைய வளர்ச்சி நிலை குறித்து ஆய்வு செய்து வெளியிட்டுள்ள சமூக வளர்ச்சிக் குறியீட்டு அறிக்கையில் (Social Progress Index) 63.3 புள்ளிகளைப் பெற்று, இந்தியாவின் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடம் பெற்றுள்ளது. இப்படிச் சொல்வது நானல்ல, தமிழ்நாடு அரசு அல்ல; ஒன்றிய அரசு தான் இதனைச் சொல்லி இருக்கிறது. இந்தியாவில் இருக்கிற பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு முதலிடத்துக்கு வந்திருக்கிறது என்றால் அது சாதாரணமானது அல்ல. அதுதான் அனைவரையும் உள்ளடக்கிய திராவிட மாடல் தத்துவத்தினுடைய ஊட்டமும், வளமும், வளர்ச்சித் திறனும்! நமது நோக்கம் ஒன்று தான், மக்கள் மனங்களின் மகிழ்ச்சி.

இது ஒன்று தான் திராவிட மாடல் ஆட்சியின் முதலும் முடிவுமான ஒற்றை இலக்கு.

காலைச் சிற்றுண்டி சாப்பிடும் குழந்தைகள் முகத்தில் கட்டணமில்லாப் பேருந்து பயணம் செய்யும் மகளிரின் முகத்தில் - நித்தமும் காலையில் உதயசூரியன் உதிக்கிறது அல்லவா இதுதான் இந்த ஆட்சியினுடைய மாபெரும் சாதனையாகும்.

கடந்த பத்து ஆண்டு கால அ.தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்ட இலவச விவசாய மின் இணைப்புகள் 2.20 இலட்சம் மட்டுமே. ஆனால், விவசாயிகளின் நலன் காக்கும் இந்த அரசு 15 மாத காலத்தில் வழங்கிய இணைப்புகள் 1 இலட்சத்து 50 ஆயிரம். பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளை, கல்லூரியில் படிக்கும் இளைஞர்களை மட்டுமல்ல; படிக்கவராமல் இடையில் நின்று விடக் கூடியவர்களையும் பள்ளி, கல்லூரிகளுக்குள் அழைத்து வருகிறோம்.

சில வாரங்களுக்கு முன்னால் கோவையைச் சேர்ந்த தீபாராணி என்ற ஒரு பெண், 'முதலமைச்சரின் முகவரி' திட்டத்தில் உள்ள சிஎம் ஹெல்ப் லைன் தொலைபேசி எண்ணில் பேசி இருக்கிறார். பெரும்பாலும் தங்களது தேவைகளை, கோரிக்கைகளை, புகார்களை பதிவு செய்வதற்காகத்தான் அதிலே பலரும் பேசுவார்கள். 'உங்களுடைய புகார் என்னம்மா?' என்று கேட்டதும், 'புகார் சொல்வதற்காக நான் போன் செய்யவில்லை, சி.எம். போன் நம்பர் என்னிடம் இல்லை, சி.எம்.-க்கு நன்றி சொல்வதற்காக போன் செய்தேன்' என்று தீபாராணி என்ற அந்தப் பெண்மணி சொல்லி இருக்கிறார். அவர் சொல்கிறார் - ''நான் காய்கறி வியாபாரம் செய்கிறேன். அதனால என் பிள்ளைக்கு காலையில சாப்பாடு கொடுக்க முடியாது. என் மகன்

ஐந்தாவது படிக்கிறான். காலை உணவுத் திட்டத்தின் மூலமாக அவனுக்கு தினமும் காலை உணவு கிடைத்து விடுகிறது, அது தரமானதாக இருக்கிறது. அதுனால சிஎம்க்கு நன்றி சொல்லணும்" என்று அந்தத் தாய் நெகிழ்ச்சியோடு கூறியதுதான் எனக்குக் கிடைத்த பாராட்டு!

இதுபோன்று ஏராளமான எளிய மக்களின் பாராட்டின் காரணமாகத்தான், வாழ்த்துக்களின் காரணமாகத்தான் பெருமை அடைந்து இன்றைக்கு நாங்கள் ஊக்கத்தோடு பணியாற்றுகிறோம். 'சொன்னதைச் செய்வோம்; செய்வதைச் சொல்வோம்' - இது தலைவர் கலைஞரின் முழக்கம்! அதோடு, தமிழ் மக்களின் நலன் என்று வந்துவிட்டால், சொல்லாததையும் செய்வோம்; ஏன்? சொல்லாமலும் செய்வோம் - என்பதுதான் எனது முழக்கம்.

மாணவர்களுக்கு காலைச் சிற்றுண்டி; விவசாயிகளுக்கு இலவச மின் இணைப்புகள்; சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி; 234 தொகுதியிலும் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டம்; நகர்ப்புரச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்; இல்லம் தேடிக் கல்வி; மக்களைத் தேடி மருத்துவம்; நான் முதல்வன்; புதுமைப் பெண்; இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48; தமிழ்நாடு ஒலிம்பிக் தங்கப் பதக்கத் தேடல்; சமத்துவபுரங்கள் புனரமைப்பு; உழவர் சந்தைகளுக்குப் புத்துயிர் அளித்தல்; அரசு முன் மாதிரிப்பள்ளிகள்; பத்திரிக்கையாளர் நலவாரியம்; எழுத்தாளர்களுக்கு கனவு இல்லம்; இலக்கிய மாமணி விருது; கலைஞர் எழுதுகோல் விருது; பேராசிரியர் அன்பழகனார் பள்ளிகள் மேம்பாட்டுத் திட்டம்; பெருந்தலைவர் காமராசர் கல்லூரிகள் மேம்பாட்டுத் திட்டம்; முதலீட்டாளர்களின் முதல் முகவரி தமிழ்நாடு; பெரியார் - சமூகநீதி நாள் உறுதிமொழி; அம்பேத்கர் -

சமத்துவநாள் உறுதிமொழி; வள்ளலார் பிறந்தநாள் தனிப்பெரும் கருணை நாள்; கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம்; அன்னைத் தமிழில் அர்ச்சனை; அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர்; மாவட்டம் தோறும் புத்தகச் சந்தைகள்; கோவில் நிலங்கள் மீட்பு; 20 புதிய கலை அறிவியல் கல்லூரிகள்; புதிய ஐடிஐ நிறுவனங்கள்; காவல் ஆணையம்; கல்லூரிக் கனவு; வேலைவாய்ப்பு முகாம்கள்; தமிழ்ப் பரப்புரைக் கழகம்; தமிழ்நாடு பசுமை இயக்கம்; சிறுகுறு புத்தாக்க நிறுவனங்கள்; பொறுப்புமிக்க மாணவர்களை உருவாக்கும் சிற்பி திட்டம்; போதைப் பொருள் ஒழிப்பு; ஆன்லைன் ரம்மி ஒழிப்பு சட்டம்; நீட் தேர்வு விலக்குச் சட்டம்; ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆணையம்; வழக்கறிஞர் சேமநல நிதி 10 லட்சமாக உயர்வு; நீதிமன்றங்கள் அமைக்க நிலம் ஒதுக்கீடு என்று ஏராளமான திட்டங்களை, சட்டங்களை கடந்த ஒன்றரை ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றிக் கொடுத்திருக்கிறோம். ஒரு சில திட்டங்களைத்தான் நான் சொல்லி இருக்கிறேன். மொத்த திட்டங்களையும் சொல்வதாக இருந்தால் இன்று முழுவதும் நான் சொல்லிக் கொண்டிருக்க வேண்டும். இத்தகைய திட்டங்களின் மூலமாக ஒட்டுமொத்த தமிழ்நாடும் உயர்ந்திருப்பதை கண்ணுக்கு முன்னால் காண முடிகிறது.

கடந்த ஆண்டு ஆளுநர் உரைக்கு முன்னதாக ‘இந்தியா டுடே’ ஆங்கில வார இதழ் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் இந்தியாவினுடைய சிறந்த முதலமைச்சர் என்று எனக்கு பாராட்டுகள் தெரிவிக்கப்பட்டது. தற்போது ஓராண்டு முடிந்த நிலையில் இந்த ஆண்டு ஆளுநர் உரைக்கு முன்னதாக சில வாரங்களுக்கு முன்னதாக அதே ‘இந்தியா டுடே’ ஆங்கில வார இதழ் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் இந்தியாவின்

சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்ற தகுதியைப் பெற்றுள்ளோம். இந்தியாவில் ஒட்டுமொத்த மாநிலங்களின் செயல்பாட்டில் தமிழ்நாடு பல்வேறு பிரிவுகளில் முன்னேறி சாதனை பெற்றிருக்கிறது.

தமிழ்நாட்டின் வளர்ச்சி நம் கண்ணுக்கு முன்னால் நன்கு தெரிகிறது. தமிழகத்தில் புதிய தொழில்கள் ஏராளமாக இந்த பதினைந்து மாத காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் புதிய தொழில்கள் ஏராளமாக இந்த 20 மாத காலத்தில் உருவாக்கப்பட்டுள்ளன. இதுவரை 207 தொழில் நிறுவனங்கள் புதிதாகத் தொடங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன. இதன்மூலம் 2 இலட்சத்து 23 ஆயிரத்து 209 கோடி ரூபாய் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளதுடன், 3 இலட்சத்து 44 ஆயிரத்து 150 நபர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட 207 தொழில் நிறுவனங்களில், இதுவரை 111 நிறுவனங்கள் தொடங்கப்பட்டு, 13 ஆயிரத்து 726 கோடி ரூபாய் முதலீடு வரப்பெற்றுள்ளது. 15 ஆயிரத்து 529 நபர்களுக்கு வேலை கிடைக்கப் பெற்றுள்ளது. தமிழ்நாட்டின் எல்லையைத் தாண்டி பல்வேறு மாநிலத்தில் இருந்தும் வந்து நிறுவனங்களைத் தொடங்குகிறார்கள். பல்வேறு நாடுகளில் இருந்தும் தொழில் தொடங்க இங்கே வருகிறார்கள். அந்த வகையில் தொழில் அதிபர்களை - நிறுவனங்களை ஈர்க்கும் மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. தொழில் தொடங்க சிறந்த மாநிலங்களின் பட்டியலில் 14ஆவது இடத்தில் இருந்து 3 ஆவது இடத்துக்கு முன்னேறி இருக்கிறது நம்முடைய தமிழ்நாடு.

அண்மையில் “ஸ்டார்ட் அப் இந்தியா” வெளியிட்டிருக்கக்கூடிய தரவரிசைப்பட்டியலிலும் பல படிகள் முன்னேறி அரசின் சிறந்த புத்தொழில் செயல்பாடுகளுக்காக “லீடர்” என்கிற அங்கீகாரத்தினை பெற்றுள்ளது தமிழ்நாடு. கடந்த 2021-2022ஆம் ஆண்டு இறுதியில் வெளியிடப்பட்ட தரவுகளின்படி ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு தேவையான துணிகர முதலீடுகளை திரட்டுவதில் தமிழ்நாடு, பெங்களூரு, டெல்லி மற்றும் மும்பைக்கு அடுத்தபடியாக நான்காம் இடத்துக்கு முன்னேறி இருக்கிறது. தொழில் வளர்ச்சி என்பது மாநிலத்தின் ஒட்டு மொத்த வளர்ச்சியின் முகமாகவும் முகவரியாகவும் இருக்கிறது.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) மதிப்பில், தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடு; இந்தியாவின் மொத்த ஏற்றுமதியில் தமிழ்நாட்டின் பங்களிப்பு 8.4 விழுக்காடு; ஜவுளித் துறை ஏற்றுமதியில் 19.4 விழுக்காடு; கார்கள் ஏற்றுமதியில் 32.5 விழுக்காடு; தோல் பொருட்கள் ஏற்றுமதியில் 33 விழுக்காடு! இவை அனைத்தும் இந்தியாவின் தலை சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை தலை உயர்த்திச் சொல்கின்றன.

இந்தியா முழுமைக்குமான பணவீக்கம் இப்போது அதிகமாகி உள்ளது. ஆனால், தமிழ்நாட்டுக்கு மட்டுமான பணவீக்கம் குறைந்துள்ளது. இதுவும் சமீபத்தில் ஒன்றிய அரசு வெளியிட்ட புள்ளிவிவரம்தான். தமிழ்நாட்டு மக்களின் வாங்கும் திறன் அதிகமாகி இருக்கிறது. இதற்குக் காரணம், சமூக வளர்ச்சித் திட்டங்களின் மூலமாக அனைத்துப் பிரிவு மக்களும் வளர்ந்ததுதான். இதுகுறித்து பிரபல ஆங்கில நாளிதழ் பிசினஸ் லைன் எழுதிய கட்டுரையில், தமிழ்நாட்டில்

உணவுப்பொருள் விலை குறைந்துள்ளது என்று குறிப்பிட்டது. எரிபொருள் விலை அதிகரித்தாலும், பெண்களுக்கு வழங்கிய இலவச பேருந்து வசதி அதனை ஈடுசெய்துவிட்டது என்று குறிப்பிட்டது. பெண்களின் போக்குவரத்து செலவு குறைந்ததை சுட்டிக்காட்டியது.

"கல்வி, சுகாதாரம், சமூக நலத் திட்டங்கள், வேலைவாய்ப்புகள், தொழில் வளர்ச்சி ஆகியவற்றில் சிறப்பான குறியீடுகளை அடையும் மாநிலமாக தமிழ்நாடு இருப்பதால் பணவீக்கம் குறைந்து வருகிறது" என்று எழுதியது. இதையே பிபிசி நிறுவனமும், இந்து ஆங்கில நாளிதழும் எழுதி இருக்கின்றன. இதே வேகத்தில் சென்றால் தமிழ்நாடு தன்னிகரற்ற மாநிலமாக உயர்ந்துவிடும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

மாநில அரசுகளின் வரி உரிமைகள், நிதி உரிமைகள் பலவும் ஏற்கெனவே பறிக்கப்பட்டுவிட்டன. நிதிக்காக ஒன்றிய அரசை சார்ந்திருக்க வேண்டிய நிலை கடந்த 8 ஆண்டுகளில் மேலும் அதிகமாகிவிட்டது. அனைத்து நிதிகளையும் கேட்டுக் கேட்டு வாங்க வேண்டிய நிலைமையே இருக்கிறது. கட்டணம் உயர்த்தினால்தான் சலுகைகள் வழங்கப்படும் என ஒன்றிய அரசு தொடர்ந்து வலியுறுத்துகிறது. இப்படிப்பட்ட நிலையிலும், தமிழ்நாட்டு மக்களுக்கு பெரும் சுமையைத் தந்துவிடக் கூடாது என்று பெரும்பாலான சுமையை அரசே தாங்கிக் கொண்டு, சிறிய அளவிலான கட்டண சீர்திருத்தத்தை மேற்கொள்ள வேண்டிய நிலையில் அந்த நடவடிக்கைகள் நடுத்தர வர்க்கத்தினரை பாதிக்காத வகையில் மேற்கொள்ளப்பட்டன. புதிய நிதி ஆதாரத்தை திரட்டுவதுதான் எங்கள் முன்னால் உள்ள மிக முக்கியமான, பெரிய சவாலாக இருக்கிறது என்பதையும் நான் மனம் திறந்து ஒப்புக்கொள்கிறேன்.

இத்தகைய சூழலிலும் அரசு ஊழியர்களுக்கு இந்த ஆட்சி அமைந்ததில் இருந்து பல்வேறு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

அரசு ஊழியர்களின் நலன் காப்பதில் திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தளவிற்கு கண்ணும் கருத்துமாகச் செயல்படும் என்பதை அரசு ஊழியர்கள் நன்கு அறிவார்கள். அரசு நலத் திட்டங்களையும், பல்வேறு சேவைகளையும் மக்களிடம் சிறப்பாக கொண்டு சேர்க்கும்விதமாக 10 ஆயிரத்து 338 புதிய பணியிடங்கள் பல்வேறு துறைகளில் அரசால் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

கோவிட் நோய்த்தொற்றால் பணியிடை மரணம் அடைந்த 409 முன்களப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 98 கோடியே 45 இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்பட்டுள்ளது. இரண்டிற்கும் குறைவான குழந்தைகள் உள்ள மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு 9 மாதங்களில் இருந்து 12 மாதங்களாக உயர்த்தப்படும் என்ற தேர்தல் அறிக்கையின் வாக்குறுதியை இந்த அரசு 01.07.2021 முதல் செயல்படுத்தியிருக்கிறது.

நாங்கள் மதத்துக்கு எதிரானவர்கள், நாத்திகர்கள் என்று சொல்லி, கோயில்களை சரிவர பராமரிக்கவில்லை என்று ஒரு கூட்டம் வீண் வதந்திகளைச் செய்திகளாகப் பரப்பி கொண்டிருக்கிறது. நான் பல முறை இதற்கு பதில் சொல்லி இருக்கிறேன். நாங்கள் மதவாதத்துக்குத்தான் எதிரானவர்களே தவிர; மதத்துக்கு எதிரானவர்கள் அல்ல. மீண்டும் சொல்கிறேன்; நாங்கள் மதவாதத்துக்கு தான் எதிரானவர்களே தவிர; மதத்துக்கு அல்ல. மக்களின் மதநம்பிக்கையை தங்களது சுயநலத்துக்கு பயன்படுத்திக்

கொள்பவர்களுக்குத்தான் நாங்கள் எதிரிகளே தவிர; நம்பிக்கையாளர்களுக்கு எதிரிகள் அல்ல. அற நிறுவனங்களுக்குச் சொந்தமான நிலம்/ கட்டடம்/மனை ஆகியவற்றில் ஏற்பட்ட ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு 07.05.2021 முதல் 31.10.2022 வரையிலான காலத்தில் 3,150 ஏக்கர் நிலம் உள்ளிட்ட சுமார் 3,657 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கோயில் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. உண்மையான பக்தர்கள் இதைப் போற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், போலியான கபடவேடதாரிகள் அரசுக்கு நல்ல பெயர் கிடைப்பதை பொறுத்துக்கொள்ள இயலாமல் தூற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி சாதனைகள் செய்வது சிலருக்குப் பிடிக்கவில்லை. அனைத்து கோயில்களும் புத்தொளி பெறுவது சிலருக்கு பிடிக்கவில்லை. அதனால்தான் அவர்கள் அவதூறு செய்து கொண்டிருக்கிறார்கள்.

சட்டம்-ஒழுங்கு குறித்து இம்மாமன்றத்தில் குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டது. குற்றச்சாட்டு சொல்வதாக இருந்தால் அதனை ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். பொத்தாம் பொதுவாகச் சொல்லக் கூடாது. மதக் கலவரங்கள் நடந்துள்ளதா? சாதிக் கலவரங்கள் நடந்துள்ளதா? சொல்லுங்கள். பொது மக்கள்மீது துப்பாக்கிச்சூடு நடதுள்ளதா? அப்பாவி உயிர்கள் பறிபோனதா? நெஞ்சை உலுக்கக்கூடிய பொள்ளாச்சி சம்பவமும், மர்மத்தின் உச்சமாய் விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய கொடநாடு கொலைகளும், கொள்ளைகளும் யாருடைய ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்தன என்பதை மக்களும் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். எங்காவது நடந்த குற்றச் சம்பவங்களில் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லையா?

சொல்லுங்கள். காவல் துறை அவர்களது கடமையை சிறப்பாக செய்து வருகிறது. அதைச் சொல்லாமல், நடவடிக்கை எடுக்கப்பட்ட குற்றங்களைப் பேசுவதால் என்ன பயன்?

மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை திறம்பட நிலைநாட்டிட இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. அரசின் சீரிய நடவடிக்கைகளினால் தமிழ்நாடு தொடர்ந்து அமைதிப் பூங்காவாகத் திகழ்கிறது. அதன் காரணமாகவே, பல்வேறு நாடுகளிலிருந்து தொழில் முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டினைத் தேடி வந்து இங்கே முதலீடு செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மதவாத, இனவாத, தீவிரவாத சக்திகளை ஒருபோதும் இந்த அரசு வளரவிடாது. எந்தவொரு வன்முறையும் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு தொடர்ந்து திகழும்.

ஆளுநருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிந்த தி.மு.க.வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கம்பம் நா. இராமகிருஷ்ணன் அவர்களுக்கும், வழிமொழிந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுந்தர் அவர்களுக்கும் அதேபோல்,எதிர்க்கட்சியாக இருக்கக்கூடிய, அ.தி.மு.க. சார்பில் உரையாற்றிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு.கே.பி. முனுசாமி அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. நத்தம் ஆர். விசுவநாதன் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சியின் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியின் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும், பாரதிய ஜனதா கட்சியின்

மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் அவர்களுக்கும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. ம. சிந்தனைசெல்வன் அவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்களுக்கும், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சின்னதுரை அவர்களுக்கும், ம.தி.மு.க.வைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்களுக்கும், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் மாண்புமிகு முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களுக்கும், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் மாண்புமிகு திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்களுக்கும், தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. தி. வேல்முருகன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்று முன்தினம் நடைபெற்ற பேரவைக் கூட்டத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா அவர்கள் பள்ளிவாசல்களுக்கு வழங்கப்படும் Major Repair Grant (MRG) என்ற மானியத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்தார். கடந்த அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ரூ.5 கோடியாக இருந்த இந்த மானியத் தொகையை கழக ஆட்சி பொறுப்பேற்றவுடன் சென்ற ஆண்டு, ரூ.6 கோடியாக உயர்த்தி வழங்கினோம். தற்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையையேற்று, பள்ளிவாசல்களுக்கு வழங்கப்படும் Major Repair Grant-MRG மானியத் தொகை வரும் நிதியாண்டு முதல் ரூ.10 கோடியாக உயர்த்தி

வழங்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் திரு. வேல்முருகன் அவர்கள் நேற்று பேசும்போது, தமிழ்நாட்டில் வட மாநிலத்தவர்கள் குற்றச் சம்பங்களில் ஈடுபடுவது பற்றி விளக்கமாக, விரிவாக, உணர்ச்சியோடு குறிப்பிட்டு பேசினார். கடந்த இரண்டு ஆண்டுகளில், கொலை, கொள்ளை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்ட வட மாநிலத்தவர்கள்மீது 85 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் கொலை வழக்குகள் 25; அவற்றில் 24 வழக்குகளில் 33 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இது தவிர, தமிழ்நாட்டில் தங்கிப் பணிபுரியும் வட மாநிலத் தொழிலாளர்கள் பற்றிய விவரங்களை ஒவ்வொரு காவல் நிலையமும் சேகரிக்கின்றது. அவர்களை தமிழ்நாட்டில் பணியில் அமர்த்தும் மனித வள நிறுவனங்களிடமிருந்து தகவல்கள் பெறப்படுகின்றன. வட மாநிலத்தவர்களில் குற்றச் செயல்களில் ஈடுபடுவோர், சந்தேகத்திற்குரியோரை அடையாளம் கண்டு, அந்தந்த மாநிலங்களின் போலீசாரிடமிருந்தும் அவர்களைப் பற்றிய தகவல்கள் மற்றும் உதவிகள் பெற்று மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் யார் என்றாலும், அவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதேபோல், வட மாநிலத்திலிருந்து இங்கு வந்து பணிபுரியும் தொழிலாளர்கள் சட்ட விரோத செயல்களில், குற்றச் செயல்களில் ஈடுபட்டாலும், கடும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், பாட்டாளி மக்கள் கட்சியின் மாண்புமிகு சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. கோ.க.மணி அவர்கள் தமிழ்நாட்டில் தமிழ் கட்டாயப் பாடமாக்கப்பட வேண்டுமென்பது குறித்து தனது கருத்துகளை இம்மாமன்றத்தில் எடுத்து வைத்தார். நேற்றைக்கு திரு. பொன்முடி அவர்களும் அதற்கு ஒரு விளக்கம் கொடுத்தார். அதேபோல, மாண்புமிகு அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களும் ஒரு விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். எனவே, அதைப்பற்றி அதிகம் நான் பேச வேண்டியதில்லை. இருந்தாலும், சுருக்கமாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டில் தமிழ் மொழியைப் படிக்காமல் பள்ளிகளிலிருந்து தேர்ச்சி பெறமுடியாது என்ற நிலையைக் கொண்டுவருவதற்குத்தான் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை தமிழ்மொழி கட்டாயப் பாடம் என்ற "தமிழ் மொழி கற்கும் சட்டத்தை" 13.06.2006 அன்று இயற்றி, தமிழ் மொழி வரலாற்றில் மிக முக்கியமான சாதனையை நிகழ்த்தினார்.

அந்த வகையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பள்ளிகளிலும் தமிழை முழுமையாகப் பயிற்றுவிப்பதை இந்த அரசு தொடர்ந்து கண்காணிக்கும். வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் மற்றும் வெளி மாநிலங்களில் வாழக்கூடிய தமிழர்களின் குழந்தைகள் தங்கள் தாய்மொழியான தமிழைக் கற்பதற்கு ஏதுவாக தமிழ் பரப்புரைக் கழகம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் சார்பில் மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் பல்வேறு தலைப்புகளில் 108 புதிய புத்தகங்களையும், குழந்தைகளுக்கான இளந்தளிர் நூல்களையும்

கொண்டுவந்துள்ளதோடு, தமிழ்நாட்டில் மருத்துவம் பயிலும் மாணவர்களுக்கான 5 முக்கிய பன்னாட்டு மருத்துவ நூல்களை தமிழ்நாடு பாடநூல் கழகம் கொண்டு வந்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழக அரசு, தனது தமிழ் காக்கும் பணிகளைத் தொடர்ந்து புதிய புதிய முன்னெடுப்புகளையெடுத்து சீரிய பணிகளை ஆற்றும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் பெருமிதத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தனை செல்வன் அவர்கள் பேசும்போது, ஒரு கருத்தைச் சொன்னார். 'நமக்கு நாமே' திட்டத்தின்கீழ் ஊராட்சிகளில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளவாறு பேரூராட்சிகளிலும் பட்டியலின மக்கள் வசிக்கக்கூடிய பகுதிகளுக்கும் ஐந்தில் ஒரு பங்கு வழங்கப்படவேண்டுமென்று என்ற ஒரு கோரிக்கையை வைத்தார். அதனையேற்று இந்தத் திட்டத்தின்கீழ் வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்த ஏதுவான பேரூராட்சிகளில் மட்டுமல்ல; நகராட்சிகளிலும் அவரது கோரிக்கை நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, கடந்த ஆட்சிக் காலத்தில் பல்வேறு காலக்கட்டங்களில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்களில் குறிப்பிட்டுள்ள பயனாளிகள் வீடுகட்டி குடியேற இயலாத வகையில் மேடு பள்ளங்களாகவும்,சாலைவசதி இல்லாமலும்காணப்படுவதாக தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். இவ்வாறு பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட பட்டா இடங்களில் அவர்கள் வீடுகள் கட்டி குடியேறத்தக்க வகையில் இல்லாத

இடங்களின் விவரங்களையெல்லாம் மாவட்டம்வாரியாக சேகரிக்கப்பட்டு, எந்தெந்த இடங்களில் சமன்செய்து மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள தகுதியானவை என்பதையறிந்து, உடனடியாக அதுகுறித்து நல்ல முடிவு எடுக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், இந்த அவைக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், பாரதிய ஜனதா கட்சித் தலைவர், திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டம் குறித்து, மனம் திறந்து பாராட்டினார். அதற்காக அவர்களுக்கு நான் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். தற்போது அவர் அவையில் இல்லை. செய்தியைப் படிப்பார் என்று நினைக்கிறேன். அந்தத் திட்டத்தைப் பொறுத்தமட்டிலும், சில தகவல்களை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். பகிர்ந்துகொள்ளவும் விரும்புகிறேன்.

கடந்த 07.05.2022 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110இன்கீழ், 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் அறிவிக்கப்பட்டது. அதன் தொடக்கமாக, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து அவரவர் தொகுதிகளில் நிறைவேற்றப்படாத பல முக்கிய கோரிக்கைகள், தத்தமது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பிவைக்குமாறு நான் கேட்டுக்கொண்டிருந்தேன். இதுவரை, 233 சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கோரிக்கைப் பட்டியல் வரப்பெற்றுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக கவனிக்க வேண்டும், ஒன்று மட்டும்தான் வரப்பெறவில்லை. மொத்தம் 234 உறுப்பினர்களில், 233 சட்டமன்ற

உறுப்பினர்கள் அளித்தனர். யார் அளிக்கவில்லை என்பதை நான் சொல்ல விரும்பவில்லை, கொடுக்காதவர்களுக்கு தெரியும். இதுவரை, 233 சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து 1,483 பணிகளுக்கான கோரிக்கைப் பட்டியல் வரப்பெற்றுள்ளன. இவற்றையெல்லாம் வகைப்பாடு செய்து, துறைவாரியாக மதிப்பீடுகள் செய்யப்பட்டு, அவற்றில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய பணிகளைத் தேர்வு செய்யப்பட்டு, உயர்நிலைக் குழுவில் வைக்கப்பெற்று, வரும் நிதியாண்டில் நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, அப்பணிகள் படிப்படியாக நிறைவேற்றித் தரப்படும் என்பதை இந்த அவையில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்று, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசியபோது, அ.தி.மு.க. ஆட்சியைவிட, தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு மேலும் அதிகக் கடன் வாங்கியுள்ளதாக ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தார்கள். இது முற்றிலும் தவறான தகவல். அ.தி.மு.க. ஆட்சியின் கடைசி ஆண்டான 2020-2021ஆம் ஆண்டில், 83,275 கோடி ரூபாய் நிகரக் கடனாக பெறப்பட்டது. நன்றாக கவனிக்க வேண்டும். 2020-2021ஆம் ஆண்டில், அ.தி.மு.க. ஆட்சியின் கடைசி ஆண்டில், 83,275 கோடி ரூபாய் நிகரக் கடனாக பெறப்பட்டது. நாங்கள் ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு, கடும் நிதி நெருக்கடி இருந்தபோதிலும், பல்வேறு புதிய மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்தியிருக்கின்றபோதிலும், என்னுடைய திறமையான நிருவாகத்தினால், 2021-2022ஆம் ஆண்டில் பெறப்பட்ட நிகரக் கடனை, 79,303 கோடி ரூபாயாக குறைத்திருக்கிறோம். அதாவது, முந்தைய ஆண்டைக் காட்டிலும், சுமார் 4,000 கோடி ரூபாய் அளவிற்குக் குறைவாகவே கடன் பெறப்பட்டுள்ளது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோன்று, இந்த அரசால் அமைக்கப்பட்ட குழுக்கள் குறித்தும், அவர்கள் விமர்சனம் செய்துள்ளார்கள். மேலும் குழுக்களின் விவரங்களைத் தெரிவிக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். நான் சில குழுக்களின் நடவடிக்கைகளை சொல்ல விரும்புகிறேன். அதற்கு பதிலளிக்கக்கூடிய வகையில், இந்த அரசால் அமைக்கப்பெற்ற குழுக்கள் சிலவற்றை மட்டும் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

சென்னையில், வெள்ளத் தடுப்பு குறித்து ஆராய்ந்து, அதற்கான தீர்வுகளை அரசிற்கு பரிந்துரைக்க ஓய்வுபெற்ற ஆட்சிப் பணி அலுவலர், திரு. திருப்புகழ் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதன் பலனை தற்போது மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அது குறித்து இந்த அவையிலும் பேசப்பட்டது. அதன் விவரத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை.

கடந்தகால மழைக்காலங்களில் சென்னை மாநகரம் மழைநீரில் தத்தளித்ததுபோல் அல்லாமல், 2022ஆம் ஆண்டில் மழைநீர் தேங்குவது முற்றிலுமாக தடுக்கப்பட்டது. அதேபோன்று, தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த எனக்காக ஒரு பொருளாதார ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. இந்தக் குழுவானது, நம் மாநில 1 trillion dollar பொருளாதார இலக்கினை அடைவதற்கான வழிமுறைகளுக்கும், சீர்திருத்தங்களுக்கும் உரிய ஆலோசனைகளை தொடர்ந்து வழங்கிவருகிறது. அதன் அடிப்படையில்தான் பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடுத்து கொரோனா பரவலைத் தடுக்கும்பொருட்டும், அதனைக் கட்டுப்படுத்தவும், ஓய்வுபெற்ற இந்திய ஆட்சிப்

பணி அலுவலர், திரு. பூர்ணலிங்கம் அவர்களின் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. இந்தியாவிலேயே கொரோனா நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்திய மாநிலத்தில், தமிழ்நாடு முன்னிலை வகித்தது அனைவருக்கும் தெரியும்.

அடுத்து NEET தேர்வு குறித்து ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர், திரு. A.K. ராஜன் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. NEET விலக்கு சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அதன் பிறகு மாண்புமிகு குடியரசர் அவர்களின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அடுத்து, online rummy விளையாட்டினைத் தடை செய்யும்பொருட்டு, ஓய்வுபெற்ற நீதிபதி திரு. K. chandru அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அதற்கான சட்டமுன்வடிவு, இந்த சட்டமன்றப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி, தற்போது மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தொன்மையான கோயில்களையெல்லாம் பழமை மாறாமல் புதுப்பிக்க வேண்டுமென்ற அந்த நோக்கத்தில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. அந்தக் குழு இன்றைய தேதி வரை 3,720 திருக்கோயில்களை தொன்மை மாறாமல் புதுப்பிக்க அளித்திருக்கக்கூடிய பரிந்துரைகளை ஏற்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஒரு எடுத்துக்காட்டிற்காகத்தான் இதையெல்லாம் சொன்னேன்.

இதுபோன்று இந்த அரசால் அமைக்கப்பட்ட ஏனைய அனைத்து குழுக்களும் சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன. அவ்வப்போது அரசுக்கு வழங்கும்

ஆலோசனைகளை ஏற்று, மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளினால் இந்தக் குழுக்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறியுள்ளதால் தமிழ்நாட்டு மக்களின் நலன்களும் பேணி பாதுகாக்கப்படுகின்றன என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கடந்த இரு நாட்களாக மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையில் எடுத்து வைத்திருக்கக்கூடிய கருத்துகள் தொடர்பாக நான் அமைச்சர்களோடு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு ஆலோசித்தேன். அதனடிப்படையில் சில அறிவிப்புகளை தற்போது நான் வெளியிட விரும்புகிறேன்.

முதலாவதாக, கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் முக்கிய ஊராட்சி ஒன்றியச் சாலைகளை வலுப்படுத்தவும், தரம் உயர்த்தவும், "முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதியத் திட்டத்தை அரசு செயல்படுத்தும். முதற்கட்டமாக, 2 ஆண்டுகளில் 10,000 கி.மீ. அளவுக்கு ஊராட்சி ஒன்றிய சாலைகள் 4,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

இரண்டாவதாக, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 15.09.2022 அன்று மதுரையில் தொடங்கப்பட்டது. 1 முதல் 5ஆம் வகுப்பு வரையிலான தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கு முன்னோடி முயற்சியாக செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் முதற்கட்டமாக, 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1.14 இலட்சம் மாணவர்களுக்கு அவர்களின் பள்ளியில் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் பெரும்பாலான பொது மக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் மிகவும் பாராட்டப்பட்டு, அதை மகிழ்ச்சியோடு

வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த முயற்சியின் பயனாக, பள்ளிகளில் மாணவர்களின் வருகை எண்ணிக்கை வழக்கத்தைவிட அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, இந்தத் திட்டத்தினை 2023-2024ஆம் ஆண்டு, படிப்படியாக மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்புவரை படிக்கும் குழந்தைகளுக்கும் விரிவாக்கம் செய்திட முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்றாவதாக ஒரு முக்கியமான அறிவிப்பு. உலக முதலீட்டாளர்கள் மாநாடு. பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. இந்திய அளவில் பொருளாதாரத்தில் இரண்டாவது பெரிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது.

முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடவும், மாநில பொருளாதாரத்தை வலுவடையச் செய்திடவும், நான் 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்தும் இலக்கை நிர்ணயித்தேன். அதனை அடைய பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்த இலக்கினை நோக்கிப் பயணம் மேற்கொள்ளும் விதமாக, பல முதலீட்டாளர்கள் மாநாடுகளை துபாய் உள்ளிட்ட இடங்களில் நடத்தப்பட்டன.

மேலும், உலகளவில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தலைமையில் ஒரு

உயர்மட்டக் குழு, ஜெர்மனி, அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் தைவான் போன்ற நாடுகளுக்கும் அவர்கள் பயணம் மேற்கொண்டார்கள்.

சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரத்தில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் ஆண்டுக் கூட்டம் 2022இல் தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நம் மாநிலத்திற்கு மேலும் முதலீடுகளை ஈர்த்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கி, பொருளாதாரம் வளர்ச்சி அடைவதற்காக, "உலக முதலீட்டாளர்கள் மாநாடு" வரும் 2024ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 10, 11ஆம் நாட்களில், 100-க்கும் மேற்பட்ட நாடுகளின் பங்கேற்புடன், பெருமளவில் பிரம்மாண்டமாக சென்னையில் நடத்தப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எந்த அரசாக இருந்தாலும், அந்த அரசிற்கு ஒரு இலக்கு தேவை. இலக்கை நிர்ணயித்தால்தான் அந்த இலட்சியத்தை நாம் அடைய முடியும். 2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதார வளர்ச்சி என்பது எங்களுடைய இலக்காகும். அந்த இலக்கை நோக்கி நாங்கள் பயணித்துக்கொண்டிருக்கிறோம். இதனை வெறும் நிதி அளவுகோலாக மட்டும் நீங்கள் கருதக் கூடாது. இதனை மக்களின் வளர்ச்சியோடு சேர்த்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அனைத்தையும், அனைவரையும், அனைத்துத் துறைகளையும், அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய திராவிட மாடல்

வளர்ச்சியாக்க வேண்டுமென்றும் நான் சொல்லி வருகிறேன். ஏற்றுமதி, இறக்குமதி அளவீடுகளாக மட்டுமே பொருளாதார வளர்ச்சி அளவீடுகள் அமைந்து விடக் கூடாது என்பது எனது எண்ணம்.

சமூக, அரசியல், பொருளாதார, வாழ்வியல், பண்பாட்டு வளர்ச்சியை உள்ளடக்கியதாகவே தமிழ்நாட்டு மாநில வளர்ச்சி அமைய வேண்டும் என்று கருதுகிறேன். அதற்கான திட்டமிடுதல்களை நாங்கள் செய்து வருகிறோம். ஏராளமான புதிய புதிய தொழில் நிறுவனங்களைத் தமிழ்நாட்டில் கொண்டு வருகிறோம். புத்தாக்கத் தொழில்களுக்கு முன்னுரிமை தருகிறோம். சிறு, குறு, நடுத்தரத் தொழில்களை ஊக்குவிக்கிறோம். புதிய தொழில் பேட்டைகள் தொடங்கப்பட்டுள்ளன. வேலைவாய்ப்புகளை உருவாக்கித் தருகிறோம். வேலைகளுக்குத் தகுதியானவர்களாக இளைஞர்களை உயர்த்தி வருகிறோம். பெண்களை, சொந்தக் காலில் நிற்பவர்களாக மாற்றிட தன்னம்பிக்கை ஊட்டி வருகிறோம். அவர்களது திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்துகிறோம். பள்ளி, கல்லூரிகளில் 'நான் முதல்வன்' திட்டம் மூலமாக மாணவ, மாணவியரைத் தனியாற்றல் கொண்டவர்களாக வளர்த்து வருகிறோம். இதுதான் புதிய தமிழ்நாடு! அறிவுசார் தமிழ்நாடு! வலிமை வாய்ந்த, வளம் நிறைந்த தமிழ்நாடு!! தமிழ்நாட்டின் இந்த இளையசக்தியை அறிவுசக்தியாக, ஆற்றல்மிக்க சக்தியாக மாற்றி - அதனை தொழில் வளர்ச்சியோடு இணைக்கிறோம். மனித ஆற்றலின் மகத்தான சக்தியை அதிகப்படுத்துவதன் மூலமாக மாநில வளர்ச்சியை உயர்த்தி வருகிறோம். இதுதான் திராவிட மாடல் ஆட்சியுடைய தனித்தன்மை.

நிகழ்காலத்தைப் பொற்காலமாக மாற்றும் முயற்சியில் தான் நித்தமும் செயல்பட்டு வருகிறோம். "முடியுமா நம்மால்

என்பது தோல்விக்கு முன்பு வரக்கூடிய தயக்கம். முடித்தே தீருவோம் என்பது வெற்றிக்கான தொடக்கம்” என்பது தமிழினத் தலைவர் கலைஞருடைய பாடம் இது. அத்தகைய வெற்றியை நோக்கிய பயணம் தொடர்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அரசுக்கு கூறியுள்ள நல்ஆலோசனைகளை உள்ளடக்கியதாக எங்களது வருங்காலத் திட்டமிடுதல்கள் நிச்சயமாக இருக்கும். என்னுடைய வெற்றிக்கு அடிப்படையாக நான் நினைப்பது, மக்களுக்காக உண்மையாக இருப்பதும், மனச்சாட்சிப்படி செயல்படுவதும்தான். இந்தப் பொறுப்புக்கு நான் வரக் காரணமானவர்களே மக்கள்தான். அந்த மக்களுக்கு உண்மையாக நான் இருக்கிறேன். அதற்காக நான் எந்நாளும் உழைக்கிறேன்! தலைநிமிர்ந்த தமிழ்நாடு - தனித்துவமான பொன்நாடு! வெல்லும் திராவிட மாடல் ஆட்சியில் உலகுக்கு வழிகாட்டும் தமிழ்நாடாக இருக்குமென்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் 11 பேர் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது 94 திருத்தங்களை அளித்திருக்கிறார்கள். தங்கள் தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்து குறிப்பிட்டிருக்கிறார்கள். உரிய அமைச்சர்களுக்கு நடவடிக்கை எடுக்க, அவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் அளித்திருக்கக்கூடிய திருத்தங்களை, திரும்பப்பெறுமாறு கேட்டு, அனைத்துக் கட்சி எல்லைகளை மறந்து, மக்கள் நிலையை உணர்ந்து, இந்த ஆளுநர் உரையை மனப்பூர்வமாக வரவேற்க வேண்டும்.

நிறைவாக, மாண்புமிகு பேரவைத் தலைவர், மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கூட்டணி கட்சிகளினுடைய தலைவர்கள் மற்றும் அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் எனது அன்பான தமிழர் திருநாளாம் பொங்கல் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து என் உரையை நிறைவு செய்கிறேன். 'வாழ்க தமிழ் – வெல்க தமிழ்நாடு'.

நன்றி வணக்கம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்*
ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு
ஆற்றிய பதிலுரை – 13.01.2023

"உலக முதலீட்டாளர்கள் மாநாடு"-2024 ஜனவரியில் பிரம்மாண்டமாக கொண்டாடப்படும்

கடந்த இரு நாட்களாக மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த அவையில் எடுத்து வைத்திருக்கக்கூடிய கருத்துக்கள் தொடர்பாக நான் அமைச்சர்களோடு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு ஆலோசித்தேன். அதனடிப்படையில் சில அறிவிப்புகளை தற்போது நான் வெளியிட விரும்புகிறேன்.

முதலாவதாக, கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் முக்கிய ஊராட்சி ஒன்றியச் சாலைகளை வலுப்படுத்தவும், தரம் உயர்த்தவும், "முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதியத் திட்டத்தை அரசு செயல்படுத்தும். முதற்கட்டமாக, 2 ஆண்டுகளில் 10,000 கி.மீ. அளவுக்கு ஊராட்சி ஒன்றிய சாலைகள் ரூ.4,000 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்.

இரண்டாவதாக, முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் 15.09.2022 அன்று மதுரையில் தொடங்கப்பட்டது. 1 முதல் 5ஆம் வகுப்பு வரையிலான தொடக்கப் பள்ளிக் குழந்தைகளுக்கு முன்னோடி முயற்சியாக செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் முதற்கட்டமாக, 1,545 அரசுப் பள்ளிகளில் பயிலும் 1.14 இலட்சம் மாணவர்களுக்கு அவர்களின் பள்ளியில் காலை உணவு வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் பெரும்பாலான பொது மக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களால் மிகவும் பாராட்டப்பட்டு, அதை மகிழ்ச்சியோடு வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்த முயற்சியின் பயனாக, பள்ளிகளில் மாணவர்களின் வருகை எண்ணிக்கை வழக்கத்தைவிட அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசு, இந்தத் திட்டத்தினை 2023-2024ஆம் ஆண்டு, படிப்படியாக மாநிலத்தில் உள்ள அனைத்து அரசுப் பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைகளுக்கும் விரிவாக்கம் செய்திட முடிவு செய்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மூன்றாவதாக ஒரு முக்கியமான அறிவிப்பு. உலக முதலீட்டாளர்கள் மாநாடு. பொருளாதாரம் மற்றும் தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்கி வருகிறது. இந்திய அளவில் பொருளாதாரத்தில் இரண்டாவது பெரிய மாநிலமாக தமிழ்நாடு திகழ்கின்றது.

முதலீடுகளை பெருமளவில் ஈர்த்து, இலட்சக்கணக்கான தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கிடவும், மாநில பொருளாதாரத்தை வலுவடையச் செய்திடவும், நான் 2030ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக உயர்த்தும் இலக்கை நிர்ணயித்தேன். அதனை அடைய பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

இந்த இலக்கினை நோக்கிப் பயணம் மேற்கொள்ளும் விதமாக, பல முதலீட்டாளர்கள் மாநாடுகளை துபாய் உள்ளிட்ட இடங்களில் நடத்தப்பட்டன.

மேலும், உலகளவில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தலைமையில் ஒரு உயர்மட்டக் குழு, ஜெர்மனி, அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் மற்றும் தைவான் போன்ற நாடுகளுக்கும் அவர்கள் பயணம் மேற்கொண்டார்கள்.

சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரத்தில் நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின்ஆண்டுக் கூட்டம் கடந்த ஆண்டு தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

நம் மாநிலத்திற்கு மேலும் முதலீடுகளை ஈர்த்து, வேலைவாய்ப்புகளை உருவாக்கி, பொருளாதாரம் வளர்ச்சி அடைவதற்காக, “உலக முதலீட்டாளர்கள் மாநாடு” வரும் 2024ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் 10, 11ஆம் நாட்களில்,

100-க்கும் மேற்பட்ட நாடுகளின் பங்கேற்புடன், பெருமளவில் பிரம்மாண்டமாக சென்னையில் நடத்தப்படும் என்பதை இம்மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்*
ஆளுநர் உரை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசியபோது
வெளியிட்ட அறிவிப்புகள்– 13.01.2023

சமூகநீதி காக்கும் மண்ணாக விளங்கும் தமிழ்நாடு

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வு குறித்து இங்கே கவன ஈர்ப்பினை எழுப்பி இருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை, தங்களின் அனுமதியோடு இந்தப் பேரவைக்கு அளித்திட விரும்புகிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் காவல் நிலைய சரகம், கிட்டம்பட்டியைச் சேர்ந்த ஜெகன் (வயது 28) என்பவர், மார்ச் 21 அன்று சுமார் 1.30 மணியளவில் தனது இருசக்கர வாகனத்தில் கே.ஆர்.பி. அணை சாலையில் சென்று கொண்டிருந்தபோது, முழுக்கான்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த சங்கர் (அ.இ.அ.தி.மு.க பிரமுகர்) உள்ளிட்ட மூவர், ஜெகனை வழிமறித்து ஆயுதங்களால் தாக்கியதில் ஜெகன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். இதுதொடர்பாக, காவேரிப்பட்டினம் காவல் நிலையத்தில்

வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இதுகுறித்த விசாரணையில், கல்லூரி ஒன்றில் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவியான சங்கரின் மகள் சரண்யாவை, டைல்ஸ் பதிக்கும் தொழிலாளியான ஜெகன் காதலித்து, பெண் வீட்டாரின் எதிர்ப்பை மீறி வீட்டைவிட்டு அழைத்துச் சென்று, 26.01.2023 அன்று கோவிலில் வைத்துத் திருமணம் செய்து கொண்டதாகத் தெரிகிறது. இதனால் ஆத்திரமுற்ற சங்கர் உள்ளிட்டோர் இச்சம்பவத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். சங்கர் காவல் துறையினரால் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். கொலையில் சம்பந்தப்பட்டவர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர், அவதானப்பட்டி அ.தி.மு.க செயலாளர் என்பது காவல் துறையினரால் உறுதி செய்யப்பட்டிருக்கிறது. நடைபெற்று வரும் தி.மு.க. ஆட்சியில் இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறாதவண்ணம் உரிய நடவடிக்கைகளும், விழிப்புணர்வுப் பணிகளும் காவல் துறை சார்பில் மாவட்ட நிருவாகத்தின் சார்பிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சமூகநீதி காக்கும் மண்ணாக விளங்குகின்ற தமிழ்நாட்டில் இதுபோன்ற நிகழ்வுகள் நடைபெறாத வண்ணம் அரசியலுக்கு அப்பாற்பட்டு நாம் அனைவரும் ஒருங்கிணைந்து மனிதநேய அடிப்படையில், சமூக நல்லிணக்கத்தைப் பேணிக் காத்திட வேண்டுமென இந்த மாமன்றத்திலுள்ள அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களையும் வேண்டிக் கேட்டு, இந்த விளக்கத்தை அளித்து அமைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்வு குறித்து மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுப்பிய கவன ஈர்ப்புக்கு,அளித்த பதில் – 23.03.2023

சட்டம் ஒழுங்கைப் பேணுவதும், மக்களைக் காப்பதும் அரசாங்கத்தின் மிக முக்கியமான கடமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மிகவும் கனத்த இதயத்தோடு இந்த மாமன்றத்தில் நான் நின்று கொண்டு இருக்கிறேன்!

இணையவழி சூதாட்டத்தில் ஈடுபட்டு, அதிகப்படியான பணத்தை இழந்ததன் காரணமாக மனமுடைந்து, இதுவரை 41 பேர் தற்கொலை செய்து கொண்ட துயரமான நிகழ்வுகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறதே என்ற வேதனையோடுதான் எனது உரையை நான் தொடங்குகிறேன்.

சென்னையைச் சேர்ந்த சுரேஷ்குமார் என்ற இளைஞர், ஆன்லைன் ரம்மி சூதாட்டத்தில் ரூ.17 இலட்சம் வரை

இழந்து, அந்தக் கடனைக் கட்ட முடியாமல் தற்கொலை செய்து கொண்டார். அவர் மரணத்துக்கு முன்னால் ஒரு கடிதத்தையும் எழுதி வைத்துவிட்டு, இறந்து போயிருக்கிறார். "தயவு செய்து ஆன்லைன் ரம்மியை தடை செய்யுங்கள்; என்னைப்போல் பலரும் தங்களது குடும்பத்தை அனாதையாக விட்டுவிட்டுச் செல்லக் கூடாது. இத்தகைய நிலையாருக்கும்வரக்கூடாது"என்றுஅவர்குறிப்பிட்டுள்ளார். "எனது தற்கொலையே கடைசி தற்கொலையாக இருக்கட்டும்" என்று எழுதி வைத்துவிட்டு, சென்னையைச் சேர்ந்த சுரேஷ்குமார் தற்கொலை செய்துள்ளார்.

நாளுக்கு நாள் இந்த மரணங்கள் நம்முடைய கண்ணுக்கு முன்னால் நடக்கின்றன. இதனைத் தடுக்க வேண்டிய கடமையும், பொறுப்பும் சட்டத்தைக் கையில் வைத்திருக்கக்கூடிய இந்த அரசுக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்பை உணர்ந்துதான், இணையவழி சூதாட்டத்தைத் தடுக்க புதிய சட்டம் இயற்றுவது தொடர்பாக, தமிழ்நாடு அரசுக்கு அறிவுரை வழங்குவதற்காக, சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் மரியாதைக்குரிய கே. சந்துரு அவர்கள் தலைமையில் ஒரு குழுவை தமிழ்நாடு அரசின் சார்பில் அமைத்தோம். அரசின் சார்பில் அமைக்கப்பட்ட இக்குழு 27.06.2022 அன்று தனது அறிக்கையினை என்னிடம் வழங்கியது. அந்த அறிக்கை அதே நாளில் அமைச்சரவைக் குழுவின் பார்வைக்காக வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பள்ளி செல்லும் மாணவர்களுக்கிடையே, இணையவழி விளையாட்டு

எந்தளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது என்பதைப் புரிந்துகொள்வதற்காக, பள்ளிக்கல்வித்துறை ஜூலை 2022-இல் ஒரு கணக்கெடுப்பு நடத்தியது. இந்தக் கணக்கெடுப்பில் தமிழ்நாட்டிலுள்ள 2,04,114 அரசுப் பள்ளி ஆசிரியர்களிடம் கருத்து கோரப்பட்டது. மாணவர்களின் ஒருமுகப்படுத்தும் திறனில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக 74 விழுக்காடு ஆசிரியர்கள் சொன்னார்கள். மாணவர்களின் நுண்ணறிவு ஈவு, எழுதும் திறன் மற்றும் படைப்பாற்றலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாக 64 விழுக்காடு ஆசிரியர்கள் சொன்னார்கள். மாணவர்களின் தன்மதிப்புத் திறன் குறைந்து காணப்படுவதாகவும், மாணவர்கள் கோபத்தை வெளிப்படுத்துவதாகவும், மாணவர்களிடையே ஒழுக்கக் குறைபாடு இருப்பதாகவும் 75 விழுக்காட்டிற்கு மேலான ஆசிரியர்கள் சொன்னார்கள்.

இணையதள விளையாட்டைத் தடுப்பது தொடர்பாக அரசால் இயற்றப்பட்ட, உத்தேசிக்கப்பட்டுள்ள சட்டம் குறித்து பொதுமக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர்கள், மனநல ஆலோசகர்கள், சமூக ஆர்வலர்கள், இணையவழி விளையாட்டுத் தொழில் நிறுவனர்கள் ஆகியோரிடம் 07.08.2022 அன்று கருத்துக்கள் கேட்கப்பட்டது. பொதுமக்களிடமிருந்து 10,735 மின்னஞ்சல்கள் பெறப்பட்டன. அதில், 10,708 மின்னஞ்சல்களில், இணையதள சூதாட்டத்தையும், இணையதள ரம்மி விளையாட்டையும் தடை செய்வதற்கு ஆதரவாக கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. 27 மின்னஞ்சல்களில் மட்டுமே தடை செய்வதற்கு எதிராக கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணையதள விளையாட்டுத் தொழில் நிறுவனங்களின் பிரநிதிகள், அரசியல் கட்சிப் பிரமுகர்கள், சமூக சிந்தனையாளர்கள், வழக்குரைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் ஆகியோருடன் 11.08.2022 மற்றும் 12.08.2022 ஆகிய நாட்களில் உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் கலந்தாலோசனைக் கூட்டம் நடத்தி, கருத்துக்கள் பெறப்பட்டன.

சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுப் பெற்ற நீதியரசர் திரு. கே. சந்துரு குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையிலும், பள்ளிக் கல்வித்துறையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பு அடிப்படையிலும், இணையதள விளையாட்டு உரிமையாளர்கள் மற்றும் இதர தரப்பினரிடையே நடத்தப்பட்ட ஆலோசனையின்படியும், பொதுமக்களின் கருத்துக்களின் அடிப்படையிலும், ஒரு வரைவு அவசரச் சட்டம் தயாரிக்கப்பட்டு 26.09.2022 அன்று அமைச்சரவையில் ஒப்புதல் பெறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி ஒழுங்குபடுத்துதல் அவசரச் சட்டம், 2022, மாண்புமிகு ஆளுநர் அவர்களால் அக்டோபர் 1, 2022 அன்று பிரகடனப்படுத்தப்பட்டது. இது தமிழ்நாடு அரசின் அரசிதழின் பகுதி IV, பிரிவு2இல் அக்டோபர் 3, 2022இல் வெளியிடப்பட்டது.

அதன்பிறகு, மேற்கண்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக ஒரு சட்டமுன்வடிவு தயாரிக்கப்பட்டது. அதற்கு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும்

இணையவழி ஒழுங்குப்படுத்துதல் வரைவு சட்டமுன்வடிவு, 2022 என்று பெயர். தமிழ்நாடு சட்டமுன்வடிவு எண்.53/2022 என்ற இந்தச் சட்டமானது கடந்த 19.10.2022 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக 26.10.2022 அன்று சட்டத் துறையால் அனுப்பப்பட்டது. இதற்கு உடனடியாக ஒப்புதல் அளிக்காமல் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் 23.11.2022 அன்று சில விளக்கங்களைக் கேட்டிருந்தார். இதையடுத்து அடுத்த 24 மணி நேரத்தில் உரிய விளக்கம் அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களும் 01.12.2022 அன்று ஆளுநர் அவர்களை நேரில் சந்தித்து மீண்டும் விளக்கத்தை அளித்தார்.

ஆனால், சட்டப்பேரவையில் நிறைவேற்றி அனுப்பிய மசோதாவை 131 நாட்கள் கழித்து, சில குறிப்புகளுடன் 06.03.2023 அன்று சட்டப்பேரவைத் தலைவர் அவர்களுக்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் திருப்பி அனுப்பியுள்ளார். மாண்புமிகு ஆளுநர் அவர்கள் எழுப்பியுள்ள கேள்விகளும், அதற்கான பதில்களும் அமைச்சரவைக் கூட்டத்தின் பார்வைக்கு வைக்கப்பட்டு, சட்டமன்றக் கூட்டத்தொடரில் மீண்டும் பரிசீலனைக்கு வைக்கும் கருத்துருவானது அமைச்சரவைக் கூட்டத்தில் வைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி ஒழுங்குப்படுத்துதல் வரைவு

சட்டமுன்வடிவானது மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்கு மீண்டும் வைக்கப்பட்டுள்ளது. மீண்டும் மாண்புமிகு ஆளுநர் அவர்களின் ஒப்புதலுக்காக அனுப்பப்படும். இதனை மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டம் அறிவால் மட்டுமல்ல, இதயத்தால் உருவாக்கப்பட்டது சட்டம் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். அரசியல் காரணங்களில், கொள்கைகளில் நமக்குள் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கலாம், அப்படி எழுவது இயற்கையானதுதான். ஆனால், மனித உயிர்களைப் பலி வாங்கும் ஆன்லைன் சூதாட்டத்தை ஒழிப்பதில் இதயமுள்ளவர்கள் யாருக்கும் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது, இருக்கவும் கூடாது. 'எனது மரணம் கடைசியாக இருக்கட்டும்' என்ற சோகக் குரலும், 'என் குடும்பத்துக்கு ஏற்பட்ட பாதிப்பு இன்னொரு குடும்பத்துக்கு ஏற்படக் கூடாது' என்ற அழுகுரலும் இனியொரு முறை இந்த மாநிலத்திலும் எழக்கூடாது. எழுமானால், சட்டத்தின் பொருளும் மாநிலத்தின் அதிகாரமும் நீர்த்துப் போனதன் அடையாளமாக ஆகிவிடும். சட்டம் ஒழுங்கைப் பேணுவதும், மக்களைப் பாதுகாப்பதும், குற்றச் சம்பவங்கள் நிகழாமல் தடுப்பதும், குற்றவாளிகளிடம் இருந்தும் மக்களைக் காப்பதும் மாநில அரசாங்கத்தின் மிக முக்கியமான கடமையாகும்.

மாநிலத்தின் ஆளுகை எல்லைக்குள் உள்ள மக்கள் அனைவரையும் ஒழுங்குப்படுத்தவும், நெறிப்படுத்தவும்,

காக்கவும் மாநில அரசுக்கு உரிமை உண்டு, மீண்டும் சொல்கிறேன் – மாநில அரசுக்கு அந்த உரிமை உண்டு. மாண்புமிகு ஒன்றிய தகவல் ஒளிபரப்பு மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு. அனுராக் தாகூர் அவர்கள், தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன் எழுப்பிய கேள்விக்கு, 21.03.2023 அன்று பதில் அளிக்கையில், பந்தயம் மற்றும் சூதாட்டமானது, அரசியல் சட்டத்தின் 7ஆவது அட்டவணையில் உள்ள மாநில அதிகாரப் பட்டியலின் 34ஆவது பிரிவில் இடம் பெற்றுள்ளதால் இது தொடர்பாக சட்டமியற்றும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு இருக்கிறதென்று மிகத் தெளிவாக நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கிறார்.

மனச்சாட்சியை உறங்கச் செய்து விட்டு எங்களால் ஆட்சி நடத்த முடியாது என்பதை பிரகடனமாகவே இந்த மாமன்றத்தில் தெரிவிக்க நான் விரும்புகிறேன். எந்தச் சட்டத்தின் நோக்கமும் மக்கள் நலன் மட்டும்தான். மக்களைக் காப்பது ஒன்றே சட்டத்தினுடைய கடமை ஆகும். சட்டவியல் என்பதே, சமூக அறிவியல் தான் என்பதை உலகம் முழுவதும் இருக்கும் சட்டமேதைகள் ஒப்புக்கொள்வார்கள். பயன்பாட்டில் நீதி என்பது, அற நீதி (Natural or Moral Justice) என்றும் சட்ட நீதி (Legal Justice) என்றும் பிரிக்கப்பட்டுள்ளது. எனவே நீதிநெறி, ஒழுக்க விதிகளை காப்பாற்றவே சட்டநீதியை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும் இணையவழி ஒழுங்குப்படுத்துதல் வரைவு சட்டமுன்வடிவு, 2022 இம்மாமன்ற உறுப்பினர்கள் முன் வைக்கப்படுகிறது.

இனியொரு உயிர் பறிக்கப்படாமல்; இனியொரு குடும்பம் நடுத்தெருவில் நிற்காமல்; இனியொரு நாள்கூட இந்த ஆன்லைன் அநியாயம் தொடராமல் இருக்க அனைத்து உறுப்பினர்களும் இந்தச் சட்ட முன்வடிவை ஆதரிக்க வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
தமிழ்நாடு இணையவழி சூதாட்டத்தைத் தடை செய்தல் மற்றும்
இணையவழி விளையாட்டுக்களை ஒழுங்குமுறைப்படுத்துதல்
சட்டமுன்வடிவு, 2022-ஐ, மறுஆய்வு செய்திடக் கோரி,
ஆற்றிய உரை – 23.03.2023

ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு "மகளிர் உரிமைத் தொகை" வழங்கும் திட்டம்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள், மகளிர் உரிமைத் தொகை பற்றிப் பேசுகிறபோது, மனந்திறந்துப் பாராட்டினார். ஆனால், அதே நேரத்தில், கிடைக்காதவர்களின் நிலை என்ன என்று ஒரு கேள்விக்கணையையும் அவர் தொடுத்து, அந்தப் பிரச்சினையையும் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறார். இது இந்த அவையிலே மட்டுமல்ல; வெளியிலேயும், அதிலும் குறிப்பாக, பத்திரிகைகளிலும், ஊடகங்களிலும், அதையும் தாண்டி, பல சமூகவலைதளங்களிலும் இதுகுறித்து பல்வேறு விவாதங்கள் - இதைப்பற்றி விமர்சனங்கள் செய்தும், பாராட்டியும், புகழ்ந்தும் தொடர்ந்து பேசியும், எழுதியும்

கொண்டிருக்கிறார்கள். அதற்கெல்லாம் ஒரு நீண்ட விளக்கத்தை நான் இந்த அவையில் பதிவு செய்வது என் கடமையென கருதுகிறேன்.

சுயமரியாதைக் கொள்கையில் தந்தை பெரியார், இனமான எழுச்சியில் அறிவுச்சுடர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா, நவீன தமிழகத்தைக் கட்டமைப்பதில் நம்முடைய தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் ஆகியோர் வகுத்தளித்த பாதையில், தமிழ்நாட்டை வளமான, வலிமையான மாநிலமாக உருவாக்கிடவும், அனைத்துத் துறைகளிலும் முன்னணி மாநிலமாகத் திகழ்ந்திடச் செய்திடவும், நாள்தோறும் எண்ணற்ற மக்கள்நலன் சார்ந்த திட்டங்களை நமது அரசு தொடர்ந்து செயல்படுத்தி வருவதை இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு அறிவீர்கள்.

சமூகம், அரசியல், பொருளாதாரம், மக்கள் மேம்பாடு அனைத்திலும் நவீனமயம் என்கிற திராவிட மாடல் ஆட்சியை நாம் நடத்தி வருகிறோம். ஆட்சிப் பொறுப்பேற்றது முதல், தேர்தல் அறிக்கையில் தெரிவித்த வாக்குறுதிகளை நிறைவேற்றிடும் வகையிலான அறிவிப்புகளை மட்டுமல்லாமல், அறிவிக்காத பல உன்னதமான திட்டங்களையும் இந்த அரசு செயல்படுத்தி வருகிறது என்பதை இந்தப் பேரவையில் உள்ள மாண்புமிகு உறுப்பினர்களும், இந்த நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள்.

அந்தவகையில், இந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், இந்த நூற்றாண்டின் மகத்தான திட்டமான 'மகளிர் உரிமைத் தொகை' குறித்த அறிவிப்பு வெளியாகி, நாடெங்கும், ஏன், உலகெங்கும் இருக்கக்கூடிய பொருளாதார வல்லுநர்கள் அனைவருடைய கவனத்தையும்

அது ஈர்த்துள்ளது. இந்த மாபெரும் திட்டத்தினைச் செயல்படுத்தும் விதம் குறித்தும், அதில் பயன் பெறப்போகக்கூடிய குடும்பத் தலைவிகளின் தேர்வு குறித்தும், இம்மாமன்ற உறுப்பினர்கள் சிலர் தெரிவித்த கருத்துக்களையொட்டியும், அதற்குத் தேவையான விளக்கத்தை இந்த அவையில் நான் பதிவு செய்வது என் கடமையாகக் கருதுகிறேன்.

வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப்பார்த்தால், தாய்வழிச் சமூக முறைதான் மனிதகுலத்தை முதலில் வழிநடத்தி வந்திருக்கிறது என்ற உண்மை தெரியவரும். உழவுக் கருவிகளைக் கண்டுபிடித்து, வேளாண் சமூகமாக மாறியபோதுகூட, பெண்களின் உழைப்பு ஆண்களுக்கு நிகராகவே அமைந்திருந்தது. ஆனால், காலப்போக்கில், மதத்தின் பெயராலும், பழமையான மரபுகளின் பெயராலும், பல்வேறு ஆதிக்க வர்க்கத்தாலும் பெண்கள் வீட்டுக்குள் முடக்கப்பட்டார்கள். அவர்களுக்குக் கல்வியறிவு மறுக்கப்பட்டது. பெண்குலத்தின் உழைப்பு நிராகரிக்கப்பட்டது. பூட்டிய இரும்புக் கூட்டின் கதவினைத் திறந்து, பெண் அடிமைத்தனத்தைத் தகர்த்து, அவர்களுக்கான சமூக, பொருளாதார சுதந்திரத்தை மீட்க எத்தனையோ சமூக சீர்திருத்தவாதிகள் முன்வந்தாலும், இருபதாம் நூற்றாண்டினுடைய தந்தை பெரியாரின் சுயமரியாதை இயக்கமே வீறுகொண்ட போராட்டங்களின் மூலமாக பெண் விடுதலைக்குப் பாதை அமைத்தது. நீதிக்கட்சி ஆட்சி தொடங்கி, கடந்த ஒரு நூற்றாண்டுக் காலம் திராவிட இயக்கம் அயராது பணியாற்றியதன் விளைவு, இன்று பள்ளி, கல்லூரிப் படிப்புகளில் மாணவிகள் அதிகம் நுழைந்துள்ளார்கள்.

அதுமட்டுமல்ல அவர்கள் அதிக மதிப்பெண்கள் வாங்குவதைப் பார்க்கும்போது பெருமையாக இருக்கிறது. அரசுப் பணியாளர் தேர்வுகளில் பெண்கள் அதிகம் தேர்ச்சி பெறுவது தமிழ்ச் சமூகத்தின் முதிர்ச்சியைக் காட்டுகிறது. இன்றளவும் ஏழை மக்களின் குடும்பங்களிலும், கிராமப் பொருளாதாரத்தைச் சுமக்கும் முதுகெலும்பாகவும் பெண்கள் இருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. வேலையிலும், ஊதியத்திலும், சமூகப் பொறுப்பில் இடைவெளியும், வேறுபாடும் ஒருசில இடத்தில் இருந்தாலும், ஆணின் உழைப்புக்கு எந்தவிதத்திலும் பெண்கள் குறைந்தவர்கள் அல்ல என்பது நம் கண்முன்னால் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

சமூகத்தில் வெற்றி பெறக்கூடிய ஒவ்வொரு ஆணுக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்று கூறுவதுண்டு. உண்மையில், ஒவ்வொரு நாளும் தன் திறனுக்கேற்ற பணிபுரிந்து, பொருள் ஈட்டும் ஒவ்வொரு ஆணுக்குப் பின்னாலும், தன் தாய், சகோதரி, மனைவி என அந்த ஆணின் வீட்டுப் பெண்களுடைய பல மணிநேர உழைப்பு மறைந்து இருக்கிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது? ஒரு ஆணின் வெற்றிக்காகவும், தங்கள் குழந்தைகளின் கல்வி, உடல்நலம் காக்கவும் இந்த சமூகத்திற்காகவும் வீட்டிலும், வெளியிலும் ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரங்கள் அவர்கள் உழைத்து இருப்பார்கள்? அதற்கெல்லாம் ஊதியம் கணக்கிட்டு இருந்தால், இந்நேரம் நம் நாட்டில் குடும்பச் சொத்துகள் அனைத்திலும் சமமாகப் பெண்கள் பெயரும், சட்டம் இயற்றாமலேயே இடம் பெற்றிருக்கும்.

இப்படிக் கணக்கில் கொள்ளப்படாத பெண்களின் உழைப்பை முறையாக அங்கீகரிக்கத்தான் 'மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்' அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அரசு அங்கீகரித்தால், ஆண்களை உள்ளடக்கிய இந்தச்

சமூகமும் பெண்களுக்கான சமஉரிமையை வழங்கிடும் நிலை விரைவில் உருவாகிவிடும் என்று நமது அரசு உறுதியாக நம்புகிறது. எனவேதான், இந்தத் திட்டத்திற்கு மகளிருக்கான உதவித் தொகை என்று இல்லாமல் 'மகளிர் உரிமைத் தொகை' என்று கவனத்துடன் பெயரிடப்பட்டு இருக்கிறது.

Universal Basic Income என்ற பெயரில் உலகில் பல நாடுகளில் சோதனை முறையில், குறிப்பிட்ட சில பகுதிகளில், ஒரு சில சமூகப் பிரிவினரிடம் மட்டும் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. அப்படிப் பரிசோதனை அடிப்படையில் நிறைவேற்றப்பட்ட திட்டத்தின் மூலமாகவே, பல குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்திருப்பதாகப் பொருளாதார ஆய்வாளர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டத்தின் மூலம், வறுமை பாதியாகக் குறைந்திட வாய்ப்பு உண்டு என்றும், கிடைக்கும் நிதியைப் பெண்கள் தங்கள் குழந்தைகளின் கல்விக்கும், ஊட்டச்சத்து மற்றும் மருத்துவச்செலவு செய்திடவும் முன்னுரிமை தருகிறார்கள் எனவும், சிறு சிறு தொழில்களைச் செய்ய முன்வருகிறார்கள் எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இவை அனைத்துக்கும் மேலாக, தன்னம்பிக்கை பெற்றுள்ளார்கள் என்றும் சொல்லப்படுகிறது. பரிசோதனை முயற்சியாக உலகில் சில நாடுகளில் ஆங்காங்கே நடைமுறைப்படுத்திய திட்டத்திற்கே இவ்வளவு பயன்கள் கிடைக்கின்றன என்றால், தமிழ்நாட்டில் செயல்படுத்தப் போகும் இந்த மாபெரும் முயற்சி, எதிர்காலத்தில் தமிழ்ச் சமூகத்தில் உருவாக்கப் போகும் பயன்களை, இந்த மாமன்ற உறுப்பினர்கள் ஒரு நிமிடம் எண்ணிப் பார்க்க வேண்டுகிறேன்.

இந்த 'மகளிர் உரிமைத் தொகை' வழங்கும் திட்டத்திற்காக, இந்த நிதிநிலை அறிக்கையில் ரூ.7,000

கோடி ஒதுக்கப்பட்டு இருப்பதையொட்டி, எவ்வளவு பேர் பயன்பெறுவார்கள் என்று பலர் மனக்கணக்குப் போட்டு வருகிறார்கள் என்பதை நாம் பார்த்து வருகிறோம். இதுகுறித்து என்னுடைய கருத்தைப் பதிவு செய்வதற்கு முன்னால், ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஊடகம் ஒன்றில், “இந்தத் திட்டத்தின் உதவியைச் செல்வந்தர்களுக்கும், வருமான வரி செலுத்துபவர்கள், அரசு ஊழியர்கள் என அனைவருக்கும் கொடுக்கலாமா?” என்று கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, ‘இல்லாத ஏழை மக்களுக்குக் கொடுத்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும்’ என்று ஒரு பெண்மணி பதில் சொல்கிறார்.

இந்தத் திட்டம் யாருக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று பொதுமக்களுக்கே தெரிகிறது. ‘பகிர்தல் அறம்’ என்றும்; ‘பசித்துண்டு பல்லுயிர் ஓம்புதல்’ என்றும்; தமிழ் மரபின் தாக்கத்தால் உருவான நலத் திட்டங்களின் நோக்கமும், தேவையானவர்களுக்குத் தேவையான உதவியை, உரிய நேரத்தில் தேடித் தேடி வழங்குவதில்தான் இருக்கும். ‘அனைவருக்கும் வீடு’ என்ற திட்டம் அறிவிக்கப்பட்டால், வீடு இல்லாதவர்களுக்கு ஓர் கனவு இல்லம் அமைத்துத் தருவது என்று பொருள். ‘அனைவருக்கும் நிலம்’ என்றொரு திட்டம் என்றால், நிலமற்ற கூலித் தொழிலாளர்கள், உழுபவர்களுக்கு நிலம் சொந்தம் என்பதுதான் அடிப்படை நோக்கம். ‘முதியோர் ஓய்வூதியம்’ என்றால், ஆதரவற்ற முதியோரின் நலன் காக்க முனையும் திட்டம் என்று பொருள். அனைவருக்கும் வேலைவாய்ப்பு வழங்கும் திட்டம் என்றால், வேலைவாய்ப்பற்றவர்களுக்கு முன்னுரிமை என்று பொருள்.

அந்தவகையில், இந்த ‘மகளிர் உரிமைத் தொகைத் திட்டம்’ இரண்டு நோக்கங்களைக் கொண்டது. பிரதிபலன் பாராமல் வாழ்நாளெல்லாம் ஓயாமல் உழைத்துக் கொண்டிருக்கும் பெண்களின் உழைப்புக்குக் கொடுக்கும்

அங்கீகாரம் முதன்மையானது. அடுத்து, ஆண்டுக்கு ரூ.12 ஆயிரம் உரிமைத் தொகை என்பது, பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உறுதுணையாக இருந்து, வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சுயமரியாதையோடு சமூகத்தில் அவர்கள் வாழ்வதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என்பதாகும்.

மகளிரின் சமூகப் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக அறிவிக்கப்பட்டிருக்கும் மாதம் ரூ.1,000 என்பது, தேவைப்படும் குடும்பத் தலைவிகள் அனைவருக்கும் அவரவர் வங்கிக் கணக்கில் நேரடியாகச் செலுத்தப்படும். நடைபாதையில் வணிகம் செய்திடும் மகளிர், அதிகாலையில் கடற்கரை நோக்கி விரைந்திடும் மீனவ மகளிர், கட்டுமானத் தொழிலில் பணிபுரியும் மகளிர், சிறிய கடைகள், வணிகம் மற்றும் சிறுதொழில் நிறுவனங்களில் சொற்ப ஊதியத்தில் பணிபுரியும் மகளிர், ஒரே நாளில் ஒன்றுக்கு மேற்பட்ட இல்லங்களில் பணிபுரியக்கூடிய பெண்கள் என பல்வேறு வகைகளில் தங்கள் விலைமதிப்பில்லா உழைப்பைத் தொடர்ந்து வழங்கி வரும் பெண்கள் இந்தத் திட்டத்தால் பயன்பெறுவார்கள். இந்தத் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள் விரைவில் வெளியிடப்படும்.

இதனைச் செய்ய முடியுமா? இதற்கு நிதி இருக்குமா என்றெல்லாம், கேள்விகளை எழுப்பி, எங்கே திராவிட முன்னேற்றக் கழக அரசு இதனைச் செய்துவிடுமோ என்ற தங்கள் அச்சத்தை பல்வேறு வகைகளிலே வெளிப்படுத்தி வந்தவர்களுக்குப் பதிலளிக்கக்கூடிய விதமாக, தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட சமூகநீதி திட்டங்களிலேயே ஒரு மாபெரும் முன்னெடுப்பாக, வரலாற்றில் விளங்கவுள்ள, இந்த மகத்தான 'மகளிர் உரிமைத் தொகை' வழங்கும் திட்டம் ஏறத்தாழ ஒரு கோடி குடும்பத் தலைவிகளுக்கு,

மாதம் ரூ.1,000 வழங்கிடும் வகையில் அமைந்திடும் என்பதை இந்த மாமன்றத்தில் மிகுந்த பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூகத்தின் சரிபாதியான பெண்களுக்குச் சமூக விடுதலை பெற்றுத் தந்தது திராவிட இயக்கம் என்றால், பொருளாதாரச் சமத்துவத்தை வழங்குவதுதான் திராவிட மாடல் அரசு என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். மாதம் ரூ.1,000 தங்கள் வாழ்வை சிறிதேனும் மாற்றிவிடும் என நம்பும் எந்தக் குடும்பத் தலைவியையும், மனிதநேய அடிப்படையிலான பெண் உரிமையை காக்கக்கூடிய எனது தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு கைவிட்டுவிடாது என்ற உறுதியை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
மகளிர் உரிமைத் தொகை குறித்து,
அளித்த விளக்கம் – 27.03.2023

காவல்துறை சுதந்திரமாகவும், விரைவாகவும் செயல்பட்டு குற்றவாளிகள் கைது செய்யப்படுகிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அரசினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையிலே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இசக்கி சுப்பையா அவர்கள், திரு. ஜவாஹிருல்லா அவர்கள், திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள், திரு. அருள் அவர்கள், திரு. முகம்மது ஷாநவாஸ் அவர்கள், திரு. நாகைமாலி அவர்கள், திரு. வேல்முருகன் அவர்கள் உள்ளிட்ட பலர் இதுகுறித்து தங்களது கருத்துக்களைப் பதிவு செய்திருக்கிறார்கள்.

அ.தி.மு.க. பெரம்பூர் தெற்குப் பகுதி செயலாளர் இளங்கோவன் என்ற வியாசை இளங்கோ நேற்று முன்தினம் 5 பேர் கொண்ட கும்பலால் கத்தியால்

வெட்டப்பட்டு, ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே இறந்து விட்டதாக அறிவிக்கப்பட்டார். அவர் மனைவி திருமதி சுமலதா கொடுத்த புகாரின் அடிப்படையில், செம்பியம் காவல் நிலையத்தில் கொலை வழக்குப் பதிவு செய்யப்பட்டு புலன்விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், கொலையுண்ட இளங்கோ, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, சஞ்சய் என்பவரை பொது வெளியில் வைத்துத் தாக்கியதாகவும், அந்த முன்விரோதம் காரணமாக சஞ்சய் இந்தக் கொலைத் திட்டத்தை தீட்டியுள்ளதும் தெரிய வந்தது. காவல் துறையினர் இரவோடு இரவாக இரண்டு மணி நேரத்தில், வழக்கில் தொடர்புடைய சஞ்சய், கணேசன், கவுதம், வெங்கடேசன், அருண்குமார் ஆகிய 5 குற்றவாளிகளை கைது செய்துள்ளார்கள். இவர்களில் ஒருவர் இளஞ்சிறார் குற்றவாளி.

மேலும், கொலை செய்யப்பட்ட இளங்கோ, போதைப் பொருளுக்கு எதிராக இருந்ததாகச் சொல்லப்படுவது குறித்து விசாரணையில் இதுவரையில் தெரியவில்லை. இச்சம்பவம் குறித்த புலன்விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட இங்கே உரையாற்றிய மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அம்பாசமுத்திரம் ஏ.எஸ்.பி. விவகாரத்தைப் பொறுத்தமட்டில், குற்றச் செயலில் ஈடுபட்டு, விசாரணைக்கு அழைத்து வரப்பட்ட சிலருடைய பற்களைச்

சேதப்படுத்தியதாக குற்றச்சாட்டு வந்தவுடன், சேரன்மாதேவி சார்-ஆட்சியர் / உட்கோட்ட நடுவர் தலைமையில் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, விசாரணை தொடங்கப்பட்டது. அந்த ஏ.எஸ்.பி. காத்திருப்போர் பட்டியலுக்கு உடனடியாக மாற்றப்பட்டார்.

காவல் நிலையங்களில் மனித உரிமை மீறல் சம்பவங்களில் எந்தவிதமான சமரசங்களையும் இந்த அரசு மேற்கொள்ளாது என்பதை இந்த அவையில் நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன். அந்த வகையில், இந்த விரும்பத்தகாத சம்பவத்தில் ஈடுபட்ட அம்பாசமுத்திரம் கோட்ட உதவி காவல் கண்காணிப்பாளரைப் பணியிடை நீக்கம் செய்ய உத்தரவிட்டிருக்கிறேன் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், முழுமையான விசாரணை அறிக்கை வரப்பெற்றவுடன், இச்சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் மீது உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக உறுதியளிக்கிறேன். இவையெல்லாமே சம்பவம் நடைபெற்ற உடனேயே இந்த அரசு எடுத்த விரைவான நடவடிக்கைகள் ஆகும். தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்ற கடந்த 2 ஆண்டுகளில், ஜாதி மோதல்கள், ரவுடிகளால் நடத்தப்பட்ட கொலைகள் பெருமளவில் குறைக்கப்பட்டு உள்ளன. 2019இல், கடந்த அ.தி.மு.க. ஆட்சியில், 1,670 கொலைச் சம்பவங்கள் நடைபெற்றன. தி.மு.க. ஆட்சியில், அதாவது, 2022இல் அது 1,596ஆகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது, ஆண்டு ஒன்றுக்கு 74 கொலைகள் இந்த ஆட்சியில்தான் குறைக்கப்பட்டுள்ளன. அப்படிச் சொல்வதை விட அது தடுக்கப்பட்டிருக்கிறது.

நமது ஆட்சியைப் பொறுத்தவரை, காவல் துறை சுதந்திரமாகவும், விரைவாகவும் செயல்பட்டு, கொலையாளிகள் யாராக இருந்தாலும், கொலை செய்யப்பட்டவர்கள் யாராக இருந்தாலும், அதில் எந்தவிதமான பாரபட்சமோ, அரசியலோ எதுவும் பார்க்காமல், உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, கொலையாளிகள் உடனடியாக கைது செய்யப்படுகிறார்கள் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்து, என் விளக்கத்தை நிறைவு செய்கிறேன்.

வணக்கம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
சட்டம்-ஒழுங்கு தொடர்பான கவன ஈர்ப்புக்கு
ஆற்றிய உரை – 29.03.2023

விழுப்புரம் சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் மேல்விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரத்தில் இஸ்லாமிய நபர் கத்தியால் தாக்கப்பட்டு உயிரிழந்தது பற்றிய அந்தச் செய்தியை, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவக்குமார் அவர்களும் இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை நான் தங்கள் வாயிலாகத் தெரிவிக்க விரும்புகிறேன்.

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் மேற்கு காவல் நிலைய சரகம், G.R.P தெருவைச் சேர்ந்தவரும், எம்.ஜி ரோட்டில் பழக்கடை நடத்தி வருபவருமான ஞானசேகர் என்பவருக்கு சாந்தி என்ற மனைவியும், ராஜசேகர், வல்லரசு என்ற இரண்டு மகன்களும் உள்ளனர். இந்நிலையில், ஞானசேகருக்கு

வேறோரு பெண்ணிடம் தொடர்பு இருப்பதாகவும், அதனால் பழக்கடையில் வரும் வருமானத்தைக் குடும்பத்திற்குத் தருவதில்லை என்றும், சாந்தி தனது மகன்களிடம் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, 29.03.2023 அன்று மாலை, ராஜசேகர் மற்றும் வல்லரசு ஆகியோர் தனது தந்தையிடம் இது குறித்துக் கேட்க பழக்கடைக்குச் சென்றபோது, அங்கு அவர் இல்லாததால், அங்கிருந்தவர்களிடம் கேட்டு பிரச்சினை செய்திருக்கிறார்கள். அப்போது அப்பிரச்சினையில் தலையிட்ட இப்ராஹிம் என்பவரை வல்லரசு மற்றும் ராஜசேகர் ஆகியோர் கத்தியால் குத்தி, காயம் ஏற்படுத்தியதாகத் தெரிகிறது. இச்சம்பவத்தில் காயம்பட்ட இப்ராஹிம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லக்கூடிய வழியில் உயிரிழந்திருக்கிறார். இச்சம்பவத்தில் ஈடுபட்ட வல்லரசு மற்றும் ராஜசேகர் ஆகியோர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். காவல் துறையினர் மேல் விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

இது தனிப்பட்ட குடும்பப் பிரச்சினையின் காரணமாக ஏற்பட்ட தகராறின் போது, அங்கு தடுக்க வந்த நபர், துரதிருஷ்டவசமாக தாக்குதலுக்கு உள்ளாகி, உயிரிழந்திருக்கக்கூடிய சம்பவம் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
விழுப்புரத்தில் இஸ்லாமிய நபர் கத்தியால் தாக்கப்பட்டு
உயிரிழந்தது தொடர்பாக அளித்த பதில் – 30.03.2023

தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் சட்டரீதியான நடவடிக்கை கட்டாயம் எடுக்கப்படும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலாஷேத்திரா பவுன்டேஷன் விவகாரம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். எஸ். பாலாஜி, திரு. தி. வேல்முருகன், திரு. கு. செல்வப்பெருந்தகை, திரு. ட்டி. இராமச்சந்திரன் ஆகியோர் அவையினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய வகையிலே இங்கே உரையாற்றியிருக்கிறார்கள். அதற்குரிய விளக்கத்தை உங்கள் அனுமதியோடு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஒன்றிய அரசினுடைய கலாச்சாரத் துறையின்கீழ் இயங்கிக் கொண்டிருக்கக்கூடிய, கலாஷேத்திரா பவுன்டேஷன் விவகாரத்தைப் பொறுத்தவரை, தேசிய

மகளிர் ஆணையம் முதலில் தானாக முன்வந்து “பாலியல் தொல்லை” என டுவிட்டர் செய்தி போட்டு, 21.03.2023 அன்று நடவடிக்கை எடுக்கக் கோரி டி.ஜி.பி.-க்குக் கடிதம் எழுதியது. இது தொடர்பாக, கலாஷேத்திரா பவுன்டேஷன் இயக்குநர், நமது மாநில காவல் துறைத்தலைவரைச் சந்தித்து, தங்களது நிறுவனத்தில் பாலியல் புகார் ஏதும் இல்லை என்று தெரிவித்தார். பிறகு தேசிய மகளிர் ஆணையமே “நாங்கள் டைம்ஸ் ஆப் இந்தியா செய்தி அடிப்படையில் அவ்வாறு விசாரித்தோம்; அந்த விசாரணையை முடித்து வைத்து விட்டோம்” என 25.03.2023 அன்று டி.ஜி.பி.-க்குக் கடிதம் எழுதி தெரிவித்திருக்கிறார்கள்.

பின்னர், கடந்த 29.03.2023 அன்று மீண்டும் தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவரே வந்து கலாஷேத்திராவில் இருக்கக்கூடிய 210 மாணவிகளிடம் விசாரித்து விட்டுச் சென்றுள்ளார். அப்போது காவல் துறை தங்களுடன் வரத் தேவையில்லை என்றும் கூறியிருக்கிறார். இந்த விவகாரத்தில் காவல் துறைக்கு இதுவரை எழுத்துப்பூர்வமான புகார் ஏதும் கிடைக்கப் பெறவில்லை. இந்த நிலையில், மாணவிகள் நடத்திய உள்ளிருப்புப் போராட்டத்தின் விளைவாக, கலாஷேத்திரா பவுன்டேஷனில் உள்ள கல்லூரிக்கு விடுமுறை அளிக்கப்பட்டு, விடுதிகளை விட்டு மாணவிகள் வெளியேற வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள்.

இந்த விவகாரம் எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டவுடன், மாவட்ட ஆட்சித் தலைவரோடு தொடர்பு

கொண்டு, விவரங்களை அறிந்தேன். இந்த விஷயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பாக மேலும் விவரங்களை அறிவதற்காக, வருவாய்க் கோட்ட அலுவலர், வட்டாட்சியர், காவல் இணை ஆணையர், துணை ஆணையர் மற்றும் அலுவலர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டு, விசாரணை மேற்கொண்டார்கள்.

இன்று காலையில், மீண்டும் வருவாய்த் துறை மற்றும் காவல் துறை உயர் அலுவலர்கள் அடங்கிய குழுவினர் அங்கு சென்று, மாணவிகள் மற்றும் நிருவாகத்தினருடன் பேசி வருகிறார்கள். மேலும், அங்குள்ள மாணவிகளின் பாதுகாப்பிற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, அங்கு ஒரு பெண் ஆய்வாளர் தலைமையில் காவலர்கள் பாதுகாப்பிற்கு நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

அரசைப் பொறுத்தவரை, இந்த விவகாரத்தில் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு, குற்றச்சாட்டு உறுதியானால், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது உரிய சட்டரீதியான நடவடிக்கை கட்டாயம் எடுக்கப்படும் என தங்கள் மூலமாகத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
திருவான்மியூர், கலாஷேத்திரா பவுன்டேஷன்
விவகாரம் குறித்து அளித்த பதில் – 31.03.2023

காவிரி டெல்டா பகுதிகளில் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் தமிழ்நாடு அரசு அனுமதி அளிக்காது

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டு வந்திருக்கக்கூடிய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் விளக்கமாக பதிலளித்திருக்கிறார்கள். எனவே, நான் நீண்ட நேரம் அதுகுறித்து விளக்க வேண்டிய அவசியமில்லை. நீங்களெல்லாம் இந்தச் செய்தியைக் கேட்டு எப்படி அதிர்ச்சிக்கு ஆளானீர்களோ, நானும் அதே உணர்வோடுதான் அதிர்ச்சிக்கு ஆளானேன். இதுகுறித்த செய்தியைப் பார்த்தவுடன் உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை நான் தொடர்பு கொண்டு பேசி, அதற்குப்பிறகு

உடனடியாக மாண்புமிகு பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். அதோடு, நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடந்து கொண்டிருக்கிற காரணத்தால், அங்கே டெல்லியில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழக நாடாளுமன்றக் குழுத் தலைவர் திரு. டி.ஆர்.பாலு அவர்களுக்கு அந்தக் கடிதத்தினுடைய நகலை அனுப்பி, உடனடியாக சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சரைச் சந்தித்து, நம்முடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், நான் மாண்புமிகு இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தை நீங்கள் அவரிடத்திலே தரவேண்டுமென்று உத்தரவிட்டேன். அவரும் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டார்.

இங்கே, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல, சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சர் அவர்கள் வெளியூரில் இருக்கிற காரணத்தால், அவரை நேரில் சந்திக்க இயலாததால், திரு. டி.ஆர். பாலு அவர்கள், அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறார். அவருடன் பேசியபோது, "தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் அனுப்பியிருக்கக்கூடிய கடிதத்திற்கு நிச்சயமாக நாங்கள் மதிப்பு அளிப்போம்; கவலைப்பட வேண்டாம்" என்ற ஓர் உத்தரவாதத்தை ஒன்றிய அமைச்சர் சொன்னதாக ஒரு செய்தியை திரு. டி.ஆர். பாலு அவர்கள் என்னிடத்திலே தெரிவித்திருக்கிறார்கள்.

ஆகவே, நிச்சயமாக சொல்கிறேன் – முதலமைச்சராக மட்டுமல்ல; நானும் டெல்டா மாவட்டத்தைச் சேர்ந்தவன்.

எனவே, இதிலே நான் உறுதியாக இருப்பேன். நீங்களெல்லாம் எப்படி உறுதியாக இருக்கிறீர்களோ, அதைவிட அதிகமாக, அந்த அளவிற்கு நானும் உறுதியாக இருப்பேன். எந்தக் காரணத்தைக் கொண்டும், அதற்கு நிச்சயமாக நம்முடைய தமிழ்நாடு அரசு அனுமதி அளிக்காது; அளிக்காது; அளிக்காது என்பதைச் சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
காவிரி டெல்டா பகுதிகளில் நிலக்கரிச் சுரங்கம் அமைப்பதற்கான
ஏல அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது குறித்த
சிறப்புக் கவன ஈர்ப்புக்கு, அளித்த பதில் – 05.04.2023

மாநில மக்களின் குரலாக விளங்கும் சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு உரிய காலத்திற்குள் ஒப்புதல் அளிக்கவேண்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்த ஆண்டு "ஆளுநர் உரை" கூட்டத்தொடர் நடத்தி முடிக்கப்பட்டு, இன்னும் நிதிநிலை அறிக்கை மற்றும் மானியக் கோரிக்கை தொடர்பான சட்டப்பேரவைக் கூட்டத்தொடர் முடிவதற்குள், இரண்டாவது முறையாக மாண்புமிகு ஆளுநர் பற்றி தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய விரும்பத்தகாத ஒரு சூழலை, இந்த அரசு உருவாக்கவில்லை. ஆனால் மாண்புமிகு ஆளுநர் அவர்கள், அரசியல் சட்டத்தையும் கடந்து, ஓர் அரசியல் கட்சியின் கண்ணோட்டத்துடன் செயல்படுவதால் இப்படியொரு

தீர்மானத்தை இரண்டாவது முறையாக நான் முன்மொழிய வேண்டிய நிர்பந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறார்.

இந்தியாவில் கூட்டாட்சியை உருவாக்கவும், சுயாட்சிக் கொண்டவையாய் மாநிலங்களை மலர வைக்கவும், திராவிட முன்னேற்றக் கழகம் முன்னணிப் படையாகச் செயல்படும் என்று தலைநகர் டெல்லியில் வைத்துப் பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை இம்மாமன்றத்தில் நானும் வழிமொழிகிறேன். இதை உணர வேண்டியவர்கள் உணர வேண்டும்; அதனை உணர்த்துவதற்கான நாளாக இது அமைந்துள்ளது.

"ஆட்டுக்குத் தாடியும், நாட்டுக்கு ஆளுநர் பதவியும் தேவையில்லை" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறிய போதிலும், அதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழிமொழிந்த போதிலும், அந்தப் பதவி இருக்கும்வரை அதற்குரிய மரியாதையைக் கொடுக்க அவர்கள் முதலமைச்சர்களாக இருந்த நேரத்தில் தவறியதில்லை. அவர்களது வழியைப் பின்பற்றி நானும் அதிலிருந்து இம்மியளவும் விலகியதில்லை; இந்த அரசும் தவறியதில்லை.

அனுமந்தய்யா நிருவாகச் சீர்திருத்த ஆணையம் 1969-ல், "கட்சி அரசியல் வேறுபாடு மற்றும் ஒருதலைபட்சமான செயல்பாடுகளின்றி, நம்பிக்கை வைக்கக் கூடியவராக ஆளுநர் இருக்க வேண்டும்" என்று கூறியது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் நியமித்து, மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி தலைமையிலான "ராஜமன்னார் குழு" ஒன்றிய-மாநில அரசு உறவுகள் பற்றி அளித்த அறிக்கையில், "ஆளுநர் பதவியை ஒழிக்க மிக உகந்த தருணம் இது" என்று பரிந்துரைத்தது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இதே மாமன்றத்தில் அந்த அறிக்கை மற்றும் பரிந்துரைகள் 5 நாட்கள் விவாதிக்கப்பட்டு, மாநில சுயாட்சித் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது என்பது வரலாறு. ஒன்றிய அரசு-மாநில அரசு உறவுகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட ஓய்வுபெற்ற மாண்புமிகு உச்சநீதிமன்ற நீதிபதி சர்க்காரியா தலைமையிலான கமிஷன், "ஆளுநர் என்பவர் பற்றற்ற அடையாளம் உள்ளவராக" (Governor should be a Detached figure) இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது.

அரசியல் சட்டத்தை மறு ஆய்வு செய்யப் பிரதமராக இருந்த வாஜ்பாய் அவர்கள் 2000ஆம் ஆண்டு நியமித்த உச்சநீதிமன்ற ஓய்வுபெற்ற மாண்புமிகு தலைமை நீதிபதி வெங்கடாசலய்யா அறிக்கையும் இதே கருத்தையே வலியுறுத்தியது.

இன்னும் சொல்லப்போனால், குடியரசுத் தலைவரைப் பதவி நீக்க "இம்பீச்மென்ட்" அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இருப்பது போல, ஆளுநர்களை நீக்க சட்டமன்றத்திற்கும் "இம்பீச்மென்ட்" அதிகாரம் வழங்கலாமா என ஒரு கலந்தாலோசனையையே (Consultation Paper) அப்போது வெளியிட்டு, கருத்து கேட்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியல் சட்டத்தின் தந்தை என நம் அனைவராலும் போற்றப்படும் டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்கள், "ஆளுநர் என்பவர் மாநில அரசின் நிருவாகத்தில் குறுக்கிடாத அரசியல் சட்ட ஆளுநராகச் செயல்பட வேண்டும்" என்பதை அரசியல் நிர்ணய சபையிலேயே வலியுறுத்தியிருக்கிறார்.

2010இல் உச்சநீதிமன்ற மாண்புமிகு தலைமை நீதிபதியாக இருந்த கே.ஜி. பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அமர்வு, "ஆளுநர் நியமிக்கப்பட்டுவிட்டால் அவர் அரசியல் சட்டத்திற்குத்தான் விசுவாசமாக இருக்க வேண்டுமே தவிர அரசியல் கட்சிக்கு அல்ல" என்று "பி.பி. சிங்கால்" வழக்கில் மிகத் தெளிவாகவே வரையறுக்கப்பட்டுள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கும், அந்த அரசு உள்ள மாநில மக்களுக்கும் வழிகாட்டுபவராகவும், நண்பராகவும் ஆளுநர் இருக்க வேண்டும்" என்று எத்தனையோ உச்சநீதிமன்றத் தீர்ப்புகளில் வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் நமது ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு அரசுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் "நண்பராக" இருப்பதற்குத் தயாராக இல்லை என்பதை அவர் பதவியேற்றதிலிருந்து செய்யும் செயல்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தி வருகிறது.

ஆளுநர் திறந்த மனத்துடன் அரசுடன் விவாதிக்க வேண்டுமே தவிர, பொதுவெளியில் நிருவாக நடவடிக்கைகளை விவாதிப்பது சரியல்ல. இந்த அரசின் கொள்கைகளை, தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளை, இந்தச் சட்டமன்றத்தின் இறையாண்மையை, தமிழ்நாட்டு மக்களின் நலனுக்காக நிறைவேற்றப்பட்டுள்ள மசோதாக்களைக் கொச்சைப்படுத்தி பொதுவெளியில் பேசுகிறார். அவர் ஆளுநர் என்ற நிலையைத் தாண்டி அரசியல்வாதியாகப் பேசுகிறார். அந்தப் பதவிக்கு என்னென்ன தகுதிகளைச் சர்க்காரியா அறிக்கை வரையறுத்துக் கூறியுள்ளதோ, அந்தத் தகுதிகளையெல்லாம் மறந்துவிட்டுப் பேசுகிறார்.

அதுவும் குறிப்பாக, மாண்புமிகு பிரதமர் அவர்கள் தமிழ்நாடு வரும்போதோ அல்லது பிரதமரைச் சந்திக்க நான் டெல்லி செல்லும்போதோ, தமிழ்நாட்டு அரசுக்கு எதிராகப் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்.

ஆன்லைன் சூதாட்டத்தைத் தடைசெய்யும் மசோதாவை இந்த அவையில் மீண்டும் நிறைவேற்றி அனுப்பிய பிறகும், இளைஞர்கள் தற்கொலைகள் தொடரும் நிலையில் கூட அதற்கு ஒப்புதல் அளிக்க மறுக்கிறார்.

அதற்கு மேல் சென்று, "withhold" என்றால் நிராகரிக்கப்பட்டதாகப் பொருள் என்று ஆளுநர் விதண்டாவாதமாக பேசுகிறார். இந்த "withhold" அதிகாரத்தை ஆளுநருக்கு வழங்கவே கூடாது என்று சர்க்காரியா அறிக்கை கூறியதைக் கூட அறியாதவர் போல் பேசுகிறார். அரசியல் சட்டப் பிரிவு 200இன்கீழ் "ஆளுநரால் திருப்பி அனுப்பி வைக்கப்பட்ட மசோதாவைச் சட்டமன்றம் மீண்டும் நிறைவேற்றி அனுப்பிவிட்டால், அந்த மசோதாவிற்கு ஒப்புதல் அளிப்பதைத் தவிர வேறு வழி ஆளுநருக்கு இல்லை" என்பதே தெளிவு.

அதைவிட ஒரு மசோதாவை திருப்பி அனுப்ப வேண்டுமென்றால், அதைக்கூட அமைச்சரவையின் அறிவுரைப்படியே ஆளுநர் செய்ய வேண்டும் என்பதே அரசியல் நிர்ணய சபையில், இந்த அரசியல் சட்டப்பிரிவு குறித்து விவாதம் நடைபெற்ற போது சுட்டிக்காட்டப்பட்டுள்ள சிறப்பு அம்சங்கள்.

சட்டத்தை உருவாக்கி நிறைவேற்றும் அதிகாரத்தை, மக்கள் பிரதிநிதிகள் அவையாக இருக்கக்கூடிய

சட்டமன்றங்களுக்கு வழங்கிவிட்டு, அதற்கு ஒப்புதல் கையெழுத்து போடும் உரிமையை ஒரு நியமன ஆளுநருக்கு வழங்கியது மக்களாட்சி மாண்பு ஆகாது என்பதால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தும் முன்னெடுப்புகளை நாம் எடுக்க வேண்டும் எனக் கருதுகிறேன்.

அரசியல் சட்டம் ஆளுநருக்குத் தெரியவில்லை என்று நான் கூறமாட்டேன். ஆனால் அவருக்கு இருக்க வேண்டிய "அரசியல் சட்ட விசுவாசத்தை", "அரசியல் விசுவாசம்" அப்படியே விழுங்கி விட்டது என்றே இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதனால்தான் உச்சநீதிமன்றத் தீர்ப்புகளையும் மீறி, அரசின் அமைச்சரவை எடுத்த கொள்கை முடிவுகளை விமர்சித்துப் பொதுவெளியில் பேசுகிறார். அரசியல் சட்டத்தின் முகவுரையில் சொல்லப்பட்டுள்ள "மதச்சார்பின்மைக்கு" எதிராகப் பேசுகிறார். தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைக் கொச்சைப்படுத்துகிறார். தமிழ்நாட்டு மக்களின் நலனுக்குக் குறுக்கே நிற்கிறார். தமிழ்நாடு சட்டமன்றத்தை, இறையாண்மை மிக்க இந்த நூற்றாண்டு வரலாறு கொண்ட சட்டமன்றத்தை அவமதிக்கிறார். நாள்தோறும் ஒரு கூட்டம், நாள்தோறும் ஒரு விமர்சனம் என்ற நிலையில் ராஜ்பவனை "அரசியல் பவனாக" மாற்றிக் கொண்டிருக்கிறார். வகுப்புவாத எண்ணம் கொண்ட சிலரின் ஊதுகுழலாக ஆளுநர் செயல்படுகிறார்.

ஆளுநரை விமர்சிக்கிறோம் என்றால் அவரை தனிப்பட்ட முறையில் அல்ல; ஆளுநரின் செயல்பாடுகளைத் தான் விமர்சிக்கிறோம். ஆளுநர் பேசி வந்த கருத்துக்களுக்கு, பதிலுக்குப் பதில் சொல்லி சட்டமன்றத்தை அரசியல்

மன்றமாக நான் மாற்ற விரும்பவில்லை. அதேநேரத்தில், சட்டமன்றத்துக்கு அரசியல் நோக்கத்தோடு இடைஞ்சல் தர நினைத்தால் அதனைக் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அரசியல் நோக்கத்துக்காக, அரசியல் லாப நஷ்டங்களுக்காக, யாரோ சிலரின் விருப்பங்களுக்காக, நாம் இந்த அவையில் சட்டங்களை நிறைவேற்றுவது இல்லை. எடுத்தவுடன் சட்டம் போடுவதும் இல்லை. நீட் விலக்குச் சட்டமாக இருந்தாலும், ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டமாக இருந்தாலும், எத்தனைக்கட்ட பரிசீலனைக்குப் பிறகு இவற்றை நிறைவேற்றினோம் என்பதை இந்த அவைக்கு விளக்கத் தேவையில்லை.

ஓய்வுபெற்ற மாண்புமிகு உயர்நீதிமன்ற நீதியரசர் ஏ.கே. ராஜன் குழுவின் பரிந்துரைப்படி நீட் விலக்கு மசோதா நிறைவேற்றப்பட்டது.

ஆன்லைன் சூதாட்டத் தடைச் சட்ட மசோதா என்பது ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதியரசர் சந்துரு அவர்கள் தலைமையிலான குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது.

மக்கள் கருத்து, வல்லுநர்கள் கருத்து, சட்டங்கள், தீர்ப்புகள், மக்கள் பிரதிநிதிகளாக இருக்கக்கூடிய உங்களுடைய கருத்துக்கள் இவை அனைத்தும் சேர்ந்துதான் உருவாக்குகிறோம்.

இப்படிப் பார்த்துப்பார்த்து உருவாக்கிய சட்டத்தை, தன்னுடைய விருப்பு வெறுப்பால் தடை போட்டுவிட்டு,

உண்மைக்கு மாறான காரணங்களைச் சொல்லி மழுப்பி வந்தால், அதனை நம்பும் அளவுக்கு தமிழ்நாடு, ஏமாந்தவர்கள் இருக்கக்கூடிய மாநிலம் அல்ல!

இந்த ஆண்டின் தொடக்கத்தில், அரசின் ஆளுநர் உரையில் இருந்த சில பகுதிகளை / சொற்களைத் தவிர்த்துவிட்டு ஆளுநர் உரையாற்றியதை திருத்துவதற்காகவும், அரசின் ஆளுநர் உரையை முழுமையாக பதிவு செய்வதற்காகவும், நானே முன்மொழிந்து இந்த ஆண்டின் முதல் கூட்டத் தொடரில் 09.01.2023 அன்று ஒரு தீர்மானம் நிறைவேற்றினோம்.

இன்று, இதே மாமன்றத்தில், உங்கள் முன் ஒரு தீர்மானத்தை மொழிகிறேன்.

"தமிழ்நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்று, ஆட்சிப்பொறுப்புக்கு வந்துள்ள தமிழ்நாடு அரசுக்கு, தமது மக்களின் எதிர்பார்ப்புகளையும், தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய அரசமைப்புச் சட்டத்தின்படியான பொறுப்பும், ஜனநாயகரீதியான கடமையும் உள்ளது. இவற்றைக் கருத்தில்கொண்டு, மாண்புமிக்க இந்தச் சட்டமன்றப் பேரவைக்கு உள்ள இறையாண்மை மற்றும் இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படியான சட்டமியற்றும் பொறுப்புகளின் அடிப்படையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிறைவேற்றி அனுப்பியுள்ள பல்வேறு மசோதாக்களை மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் அனுமதி அளிக்காமல் காலவரையின்றி கிடப்பில் போட்டு, தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு எதிராகச் செயல்பட்டு வருவதை இப்பேரவை மிகுந்த வருத்தத்துடன் பதிவு செய்கிறது.

அதுமட்டுமின்றி, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்கள் குறித்து பொதுவெளியில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தெரிவிக்கும் சர்ச்சைக்குரிய கருத்துக்கள், அவர் வகிக்கும் பதவி, எடுத்துக் கொண்ட பதவிப் பிரமாணம் ஆகியவற்றுக்கும், மாநிலத்தின் நிருவாக நலனுக்கும் ஏற்புடையதாக இல்லை என்பதோடு, அரசமைப்புச் சட்டத்திற்கும், கடைபிடிக்கப்பட்டு வரும் மரபுகளுக்கும் எதிராகவும், இப்பேரவையின் மாண்பைக் குறைத்து, நாடாளுமன்ற ஜனநாயகத்தில் சட்டமன்றத்தின் மேலாண்மையை (Supremacy of Legislature) சிறுமைப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

எனவே, மாநில மக்களின் குரலாக விளங்கும் சட்டமன்றங்களில் நிறைவேற்றி அனுப்பப்படும் மசோதாக்களுக்கு அந்தந்த மாநில ஆளுநர்கள் ஒப்புதல் வழங்க குறிப்பிட்ட கால நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்று ஒன்றிய அரசையும், மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களையும் வலியுறுத்துவது என்றும்;

மக்களாட்சி தத்துவம் மற்றும் மாட்சிமை பொருந்திய இச்சட்டமன்றத்தின் இறையாண்மை ஆகியவற்றிற்குக் களங்கம் விளைவிக்கும் வகையில் தொடர்ந்து தமிழ்நாடு மக்களின் நலனுக்கு எதிராகச் செயல்படுவதைத் தவிர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் சட்டமியற்றும் அதிகாரத்தை நிலைநாட்டும் வகையில், இப்பேரவை நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு உரிய காலத்திற்குள் ஒப்புதல் அளித்திட வேண்டுமென்று, ஆளுநருக்கு உரிய அறிவுரைகளை ஒன்றிய அரசும், மாண்புமிகு குடியரசுத் தலைவரும் உடனடியாக வழங்கிட

வேண்டும் என்றும் இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது.” என்னும் தீர்மானத்தை நான் மொழிகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்தத் தீர்மானத்தினை ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து,
ஆற்றிய உரை – 10.04.2023

ஆன்லைன் ரம்மி விளையாட்டு தடைச்சட்டம் இன்றே அரசிதழில் வெளியிடப்படும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இன்று காலை நாம் நிறைவேற்றி அனுப்பிய அரசினர் தனித் தீர்மானத்தில், ஆன்லைன் ரம்மி விளையாட்டு தடைச் சட்டம் குறித்த மசோதா உள்ளிட்ட பல்வேறு மசோதாக்கள் மாண்புமிகு ஆளுநரின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டு, நிலுவையில் உள்ளதைச் சுட்டிக்காட்டி, இதனால் தமிழ்நாட்டின் நிருவாக நலனும், இளைஞர்களின் எதிர்காலமும் எவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளது என்பதையும் எடுத்துக்காட்டியிருந்தோம்.

மேலும், பொது வெளியில் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தெரிவித்து வரும் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் குறித்தும் நாம் இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

இந்தச் சூழ்நிலையில், இந்த மாமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பிய தீர்மானத்தின் ஒரு நல்விளைவாக, இன்று மாலை மாண்புமிகு ஆளுநர் அவர்கள், ஆன்லைன் ரம்மி விளையாட்டு தொடர்பான மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளார் என்ற செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

மேலும், இந்தச் சட்டமானது இன்றே தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்து அமைகிறேன்.

ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்ட மசோதாவிற்கு
மாண்புமிகு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் அளித்துள்ள நிலையில்,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
ஆற்றிய உரை – 10.04.2023

தீ விபத்து ஏற்படும் இடங்களில், தீயணைப்பு மற்றும் மீட்புப்படையினர் விரைந்து மீட்புப்பணிகளை மேற்கொண்டு வருகிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தொகுதி ஆலங்குளம் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு, ஆலங்குளம் வட்டம், குத்தப்பாஞ்சன் கிராமத்தில், புல எண்.209/5இல் சுமார் 25 சென்ட் பரப்பளவுள்ள அரசுக்குச் சொந்தமான நிலம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலம், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செயல்முறை ஆணையின்படி, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்குப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், ஆலங்குளத்தில் உள்ள

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்குச் சொந்தமாக கட்டடம் கட்ட தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை தங்கள் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பின்னர், உறுப்பினர் திரு. பால்மனோஜ் பாண்டியன் அவர்கள், ஆலங்குளம் தொகுதியில் உள்ள இரண்டு கிராமங்களைக் குறிப்பிட்டு, ஆலங்குளம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டப்படுமா எனத் துணைக் கேள்வி எழுப்பியதையடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பதில்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஆலங்குளம் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கான இடங்களைக் குறிப்பிட்டு, அங்கே கட்டடம் கட்டப்படுமா? என்று வினாவை எழுப்பியுள்ளார்.

ஏற்கெனவே ஆலங்குளம் வட்டம், குத்தப்பாஞ்சன் கிராமத்தில், அரசுக்குச் சொந்தமான நிலம் தெரிவு செய்யப்பட்டு, தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறைக்குப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தினரிடமிருந்து 3 கோடியே 77 இலட்சம் ரூபாய் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அங்கே தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பின்னர், மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள், கடையம் ஒன்றியத்தை மையமாக கொண்டு கடையம் தீயணைப்பு மற்றும் மீட்பு நிலையம் நடப்பாண்டில் அமைத்துத் தருமாறு மேலும் ஒரு துணைக் கேள்வியை எழுப்பியதையடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்த பதில்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்துகள் ஏற்படும் இடங்களுக்கு, தீயணைப்பு மற்றும் மீட்புப்படையினர் குறைவான நேரத்திற்குள், விரைந்து வந்து மீட்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்ந்திருக்கக்கூடிய நம்முடைய அரசு, அறிவியல் பூர்வமாக உலகளாவிய நிலைப்படுத்துதல் அமைப்பு (GPS) வரைபடங்களின் உதவியுடன் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையங்களின் அமைவிடங்களை தெரிவு செய்வதற்கான நடவடிக்கைகளை கொள்கை அளவில் மேற்கொண்டு வருகிறது.

பொதுவாக, ஓரிடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம் தொடங்குவதற்கு சில வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதில் 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் வேறு ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் இருந்தால் அது தவிர்க்கப்பட வேண்டுமென்ற அளவுகோல் இருக்கக்கூடிய நிலையில், மாண்புமிகு உறுப்பினர் கோரக்கூடிய கடையம் பகுதியைப் பொறுத்தவரையில், 18 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள அம்பாசமுத்திரத்திலும், 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள தென்காசியிலும் தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நிலையங்கள் முழு அளவில் பணியாளர்களைக் கொண்டு சிறப்பாக தற்போது செயல்பட்டு வருகின்றன.

மேலும், உறுப்பினர் குறிப்பிடக்கூடிய கடையம் பகுதியில், கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 59 சிறிய அளவிலான தீ விபத்துக்கள் தான் நிகழ்ந்திருக்கின்றன. எனவே, கடையம் பகுதியில் தீ விபத்து ஏதேனும் நிகழ்ந்தால், அம்பாசமுத்திரம் மற்றும் தென்காசி பகுதிகளில் இயங்கிவரக்கூடிய தீயணைப்பு நிலையங்களைச் சார்ந்த பணியாளர்கள் மற்றும் தீயணைப்பு ஊர்திகளைக் கொண்டே மீட்புப் பணிகளை மேற்கொள்ள இயலும் என்பதை பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
ஆலங்குளம் பேரூராட்சியில் தீயணைப்பு நிலையக் கட்டடம்
கட்டுவது தொடர்பாக சட்டமன்ற உறுப்பினர்
திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்
கேட்ட வினாவிற்கு, அளித்த பதில் – 12.04.2023

குற்றச் செயல்களில் ஈடுபடுவோர் மனித குலத்திற்கே ஒரு அவமானச் சின்னம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் சக்தி நகரில் இயங்கிவரக்கூடிய தனியார் மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளி ஒன்றில் யூ.கே.ஜி. பயின்று வரும் புதுப்பேட்டையைச் சேர்ந்த ஆறு வயது சிறுமி 11.04.2023 அன்று மாலை பள்ளி முடித்து வீட்டிற்குச் சென்ற பின்னர், தனக்கு வயிறு வலிப்பதாகப் பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, அந்தச் சிறுமியை அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பரிசோதித்தபோது, அந்தச் சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக மருத்துவர் தெரிவித்துள்ளார். இதனையடுத்து, அந்தச் சிறுமி விருத்தாச்சலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக சிறுமியின் தாயார் விருத்தாச்சலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில், காவல் துறையினர் துரிதமாக நடவடிக்கை மேற்கொண்டதன் அடிப்படையில், அப்பள்ளியின் தாளாளரும், ஓய்வுபெற்ற பள்ளி

ஆசிரியருமான பக்கிரிசாமி என்பவர்மீது உடனடியாக வழக்குப் பதிவு செய்யப்பட்டு, கைதும் செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து மேலும் விசாரணை மேற்கொண்டு, பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கை எடுத்திட நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

குற்றம் சாட்டப்பட்டுள்ள பக்கிரிசாமி, விருத்தாசலம் நகர மன்றத்தின் 30ஆவது வார்டு உறுப்பினராக உள்ளார் என்பதை அறிந்த உடனேயே, அவரின் தி.மு.க.-வின் அடிப்படை உறுப்பினர் நிலை இரத்து செய்யப்பட்டு, கட்சியிலிருந்தும் நிரந்தரமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளார். இதுகுறித்து மாவட்ட குழந்தைகள் நல அலுவலரும் உரிய விசாரணையை மேற்கொண்டு வருகிறார்.

எங்களது அரசைப் பொறுத்தவரையில், "நான் செய்தியைக் கேள்விப்படவில்லை – தொலைக்காட்சியில்தான் பார்த்தேன்" – என்று நான் சொல்லத் தயாராக இல்லை. இந்தச் செய்தியை அறிந்தவுடனேயே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு பேசினேன். சம்பந்தப்பட்டவரை உடனடியாக கைது செய்து, அது தொடர்பான செய்தியை எனக்குத் தந்தார்கள்.

இந்த அரசைப் பொறுத்தரையில், குற்றச் செயல்களில் ஈடுபடுவோர், அதிலும் குறிப்பாக, பெண்கள் மற்றும்கு ழந்தைகளுக்கு எதிரான குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்ம னித குலத்திற்கே ஓர் அவமானச் சின்னம் எனக்க ருதுகிறோம். அந்த வகையில், இதுபோன்ற குற்றச் செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகள் எவராக இருந்தாலும், அவர்கள்மீது எந்தவித பாரபட்சமுமின்றி, கடுமையான நடவடிக்கையை துரிதமாக எடுத்திடுவோம் என்பதை இந்த அவையில் நான் உறுதியோடு பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
கடலூர் மாவட்டம், விருத்தாச்சலத்தில், பள்ளிச் சிறுமி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது குறித்த தகவல் கோரலுக்கு அளித்த பதில் – 12.04.2023

கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் அரசியல் சட்ட சமூகநீதி உரிமைகள் தரப்படவேண்டும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களையும் பட்டியலில் சேர்த்து, அந்தப் பட்டியலின மக்களுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள அனைத்து உரிமைகளையும் வழங்க வேண்டும் என்ற தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் கொண்டு வர விரும்புகிறேன்.

ஆதிதிராவிடர்களாக இருந்து மதம் மாறிய பின்னரும் தீண்டாமை உள்ளிட்ட சாதிய வன்கொடுமைகளுக்கு அவர்கள் ஆளாவது தொடரவே செய்கிறது. எனவே

இதனை கனிவோடு நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நமது நாட்டின் அரசியல் சட்டப்படி இந்து, சீக்கியர், பௌத்த மத்தைத் தவிர்த்த பிற மதங்களைச் சேர்ந்த யாரும் பட்டியலின வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதப்பட முடியாது. வரலாற்று ரீதியாகவே அவர்கள் ஆதி திராவிடர் வகுப்பினராக இருக்கும்போது, அவர்களுக்குப் பட்டியலின வகுப்புக்கான உரிமைகளை வழங்குவதே சரியானதாக இருக்கும். அதன் மூலமாகத்தான் அவர்களுக்கு கல்வி, வேலைவாய்ப்பு ஆகியவை கிடைக்கும்.

அதன் மூலமாக சமூகத்தில் அவர்களுக்கான உயர்வும், மேம்பாடும் கிடைக்கும். மதம் மாறிவிட்டார்கள் என்பதற்காக சமூகரீதியாக அவர்களுக்குத் தரப்பட்டு வந்த, அதே சமூகத்தைச் சேர்ந்த மற்றவர்கள் அனுபவித்து வரும் உரிமைகளை இவர்களுக்குத் தர மறுப்பது சரியல்ல என்பதுதான் நமது நிலைப்பாடு.

மனிதர்கள் தாங்கள் விரும்பும் மதத்தைப் பின்பற்ற உரிமை உண்டு. ஆனால் சாதி என்பது மாறுதலுக்கு உட்பட்டது அல்ல. இத்தகைய சாதி என்பது நீ வேறு; நான் வேறு என்பதாக இல்லாமல்,நான் உயர்ந்தவன்;நீ தாழ்ந்தவன் என்ற முறையில் இருக்கிறது. அதாவது படுக்கைக் கோடாக இல்லாமல், செங்குத்துக் கோடாக இருக்கிறது. மொத்தத்தில் அது சமூகக் கேடாக அமைந்துள்ளது. சாதிய ஏற்றத்தாழ்வை வைத்து எந்த வகையில் அடக்கி ஒடுக்கினார்களோ, அதே சாதியை வைத்தே இடஒதுக்கீடு வழங்கி உயர்வடைய

வைக்கும் தத்துவம்தான் சமூகநீதித் தத்துவம். இந்த சமூகநீதித் தத்துவத்தை அனைத்து வகையிலும் முறையாகப் பின்பற்ற வேண்டும் என்பதே திராவிட மாடல் அரசினுடைய நோக்கம்.

அந்த வகையில் கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும், அரசியல் சட்ட சமூகநீதி உரிமைகள் தரப்பட வேண்டும் என்பதே சரியான நிலைப்பாடு. முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதெல்லாம், 1996, 2006, 2010, 2011 ஆகிய காலக்கட்டங்களில் இதே கோரிக்கையினை நிறைவேற்ற பிரதமருக்கு நேர்முகக் கடிதம் எழுதி, ஒன்றிய அரசைத் தொடர்ந்து வலியுறுத்தியிருக்கிறார். இதே பேரவையில், ஒன்றிய அரசிடம் இந்தக் கோரிக்கை வலியுறுத்தப்படும் என்று 06.01.2011 அன்று ஆளுநர் உரையில் தமிழ்நாடு அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் கடந்த சட்டமன்றத் தேர்தலில் வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலும் இதனை வலியுறுத்தி இருந்தோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில். பட்டியலின மக்களுக்கு இணையாக கிறித்துவ ஆதிதிராவிடர்களும் சலுகைகள் பெறும் வகையில் அரசாணைகள் வெளியிட்டு உரிய பயன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இடஒதுக்கீடு நீங்கலாக மற்ற உரிமைகள் தரப்பட்டு வருகின்றன. ஒன்றிய அரசால் பட்டியலின மக்களுக்கு வழங்கப்படும் அனைத்துக்

கல்வி உதவித் தொகைத் திட்டங்களும் கிறித்துவ ஆதிதிராவிடர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. முழுநேர முனைவர் பட்ட ஆராய்ச்சி மாணவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை, வெளிநாடுகளில் சென்று உயர்கல்வி பயில்பவர்களுக்கான ஊக்கத்தொகை, உயர்கல்வி சிறப்பு ஊக்கத்தொகை அனைத்தும் இவர்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. இத்துடன் இடஒதுக்கீட்டையும் வழங்குவதே சரியானதாகவும் முறையானதாகவும் இருக்கும் என்று நினைக்கிறோம்.

அரசியலமைப்பு (பட்டியலின சாதிகள்) திருத்த ஆணை 1950-ன்படி, இந்து மதத்தில் இருந்து வேறுபட்ட மதத்தைக் கூறும் எவரும் அட்டவணை சாதிகளின் உறுப்பினராக ஆக முடியாது. ஆனால், 1956ஆம் ஆண்டு சீக்கிய மதத்தைப் பின்பற்றுபவர்களையும், 1990ஆம் ஆண்டு பவுத்த மதத்தைப் பின்பற்றுபவர்களையும், பட்டியல் சாதியினராகச் சேர்க்கும் வகையில் திருத்தம் செய்யப்பட்டது. இதே போன்ற திருத்தத்தைத்தான் கிறித்தவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிடர்களும் எதிர்பார்க்கிறார்கள். இந்தக் கோரிக்கையை பல்வேறு தரப்பினரும் அரசுக்கு வைத்திருக்கிறார்கள்.

ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மதம் மாறும்போது, தானாக ஆதிதிராவிடர் வகுப்பில் இருந்து வெளியேறி விடுகிறார்கள் என்றும்; மதம் மாறிய பின்னும் அவர்களுக்கு ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர் என்று

சாதிச் சான்றிதழ் இருந்தால் அது செல்லாது என்றும்; மதம் மாறியவர்களுக்கு ஆதிதிராவிடர் வகுப்பு சான்றிதழ் வழங்கப்பட்டால் அது போலிச் சான்றிதழ் என்றும்; தேசிய ஆதிதிராவிடர் ஆணையத் துணைத் தலைவர் கடந்த ஆண்டு சொல்லி இருந்தார். அப்போது பல்வேறு தரப்பினரும் இதற்குக் கடுமையாக எதிர்ப்பை தெரிவித்தார்கள். இதைத் தொடர்ந்து உச்சநீதிமன்ற முன்னாள் நீதியரசர் கே.ஜி.பாலகிருஷ்ணன் தலைமையிலான ஆணையம் ஒன்றை ஒன்றிய அரசு அமைத்துள்ளது. இந்த ஆணையம் இந்தியா முழுமையும் சுற்றுப்பயணம் செய்து, அனைத்து மாநிலங்களின் கருத்தையும் பெற்ற பிறகே இறுதி அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதனை வலியுறுத்தும் வகையில், பின்வரும் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

தீர்மானம்

“இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பட்டியலின மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள சட்ட ரீதியான பாதுகாப்பு, உரிமைகள் மற்றும் இடஒதுக்கீடு உள்ளிட்ட சலுகைகளைக் கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்களுக்கும் விரிவுபடுத்தி, அவர்களும் அனைத்து வகையிலும் சமூகநீதியின் பயன்களைப் பெற, அரசியலமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு இந்திய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது” என்ற இந்தத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

சமூகநீதியானது சமநீதியாக வழங்கப்பட வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்ட இந்தத் தீர்மானத்தை அனைவரும் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமெனக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
கிறித்துவராக மதம் மாறிய ஆதிதிராவிடர்கள்,
அனைத்து வகையிலும் சமூகநீதியின் பயன்களைப் பெற,
அரசியலமைப்புச் சட்டத்தில்
உரிய திருத்தங்கள் மேற்கொள்ள இந்திய அரசை வலியுறுத்திடும்
அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து
ஆற்றிய உரை - 19.04.2022

முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கான ஓய்வூதியம் உயர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்து வைத்திருக்கிற கோரிக்கையின் அடிப்படையிலே, இப்போது அரசுக்கு இருக்கக்கூடிய நிதிநிலை சூழ்நிலைக்கேற்ப, ஓர் அறிவிப்பை நான் வெளியிட விரும்புகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஓய்வூதியத்தையும், மருத்துவப் படியையும் உயர்த்தித் தர வேண்டுமென கோரிக்கை வைத்தார்கள். அதனடிப்படையில், பின்வரும் அறிவிப்புகளை அறிவிப்பதில், உங்களோடு சேர்ந்து நானும் ஓரளவிற்கு மகிழ்ச்சி அடைந்து, அவற்றை அறிவிக்கிறேன்.

முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டு வரக்கூடிய மாத ஓய்வூதியம் ரூ.25 ஆயிரம் என்பது, ரூ.30 ஆயிரமாக, கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ஜூன் மாதம் முதல் உயர்த்தப்படும்.

அதேபோல், தற்போது வழங்கப்பட்டு வரக்கூடிய குடும்ப ஓய்வூதியம் மாதம் ஒன்றிற்கு ரூ.12,500/- என்பது, மாதம் ஒன்றிற்கு ரூ.15 ஆயிரமாக உயர்த்தப்படும்.

அதேபோல், முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு, தற்போது ஆண்டு ஒன்றிற்கு வழங்கப்பட்டு வரும் மருத்துவப் படி 50 ஆயிரம் ரூபாய் என்பது, 75 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்து, அமைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
முன்னாள் சட்டமன்ற மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கான
ஓய்வூதியம் மற்றும் மருத்துவப் படி தொடர்பாக,
வெளியிட்ட அறிவிப்பு - 19.04.2023

நிதி நிறுவன மோசடி விவகாரத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் திரு. ராமச்சந்திரன் அவர்கள் இங்கே உரையாற்றுகின்ற போது, நிதி நிறுவனங்கள் செய்து கொண்டு இருக்கக்கூடிய முறைகேடுகளைப் பற்றி எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அதிலும் குறிப்பாக ஆருத்ரா கோல்ட் டிரேடிங் பிரைவேட் லிமிடெட் என்ற நிதி நிறுவனம் கடந்த அ.தி.மு.க. ஆட்சி இருந்த போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் வைப்பீடுகளுக்கு 25 முதல் 30 விழுக்காடு மாத வட்டி என கவர்ச்சிகரமான ஓர் அறிவிப்பை வெளியிட்டு, செப்டம்பர் 2020 முதல் சுமார் ஒரு இலட்சம் முதலீட்டாளர்களுக்கு சுமார் 2,348 கோடி ரூபாய் முதலீடு மற்றும் வட்டியை திருப்பித் தராமல் ஏமாற்றி உள்ளதாக புகார்கள் வந்துள்ளன.

நமது கழக ஆட்சி பொறுப்பேற்றப் பிறகுதான், அந்த புகார்களின் மீது பொருளாதார குற்றப்பிரிவு வழக்குப்பதிவு செய்து 22 பேர் எதிரிகளாக சேர்க்கப்பட்டு அவர்களில் இயக்குநர்கள், ஏஜெண்ட் உள்ளிட்ட 11 பேர் கைது செய்யப்பட்டு இருக்கிறார்கள். வெளிநாட்டிற்கு தப்பிச்சென்ற மேனேஜிங் டைரக்டர் ராஜசேகர் மற்றும் உஷா ராஜசேகர் ஆகியோரை கைது செய்ய ரெட் கார்னர் நோட்டீஸ் வழங்கப்பட்டு உள்ளது.

மேற்கண்ட எதிரிகள் மீது Look Out Circular வழங்கப்பட்டுள்ளது. ரொக்கம், வங்கிக் கணக்குகளில் இருந்த பணம் சுமார் 96 கோடி ரூபாய், 93 அசையா சொத்துக்களும் முடக்கப்பட்டுள்ளன. இந்த வழக்கில் விரைவில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படவிருக்கிறது.

இதேபோல், Hijau, IFS, Elfin, CVRS Chits, Rahat உள்ளிட்ட நிதி நிறுவனங்களும் மோசடியில் ஈடுபட்டுள்ளதால், அந்த நிறுவனங்கள் மீதும் கடும் நடவடிக்கையை இந்த ஆட்சி எடுத்து இருக்கிறது. குற்றவாளிகளை கைது செய்து,

அவர்களுடைய சொத்துக்கள் முடக்கம், வங்கிக் கணக்குகள் முடக்கம், உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு முதலீட்டாளர்களுக்கு பணத்தை திருப்பிக் கொடுக்கும் நடவடிக்கையை துரிதப்படுத்துமாறு நான் உத்தரவிட்டிருக்கிறேன்.

இவற்றில் Hijau, IFS, Elfin, Rahat ஆகிய நிதி நிறுவனங்கள் எப்போது தொடங்கப்பட்டன என்றால், கடந்த அதிமுக ஆட்சியில் தான் தொடங்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்ற நிதி மோசடிகளில் ஈடுபட்ட நிறுவனங்களானாலும் இந்த அரசு பொறுப்பேற்றப் பிறகு எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கைகளின் காரணமாக, IFS நிதி நிறுவன மோசடி விவகாரத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு விட்டது. இதுபோன்ற நிறுவனங்களில் முதலீடு செய்யக்கூடிய பொதுமக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று இந்த அவையின் மூலமாக நான் அவர்களை கேட்டுக் கொள்கிறேன். மக்களிடம் ஆசையை தூண்டி இதுபோன்ற நிறுவனங்கள் தற்போது பொதுமக்களை ஏமாற்றிக் கொண்டு இருக்கின்றன. ஆகவே, இத்தகைய நிதி நிறுவனங்கள் அனைத்தையும் கண்காணிக்குமாறு காவல்துறைக்கு நான் கடுமையாக உத்தரவிட்டிருக்கிறேன்.

இத்தகைய நிறுவனங்களின் மோசடியை தடுக்க முதன்முதலில் சட்டம் கொண்டுவரப்பட்டது எப்போது என்றால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்

ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது தான் என்பதையும் இந்த நேரத்தில் சொல்லி, இந்த விளக்கத்தை மாண்புமிகு உறுப்பினர்கள் வாயிலாக மற்றவர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
ஆருத்ரா உள்ளிட்ட நிதி நிறுவனங்களின்
மோசடி குறித்து ஆற்றிய உரை - 20.04.2023

அ.தி.மு.க. தலைமை அலுவலக விவகாரத்தில் அரசு உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்தப் பிரச்சினை குறித்து முறைப்படி தமிழக காவல் துறையைப் பொறுத்தவரைக்கும் சட்டப்படி நடவடிக்கை எடுத்திருக்கிறது. சட்டப்படி வழக்கும் பதிவு செய்திருக்கிறது. இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிறபோது, குறிப்பிட்டு சொன்னார். நீதிமன்றத்திற்கும் சென்றிருக்கிறது. எனவே, நீதிமன்றம் இதுகுறித்து விசாரித்திருக்கிறது. ஆகவே, என்னைப் பொறுத்தவரையில், இங்கே பிரச்சினை வந்த காரணத்தினால், நான் சொல்ல விரும்புவது, மேற்படி சம்பவம் தொடர்பாக, 14 நபர்கள் கைது செய்யப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டனர். மேலும் 11.07.2022 அன்று, E2-இராயப்பேட்டை காவல் நிலையத்தில் குற்ற எண் 190/2022, ச/பி 147, 148, 341, 324, 326, 356, IPC 3 of Act குற்ற எண் 191/2022, 147, 148, 341, 324, 506, IPC குற்ற எண் 192/2022 மற்றும் குற்ற எண் 213/2022 இதர ஆகிய 4 வழக்குகளும் தமிழ்நாடு காவல் துறை இயக்குநர் அவர்களின் உத்தரவின்பேரில் குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறைக்கு மேல் விசாரணைக்காக 29.08.2022 அன்று மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, முறைப்படி காவல் துறையைப் பொறுத்தவரையில் வழக்கும் பதிவு

செய்திருக்கிறது. உரிய நடவடிக்கையும் எடுத்திருக்கிறது. எனவே, இதில் காவல் துறை எதிலும் தலையிடவில்லை; வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது என்ற செய்திகளெல்லாம் உண்மைக்குப் புறம்பான செய்திகள் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
அதிமுக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வு குறித்து
மாண்புமிகு எதிர்கட்சி தலைவர் எழுப்பிய கேள்விக்கு
அளித்த பதில் - 20.04.2023

வேங்கைவயல் கிராமத்தில் தீண்டாமையை ஒழிக்க அனைத்து மக்களிடையே அமைதியை நிலைநாட்ட அரசு மிகத் துரிதமாக நடவடிக்கை எடுத்து வருகிறது

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள் வேங்கைவயல் பிரச்சினையைப்பற்றி குறிப்பிட்டு சொன்னார். ஏற்கெனவே இந்த அவையிலே கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து, அதற்கு நான் விளக்கம் தந்திருக்கிறேன். ஆனால், அதற்குப் பிறகு ஏற்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கைகள், அதில் இருக்கக்கூடிய முன்னேற்றங்களைப்பற்றி அவர் இங்கே கேட்ட காரணத்தால், இந்த அவையிலே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம், வெள்ளனூர் காவல் நிலைய சரகம், இறையூர் வேங்கைவயல் கிராமத்தில் கடந்த 24.12.2022 மற்றும் 25.12.2022 ஆகிய தினங்களில் 4 குழந்தைகள் உள்பட 5 நபர்களுக்கு வாந்தி மற்றும் காய்ச்சல் ஏற்பட்டு புதுக்கோட்டை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். 4 பேர் வெளிநோயாளிகளாக சிகிச்சை பெற்ற நிலையில், கோபிகாஸ்ரீ என்ற குழந்தை மட்டும் தொடர்ந்து சிகிச்சை பெற்றது. மருத்துவர் பரிசோதனையில் மாசடைந்த குடிநீரை பருகியதால் உடல்நலக் குறைவு என்று தெரிய வந்தது.

அதற்குப் பிறகு, அந்தக் கிராமத்திலுள்ள மேல்நிலை நீர்தேக்கத் தொட்டியை வருவாய்த் துறையினர் ஆய்வு செய்திருக்கிறார்கள். அப்போது அந்தத் தண்ணீர் துர்நாற்றம் வீசியதுடன், தொட்டியில் மனிதக் கழிவு கலந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உடனே அந்தத் தொட்டியிலிருந்த நீர் முழுவதும் வெளியேற்றப்பட்டு மூன்று முறை சுத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

பாதிக்கப்பட்ட கோபிகாஸ்ரீயின் தந்தை கனகராஜ் 26.12.2022 அன்று கொடுத்த புகாரின் அடிப்படையில் வெள்ளனூர் காவல் நிலையத்தில் அடையாளம் தெரியாத நபர்கள்மீது வன்கொடுமை சட்டப் பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கை விசாரிக்க கூடுதல் காவல் கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு "சிறப்பு விசாரணைக் குழு" அமைக்கப்பட்டது. இக்குழுவினர் தடய அறிவியல் குடிநீர் மாதிரிகளை சேகரித்து, சென்னை தடய அறிவியல் சோதனை மையத்திற்கு நீதிமன்றம் வாயிலாக அனுப்பி வைத்தார்கள்.

27.12.2022 அன்று மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் அந்தக் கிராமத்திற்குச் சென்று ஆய்வு மேற்கொண்டார்கள். அப்போது, "கிராமத்தில் உள்ள அய்யனார் கோயிலில் தங்களை வழிபட அனுமதிக்கவில்லை என்றும், ஒரு குறிப்பிட்ட தேநீர்க் கடையில் இரட்டைக் குவளை முறை கடைப்பிடிக்கப்படுவதாகவும்" மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டிருக்கிறார்கள். அதனடிப்படையில் உடனே குளத்தூர் வட்டாட்சியர் அளித்த புகாரின் பேரில் அக்கிராமத்தில் தேநீர்க் கடை நடத்தி வரக்கூடிய மூக்கையா மற்றும் அவரது மனைவி மீனாட்சி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டு, மூக்கையா

அன்றைய தினமே கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். அன்றைய தினமே ஆதிதிராவிடர்கள் அய்யனார் கோவிலில் வழிபட அனுமதிக்கப்பட்டனர். அப்போது சிங்கம்மாள் என்பவர் ஆதிதிராவிடர்கள் சாதிப் பெயரைச் சொல்லி அவதூறாகப் பேசியதால், வட்டாட்சியர் அளித்த புகாரின் அடிப்படையில், சிங்கம்மாள் கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்.

28.12.2022 அன்று இலுப்பூர் கோட்டாட்சியர் தலைமையில் அமைதி பேச்சுவார்த்தை நடைபெற்றது. அந்தப் பேச்சுவார்த்தை மூலமாக "மேல்நிலை நீர்த் தொட்டியை அசுத்தம் செய்தவர்கள்மீது விரைவில் நடவடிக்கை; இரட்டைக் குவளை முறையை ஒழிப்பது; அடுத்து, அய்யனார் கோயிலில் அனைத்து சமூக மக்களுக்கு சாதி வேறுபாடின்றி வழிபடுவது" ஆகிய முடிவுகள் அந்தக் கூட்டத்தில் முடிவாக எடுக்கப்பட்டது.

அந்தக் கிராமத்தில் சட்டம்-ஒழுங்கு நிலையைப் பராமரிக்க சுழற்சி முறையில் தொடர்ந்து காவல் துறையினர் பாதுகாப்புப் பணியை மேற்கொண்டனர். மருத்துவத் துறையினரும் மருத்துவ முகாம் நடத்தியிருக்கிறார்கள்.

சமூக நல்லிணக்கத்தை கடைப்பிடிக்கும் வகையில் 29.12.2022 அன்று அனைத்து சமூகத்தினரும் பங்கேற்ற அமைதி ஊர்வலம் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றிருக்கிறது. இவ்வழக்கு விசாரணையை துரிதப்படுத்த, இந்த வழக்கு மாநிலக் குற்றப்பிரிவு குற்றப்புலனாய்வுத் துறைக்கு (சிபிசிஜடி) 14.01.2023 அன்று மாற்றப்பட்டது. இந்நிலையில்தான், இந்த

வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றக் கோரி நெடுவாசல் கிழக்கு கிராமத்தைச் சேர்ந்த திருமுருகன் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் தாக்கல் செய்த மனுவில், ஓய்வுபெற்ற மாண்புமிகு நீதியரசர் சத்தியநாராயணன் தலைமையில் ஒரு நபர் விசாரணை ஆணையத்தை அமைத்து, விசாரணை அறிக்கையை 2 மாதங்களுக்குள் அளிக்க மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டுள்ளது.

வேங்கைவயல் விவகாரத்தில் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க, அந்தக் கிராமத்தில் தீண்டாமையை ஒழிக்க, அனைத்து தரப்பு மக்களிடையே அமைதியை நிலைநாட்ட, இந்த அரசு மிகத் துரிதமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது. அந்த வகையில், இப்போது நியமிக்கப்பட்டிருக்கும், மாண்புமிகு ஓய்வு பெற்ற நீதியரசர் அவர்களின் ஒரு நபர் விசாரணை ஆணையத்திற்கு இந்த அரசு அனைத்து உதவிகளையும் வழங்குவதற்கு ஓர் அரசாணையையும் வெளியிட்டிருக்கிறது என்பதையும் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
புதுக்கோட்டை மாவட்டம், வேங்கைவயல் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்வின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அளித்த பதில் - 20.4.2023

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் தமிழ்நாடு காவல்துறை மிகச் சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொடங்குகின்றபோதே 3 மணிக்கு மேல் ஆகிவிட்டது, நாங்களெல்லாம் இவ்வளவு நேரமாக இருந்து பேச வேண்டியிருக்கிறது என்று வருத்தப்பட்டார்கள். குறுக்கிட வேண்டாம் என்றுதான் நானும் கருதி இருந்தேன். நாளை பதில் சொல்கின்றபோது விளக்கமாக பதில் சொல்லலாம் என்று நினைத்திருந்தேன். ஆனால், இப்போது இரண்டு ஆண்டு காலமாக சட்டம்-ஒழுங்கு மோசமான நிலையில் இருக்கிறது என்பதை அவர் இங்கே பதிவு செய்திருக்கிறார். நான், அவருக்கு தெரிவிக்க விரும்புவது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் இன்றைக்கு தமிழ்நாடு காவல் துறை மிக சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், ஜல்லிக்கட்டு, மதுரை சித்திரைத் திருவிழா, விநாயகர் சதுர்த்தி, தேவர் குருபூஜை, இமானுவேல் சேகரன் நினைவு நாள், திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழா, தைப்பூசத் திருவிழா, திருவாரூர் தேர் திருவிழா என அனைத்து விழாக்களும் எவ்வளவு அமைதியாக, சுமுகமாக நடைபெற்றது என்பது நாட்டிற்கு நன்றாகத் தெரியும்.

சாதி மோதல்கள், மத கலவரங்கள், போலீஸ் துப்பாக்கிச் சூடு, கள்ளச் சாராய சாவு, இரயில் கொள்ளையர்கள், வட மாநில கொள்ளையர் அட்டகாசம், தொழிற்சாலை போராட்டங்கள் என வழக்கமான சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் இன்றைக்கு இந்த திராவிட மாடல் ஆட்சியை பொறுத்தவரையிலே அவைகளெல்லாம் முறையாக தடுக்கப்பட்டு, தமிழ்நாடு இன்றைக்கு அமைதிப் பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கிறது.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் சமீபத்தில் 08.04.2023 அன்று சென்னை வந்தபோதும், குடியரசுத் தலைவர் அவர்கள் 18.02.2023 அன்று கோவை வந்தபோதும், 18.03.2023 அன்று கன்னியாகுமரி வந்தபோதும், ஜனவரி மாதம் முதல் சென்னை, கோவை, திருச்சி, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஜி-20 மாநாடு நிகழ்ச்சி நடைபெற்றிடவும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து, மிகப் பெரிய பாராட்டுதல்களை இந்த காவல் துறை பெற்றிருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், முதன்முதலில் "ஆப்பரேஷன் ரவுடி வேட்டை" நடத்தப்பட்டு 6,112 பேர் கைது செய்யப்பட்டு, 3,047 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆக, எதற்காக இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், குற்றங்கள் நடைபெறாமல் தடுப்பதில் இந்த அரசு எவ்வளவு முன்னுதாரணமாக திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இவைகளெல்லாம் ஓர் அடையாளம். இன்னும் சொல்லப் போகிறேன். இன்னும் தெளிவாக உங்களுக்கு

புள்ளிவிவரத்தோடு சொல்ல வேண்டுமென்றால், இதனால் 2020இல் ஐ.பி.சி குற்றங்கள் 8 இலட்சத்து 91 ஆயிரத்து 696 ஆக இருந்து, 2022இல் வெறும் 1 இலட்சத்து 94 ஆயிரத்து 97 வழக்குகளாக குறைந்துள்ளன.

2020இல் 1 இலட்சத்து 68 ஆயிரத்து 629 மதுவிலக்குச் சட்டத்தின் கீழான வழக்குகள் 2022இல் 1 இலட்சத்து 55 ஆயிரத்து 489 ஆக குறைந்திருக்கிறது.

2019இல் 1,678 ஆக இருந்த கொலைச் சம்பவங்கள் 2022இல் 1,597 ஆக குறைந்திருக்கிறது.

2018இல் பெண், சிறுமி கடத்தல் 907 வழக்குகள். ஆனால், 2022இல் அது 535 ஆக குறைந்திருக்கிறது.

2018இல் பெண்களுக்கு எதிரான வரதட்சணைக் கொடுமை 55 வழக்குகள். ஆனால், 2022இல் அது 29 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

2018இல் லாட்டரி சீட்டு விற்பனை வழக்குகள் 4,694. ஆனால், 2022இல் இது 3,966 ஆக குறைக்கப்பட்டுள்ளது. ஆக, கொலைக் குற்றங்கள் குறைந்திருக்கின்றன.

கொள்ளை, கன்னக்களவு எல்லா குற்றங்களுமே குறைக்கப்பட்டுள்ளன. ஆகவே, அ.தி.மு.க. ஆட்சியில் கைவிடப்பட்ட சட்டம்-ஒழுங்கு தி.மு.க. ஆட்சியில் நிலைநாட்டப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. இந்தியாவிலேயே அனைவரும் விரும்பி வந்து வாழும் மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு இன்றையதினம் அமைதிப் பூங்காவாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அதற்குக் காரணம்

தி.மு.க. ஆட்சி; அதற்குக் காரணம் இந்தத் திராவிட மாடல் ஆட்சி. அதற்கு இந்தக் காவல் துறைதான் சிறப்பான பணியை நிறைவேற்றித் தந்திருக்கிறது என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,
மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு நிலை குறித்து
மாண்புமிகு எதிர்க்கட்சி தலைவர் எழுப்பிய கேள்விக்கு
அளித்த பதில் - 20.4.2023

அம்பாசமுத்திரம் நிகழ்வு வழக்கு, சிபிசிஐடி விசாரணைக்கு மாற்றம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பல்வேறு கோரிக்கைகளையும் வைத்திருக்கிறார்கள்; பல்வேறு குற்றச்சாட்டுகளையும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றிற்கெல்லாம் நான் நாளைக் காலையில் பதிலுரையாற்றவிருக்கிறேன். ஒருவேளை அவர்கள் வெளிநடப்புச் செய்யாமல் இந்த அவையில் இருந்தால், அப்பொழுது கேட்கலாம். இருந்தாலும், திருநெல்வேலி, அம்பாசமுத்திரத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தைப் பற்றி குறிப்பிட்டு, காவல் துறை அதிகாரி, பல்வீர்சிங் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்ற ஒரு குற்றச்சாட்டை, இந்த அரசின்மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் (குறுக்கீடு) சரி, CCTV கேமராக்கள் சரியாக இயங்கவில்லை என்ற செய்தி வந்ததாக, அதையும் உறுதி செய்து சொல்லவில்லை; செய்தி வந்ததாக என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக, நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

அம்பாசமுத்திரம் நிகழ்வு குறித்து சமூக வலைதளங்களில் புகார்கள் வந்தவுடனே அங்கு பணியாற்றிய உதவி காவல் கண்காணிப்பாளர் திரு. பல்வீர்சிங் 26.03.2023 அன்று காத்திருப்பு பட்டியலுக்கு மாற்றப்பட்டிருக்கிறார்.

அதைத் தொடர்ந்து PSO பிரிவு 151-ன் இந்த புகார் நிருவாகத் துறை நடுவர் (Executive Magistrate) மற்றும்

சார் ஆட்சியர் சேரன்மாதேவி ஆகியோர் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

இதற்கிடையில் உதவி காவல் கண்காணிப்பாளர் 29.03.2023 அன்று பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த நிகழ்வு தொடர்பாக ஓர் உயர் அதிகாரி தலைமையில் விசாரணைக்கு உத்தரவிடப் பரிந்துரைத்ததன் அடிப்படையில், திருமதி பெ. அமுதா, இ.ஆ.ப., அவர்கள் உயர்மட்ட விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இதற்கிடையில் பணியிடை நீக்கம் செய்யப்பட்ட உதவி காவல் கண்காணிப்பாளர் திரு. பல்வீர்சிங் மீது 17.04.2023 அன்று குற்ற வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

உயர்மட்ட விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட திருமதி அமுதா, I.A.S., அவர்கள் 4 நாட்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் முகாமிட்டு நடத்திய விசாரணையின் அடிப்படையில், CCTV Camera-வில் பதிவாகியிருக்கக்கூடிய ஆதாரங்களை எல்லாம் அடிப்படையாகக் கொண்டு, நேற்றையதினம் ஓர் இடைக்கால அறிக்கையை அரசிற்கு சமர்ப்பித்திருக்கிறார். அவரது அறிக்கையின் அடிப்படையில் தான், நேற்றிரவு CBCID விசாரணைக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் நான் விளக்கிட விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
அம்பாசமுத்திரம் நிகழ்வு தொடர்பாக எடுக்கப்பட்ட
நடவடிக்கைகள் குறித்து அளித்த பதில் - 20.04.2023

கொடநாடு விவகார உண்மை குற்றவாளியை விரைவில் கண்டுபிடிப்போம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாங்கள் தீர்ப்புக்குள்ளே போகவில்லை; அந்த வழக்கின் விசாரணைக்குள்ளேகூட போகவில்லை. என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதைத்தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில்தான், இன்னும் சில விளக்கங்களை, இந்தக் கொடநாடு

விவகாரத்தைப் பொறுத்தவரைக்கும், நான் விளக்கிட விரும்புகிறேன்.

இந்த வழக்கின் குற்றவாளி சயான் சிறையில் இருந்து விடுதலையான 29.07.2021 அன்று காலை சிறை அதிகாரிகளிடம் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் தனது உயிருக்கு ஆபத்து இருந்தது என்பது குறித்து பேசியிருக்கிறார். தற்போது இந்த வழக்கில் சில உண்மை நிலவரத்தைத் தெரிவிக்க உள்ளதாகவும் கூறி அளித்த மனு உதகமண்டலத்தில் உள்ள மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, வழக்கில் மேல் புலன் விசாரணை நடத்த அனுமதி கோரி அரசுத் தரப்பிலும் மனு தாக்கல் செய்யப்பட்டதையடுத்து அனுமதி வழங்கப்பட்டது.

இதனையடுத்து காவல் துறையினர் எதிரி சயானை விசாரணை செய்தனர். மேல் விசாரணைக்கு எதிராக அம்மா பேரவை மாவட்ட துணை அமைப்பாளர் அனுபவ் ரவி தாக்கல் செய்த மனுவை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதனையடுத்து இந்த வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட தனிப்படை, ஏற்கெனவே

விசாரணை செய்த சாட்சிகள் மற்றும் புதிய சாட்சிகளை விசாரணை செய்து குற்றவாளிகளுக்கு அடைக்கலம் கொடுத்ததற்காகவும், சாட்சியங்களை மறைத்த காரணத்திற்காகவும் இறந்துபோன கனகராஜின் சகோதரர் தனபால் மற்றும் ரமேஷ் ஆகியோரை 25.10.2021 அன்று கைது செய்தனர்.

தொடர்ந்து தனிப்படையினர் 306 நபர்களிடம் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையில், இந்த வழக்கு 19.10.2022 அன்று மாநில குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு அவர்கள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். சம்பவம் நடந்தது ஏப்ரல் 24, 2017; 6 ஆண்டுகள் ஆகிவிட்டன.

அந்த சம்பவம் நடந்ததும் உடனடியாக ஆதாரங்களை சேகரித்து, தடயங்களைக் காப்பாற்றி, வாக்குமூலங்களையும் முறையாகப் பெற்று வைத்திருந்தால், விரைந்து வழக்கை முடித்திருக்க முடியும். ஆண்டுகள் பல ஓடிய காரணத்தால், சில விஷயங்களை முழுமையாக வெளிக்கொண்டு வர தாமதம் ஏற்படுகின்றது. ஆனாலும், முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களுடைய வீட்டில் நடந்த விவகாரம் இது என்கிற காரணத்தால், அவர் சாதாரண நபர்

அல்ல; முதலமைச்சராக இருந்தவர். ஆக, அவர் இருந்த அந்த பங்களாவிலேயே இந்த சம்பவம் நடைபெற்றிருப்பது வேதனைக்குரிய ஒன்று. எனவே, இந்த விவகாரத்தைப் பொறுத்தவரையில், மிகுந்த கவனத்தோடு விசாரணை நடத்தி, உண்மைக் குற்றவாளியை நிச்சயமாக விரைவில் கண்டுபிடிப்போம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
கொடநாடு விவகாரம் தொடர்பாக எடுக்கப்பட்ட
நடவடிக்கைகள் குறித்து அளித்த பதில் - 20.04.2023

குற்ற சம்பவங்கள் எங்கு நடந்தாலும் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வரிசையாக சில சம்பவங்களையெல்லாம் இங்கே பட்டியல் போட்டு காட்டியிருக்கிறார். ஆனால், பட்டியல் போட்டு காட்டிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் அதுதான் மிகப்பெரிய குற்றச்சாட்டு. ஆனால், இந்த சம்பவங்கள் நடந்த உடனுக்குடன் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கக்கூடிய ஆட்சி, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி. Sterlite துப்பாக்கிச் சூடு நடந்தபோது, எனக்கு அந்த செய்தியே தெரியாது, தொலைக்காட்சி பார்த்துதான் தெரிந்துகொண்டேன். அதுபோன்று நாங்கள் சொல்லவில்லை. கோயம்புத்தூரைப்பற்றி சொன்னார். கோயம்புத்தூரில் நீதிமன்ற வளாகத்தில் 13.02.2023 அன்று சில ரௌடிகள், கோகுல் என்பவரை ஆயுதங்களால் தாக்கிய சம்பவத்தைக் குறிப்பிட்டு, பட்டப் பகலில் நீதிமன்றத்தில் அரங்கேறிய சில சம்பவங்களைக் குறிப்பிட்டுச் சொன்னார்.

கோயம்புத்தூர் மாநகரம், சரவணம்பட்டி காவல் நிலைய கொலை வழக்கு ஒன்றில், தொடர்புடைய கீரநத்தம் பகுதியைச் சார்ந்த கோகுல், வயது 23 வீரப்பிள்ளை என்பவர் கடந்த 13.02.2023 அன்று ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டது தொடர்பாக, பந்தயச் சாலை காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவ்வழக்கில் தொடர்புடைய 16 நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களுள் 12 பேர் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. நீதிமன்ற வளாகம் அருகே பாதுகாப்பு குறைபாடு காரணமாக

இச்சம்பவம் நடைபெறவில்லை. கடந்த 13.02.2023 அன்று நடைபெற்ற கோகுல் கொலை சம்பவம் முன்விரோதம் காரணமாக நடைபெற்ற சம்பவம்.

அதேபோல, அ.தி.மு.க. ஆட்சியில் சென்னை எழும்பூர் நீதிமன்ற வளாகத்தில் கல்லால் அடித்தே வழக்கறிஞர் ஸ்டாலின் என்பவர் கொல்லப்பட்டார். இன்னொரு வழக்கில், ரஜினிகாந்த் என்பவர் வெட்டிக் கொல்லப்பட்டார். எல்லாவற்றுக்கும் மேலாக சென்னை 5ஆவது பெருநகர Magistrate நீதிமன்ற விசாரணைக்காக, காத்திருந்த சலீம்பாபு என்பவர் விரட்டி வெட்டப்பட்டு, நீதிமன்ற நடுவர் முன்பே கொல்லப்பட்டார்.

டாக்டர் சுப்பிரமணிய சுவாமிக்கு எதிராக சென்னை உயர் நீதிமன்றத்தில் நடத்திக் காட்டிய வன்முறை மற்றும் ஆபாச காட்சிகளை எல்லாம் மக்கள் இன்னும் மறக்கவில்லை. அதையும் மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஆனால், தி.மு.க. ஆட்சியைப் பொறுத்தவரைக்கும் எங்கெங்கு சம்பவங்கள் நடக்கின்றதோ, அது ஆளுங்கட்சியாக இருந்தாலும் சரி, எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி, அவர்கள்மீது, உடனடியாக, உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு, கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் ஆதாரங்கள் இருக்கின்றன. அந்த விவரங்களையெல்லாம் நாளையதினம் எனது பதிலுரையில் நான் விளக்கமாக சொல்ல இருக்கிறேன். மேலும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மேலும் சொன்ன சில குற்றச்சாட்டுகளுக்கு எல்லாம் நாளையதினம் விளக்கமாக, நான் நிச்சயமாக பதில் சொல்வேன் என்று உறுதியளிக்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
கோயம்புத்தூர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அளித்த பதில் - 20.04.2023

“போதை பொருட்களை நிச்சயமாக அடியோடு ஒழிப்போம்”
“இளைஞர்களின் எதிர்காலத்தை காப்போம்”

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கஞ்சா, குட்காவைப் பற்றி பேச ஆரம்பித்தால் எந்த நிலைமைக்கு போகும் என்பதை இந்த அவையில் இருக்கக்கூடிய எல்லோரும் அறிவார்கள். போதைப் பொருட்களின் பிடியில் இந்த மாநிலத்தை விட்டுச்சென்றது உங்கள் ஆட்சியில்தான். இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு போதைப்பொருள் நடமாட்டத்தை ஒழிக்க பல தீவிர நடவடிக்கைகள் நாங்கள் எடுத்திருக்கிறோம். அ.தி.மு.க- ஆட்சியில் 2020இல் COTPA சட்டத்தின்கீழ் பதிவான வழக்குகள் 40 ஆயிரத்து 246. ஆனால் தி.மு.க. ஆட்சியில் இதுவரை பதிவான வழக்குகள் 63 ஆயிரத்து 656 வழக்குகள். அதிமுக ஆட்சியில் கைது செய்யப்பட்டவர்கள் 37 ஆயிரத்து 846. திமுக ஆட்சியில் கைது செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 65 ஆயிரத்து 480 பேர். 2020இல் பறிமுதல் செய்யப்பட்ட குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் அதிமுக ஆட்சியில் 1 இலட்சத்து 22 ஆயிரம் கிலோ. ஆனால்

திமுக ஆட்சியில் பறிமுதல் செய்யப்பட்ட குட்கா உள்ளிட்ட போதைப் பொருட்கள் 3 இலட்சத்து 37 ஆயிரத்து 295 கிலோ. 2016 அதிமுக ஆட்சியிலிருந்து எடுத்துக் கொண்டால் 2020இல் NDPS சட்டத்தின்கீழ் போடப்பட்ட வழக்குகள் 5 ஆயிரத்து 403 மட்டும். ஆனால் திமுக ஆட்சியில், 2022இல் மட்டும் 10 ஆயிரத்து 391 வழக்குகள். அதாவது double ஆக போடப்பட்டு போதைப் பொருட்களை ஒழிப்பதில் தீவிரத்தை நாங்கள் காட்டியிருக்கிறோம். கடந்த 6 வருடங்களில் அதிக எண்ணிக்கையில் போடப்பட்ட வழக்கு 2022இல் தான். அதுவும் கழக ஆட்சியில்தான்.

அதேபோல் இச்சட்டத்தின்கீழ் அதிமுக ஆட்சியில் 2020இல் 15 ஆயிரத்து 313 கிலோ கஞ்சாவும், 1 கிலோ 896 கிராம் Heroin-னும், 527 வாகனங்களும் மட்டுமே பறிமுதல் செய்யப்பட்டன. ஆனால் தி.மு.க. ஆட்சியில் 2022இல் மட்டும் 27 ஆயிரத்து 140 கிலோ கஞ்சா, 22 கிலோ 58 கிராம் Heroin-ன், 1,242 இரு சக்கர வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அது மட்டுமின்றி போதைப் பொருள்கள் விற்போரின், விநியோகிப்போரின் 5 ஆயிரத்து 723 வங்கி கணக்குகள் முடக்கப்பட்டுள்ளன. காவல்துறையினர் கடும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். ஒவ்வொரு மாவட்ட ஆய்வின்போதும், கள ஆய்வின்போதும் இந்த நடவடிக்கைகளை நான் துரிதப்படுத்திக்கொண்டிருக்கிறேன்.

காவல்துறையினர் இவ்வளவு நேர்மையாக நடவடிக்கை எடுத்து வருகின்ற நேரத்தில் ஒரு சில "கருப்பு ஆடுகள்" காவல்துறையில் இருப்பதை, நமது காவல்துறை அதிகாரிகள் களையெடுத்து வருகிறார்கள். போதைப் பொருட்கள் இல்லாத மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிட இரவு-பகல் பாராமல் காவல்துறையினர் பணியாற்றி வருவது இந்த ஆட்சியில்தான். இதைவிட வெட்கக்கேடு என்ன என்று கேட்டால், அதிமுக ஆட்சியில் சுகாதாரத்துறை அமைச்சராக இருந்தவர்கள், DGP, Commissioner மற்றும் போலீஸ் அதிகாரிகளாக இருந்தவர்கள், அவர்கள் மீது CBI-யை வழக்குத் தொடுக்கக்கூடிய அளவிற்கு குட்கா நடமாட்டம் தலைவிரித்தாடியது அதை மறந்துவிட்டு பேசக்கூடாது.

சமீபத்தில்கூட முன்னாள் DGP, முன்னாள் Police Commissioner ஆகியோர் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ய ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது நீங்கள் பத்திரிக்கைகளில் பார்த்திருப்பீர்கள். அதிமுக ஆட்சியில்தான் போதைப் பொருட்களின் மாநிலமாக தமிழ்நாட்டை விட்டுச் சென்றீர்கள். நிதி நெருக்கடியை சீரமைத்தது போல், இந்த நிருவாகச் சீரழிவை சரி செய்துவது எங்கள் கடமையாக வந்திருக்கிறது. போதைப்பொருட்களின் நடமாட்டத்தையும்

அடியோடு ஒழிக்க நடவடிக்கை எடுத்திருப்பது இந்த அரசுதான். "போதைப் பொருட்களை நிச்சயமாக அடியோடு ஒழிப்போம். இளைஞர்களின் எதிர்காலத்தை காப்போம்" இது திராவிட மாடல் அரசு என்பதை தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. ***மு.க.ஸ்டாலின்*** *அவர்கள்,*
குட்கா விவகாரம் தொடர்பாக எடுக்கப்பட்ட
நடவடிக்கைகள் குறித்து அளித்த பதில் - 20.04.2023

“திராவிட மாடல் ஆட்சி” தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் நிச்சயம் கொண்டு செல்லும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

நான், முதல்-அமைச்சர்! ஆனால், என்னுடைய துறையான உள்துறையின் மீதான மானியக் கோரிக்கைதான் அனைத்துத் துறைகளிலும் கடைசியாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது ஏன் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும். அனைத்துத் துறைகளும் உங்கள் துறைதானே என்று நீங்கள் நினைப்பதால்தான், அப்படி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதற்கு முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்கள், தனது துறையின் சார்பில் நடைபெற்ற மானியக் கோரிக்கை விவாதத்திற்கு

பதிலளித்துப் பேசியபோது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் பேசிய ஒன்றைச் சுட்டிக் காட்டினார். பேரறிஞர் அண்ணாவின் அமைச்சரவையில் இருந்த அமைச்சர்களின் ஒவ்வொரு துறையையும் குறிப்பிட்ட தலைவர் கலைஞர் அவர்கள், நாம் வகிக்கக்கூடிய துறைகள் வேறுபட்டிருந்தாலும் நாம் அனைவரும் 'அண்ணாத்துரை'-யைச் சேர்ந்தவர்கள் என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டதாக இங்கே எடுத்துச் சொன்னார். உண்மைதான்,

எனக்கு தலைவர் கலைஞர் முதலில் வைக்க நினைத்த பெயர் என்னவென்றால், அய்யாத்துரை! எனவே, மாண்புமிகு அமைச்சர்கள் அனைவரும் தனித்தனி துறையை வகித்தாலும் நீங்கள் அனைவரும் இந்த அய்யாதுரையின் இரத்த நாளங்கள்தான்.

இது ஏப்ரல் 2023; 2 ஆண்டுகளுக்கு முன்னால் இதே ஏப்ரல் மாதத்தில்தான் தமிழ்நாட்டு மக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சியில் அமர்த்துவதற்கு முடிவெடுத்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால், வீழ்ந்து கிடக்கும் தமிழ்நாடு எழுச்சி பெறும்; "தாழ்ந்த தமிழ்நாடு தலைநிமிரும்" என்று மக்கள் முடிவெடுத்தார்கள்! மே 7ஆம் நாள், "முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்!" என்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டேன்.

இன்னும் இரண்டு வார காலத்தில், இரண்டு ஆண்டுகாலம் நிறைவடைந்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைக்க இருக்கிறது. இனி தமிழ்நாட்டை நிரந்தரமாக திராவிட முன்னேற்றக் கழகம்தான் ஆளவேண்டும் என்று மக்கள் மனநிறைவுடன் முடிவெடுக்கும் வகையில் இந்த

இரண்டாண்டு காலமாக நாம் ஆட்சியை நடத்தி வருகிறோம் என்பது யாராலும் மறுக்க முடியாத உண்மை.

மிக மோசமான நிதி நெருக்கடி, நிதி மேலாண்மையில் ஒன்றிய அரசின் உதவியின்மை ஆகிய மிகக் கடினமான சூழல்கள் உள்ள போதிலும், மகத்தான சாதனைகளை கழக அரசு நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் செய்து கொடுத்துள்ளது. தமிழ்நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் ஏதாவது ஒரு வகையில் தமிழ்நாடு அரசு நன்மை செய்து கொண்டிருக்கிறது என்பதை என்னால் தலைநிமிர்ந்து சொல்ல முடியும்!

மகளிர்க்கு பேருந்துகளில் கட்டணமில்லா பயண வசதி செய்து தரப்பட்டதன் மூலமாக, இதுவரை 265 கோடி பயணங்களை மகளிர் மேற்கொண்டுள்ளார்கள்.

குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை செப்டம்பர் மாதம் முதல் தரவிருக்கிறோம். இதன் மூலம் ஒரு கோடி மகளிர், மாதம் தோறும் ஆயிரம் ரூபாய் பெறப் போகிறார்கள்.

பல்வேறு மாவட்டங்களில் நான் கலந்துகொண்ட நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாக்களின் மூலமாக மட்டும் ஒரு கோடிப் பேருக்கு பல்வேறு உதவிகள் செய்யப்பட்டுள்ளன. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபோது 62 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த வருவாய் பற்றாக்குறையை, நடப்பு மதிப்பீடுகளில் 30 ஆயிரம் கோடி ரூபாயாகக் குறைத்துள்ளோம்.

தமிழ்நாட்டை நோக்கி 2 இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான புதிய தொழில் முதலீடுகளை நாம் ஈர்த்துள்ளோம்.

மாநில உள்நாட்டு உற்பத்தி 6.11 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

வேளாண் உற்பத்தி அதிகமாயிருக்கிறது. பாசனப் பரப்பும் அதிகமாகியிருக்கிறது.

இப்படித் துறைவாரியாக நான் சொல்லத் தேவையில்லை. அனைத்து அமைச்சர்களும் அவற்றை இதே அவையில், விரிவாக ஆதாரங்களோடு சொல்லி இருக்கிறார்கள். இப்படி துறைரீதியாகச் சாதனைகளை நெஞ்சை நிமிர்த்திச் சொல்லும் திராவிட மாடல் அரசாக நமது அரசு அமைந்துள்ளது.

உதயசூரியன் உதிப்பதற்கு முன்னால் எழுந்து உழவுக்குச் செல்லும் உழவர்களின் முகத்தில் மலர்ச்சி இருக்கிறது; காரணம், இலவச மின்சாரம் கிடைக்கிறது.

காலை நேரத்தில் பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது, காரணம், பள்ளியிலேயே காலை உணவு கிடைக்கிறது.

பல்வேறு பணிகளுக்காக புறப்படும் மகளிர் முகத்தில் மலர்ச்சி காணப்படுகிறது – காரணம் - பேருந்துகளில் கட்டணமில்லை.

இப்படி மக்களுக்கு நேரடியாக தினமும் பலன் தரும் அரசாக தமிழ்நாடு அரசு இருக்கிறது. அதனால்தான் அவதூறுகளை யார் அள்ளி வீசினாலும், திசைதிருப்பும் திருகுவேலைகளை யார் செய்தாலும், மக்கள் மனங்களை யாராலும் மாற்ற முடியவில்லை; ஏமாற்றவும் முடியவில்லை! நாங்கள் தேர்தலில் மட்டும் வெல்லவில்லை; மக்களின் மனங்களையும் வென்று, அவர்கள் நெஞ்சங்களில் நிரந்தரமாகக் குடியேறி இருக்கிறோம்.

இது தனிப்பட்ட ஸ்டாலினின் அரசு அல்ல; இது திராவிட முன்னேற்றக் கழகம் என்ற தனிப்பட்ட கட்சியின் அரசு அல்ல; ஒரு இனத்தின் அரசாக, எட்டுக் கோடி மக்களின் அரசாக, ஒரு கொள்கையின் அரசாக இருக்கிறது; திராவிட மாடல் என்ற கோட்பாட்டின் அரசாக இருக்கிறது. சமூகநீதி-சமத்துவம் - சமதர்மம் - சகோதரத்துவம் - மொழி உரிமை-இன உரிமை - மாநில சுயாட்சி ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய 'திராவிடவியல் கோட்பாடு' என்பதே திராவிட மாடல் சாசனம்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற அய்யன் வள்ளுவர் நெறியும்,

யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற கணியன் பூங்குன்றனாரின் வாக்கும் –

திராவிட இயக்கத்தின் தீரர்களாம் சர்.பிட்டி தியாகராயரும், டி.எம். நாயரும் - நடேசனாரும் காட்டிய வழியும்,

தந்தை பெரியாரின் சுயமரியாதைச் சமதர்மமும்,–

பேரறிஞர் அண்ணாவின் தமிழ்நாடு உரிமை முழக்கங்களும் –

தமிழினத் தலைவர் கலைஞரின் ஒடுக்கப்பட்டோர் சமூகநீதிச் செயல்பாடுகளும்,

இனமானப் பேராசிரியரின் மொழி, இன உரிமை வழிகாட்டுதல்களும் - என்னுள் இருந்து இயக்கிக் கொண்டு இருக்கிறது.

இவைதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியினுடைய சாதனைக்கும், கம்பீரத்துக்கும், வெற்றிக்கும், துணிச்சலுக்கும் காரணங்கள்! ஓர் அரசு மக்கள்

நல அரசாகவும் இருக்க வேண்டும், அதே நேரத்தில் கொள்கை அரசாகவும் இருக்க வேண்டும். மக்களுக்கான உதவிகளை மட்டும் செய்துவிட்டு, கோட்பாடுகளில் இருந்து விலகிச் சென்று விடக் கூடாது. ஒரு பக்கம் மக்கள் நலன், இன்னொரு பக்கம் கொள்கை உரம். இவை இரண்டையும் முன்னெடுக்கும் ஆட்சியாக இரண்டாண்டுகளை நாம் நிறைவு செய்யப்போகிறோம்.

இது இந்தியாவையே ஈர்க்கும் ஆட்சியாக அமைந்துள்ளது என்பது, என்னுடைய பெருமை மட்டுமல்ல; இந்த அமைச்சரவையின் பெருமை! ஏன், எங்களோடு தோளோடு தோள் சேர்த்து நிற்கும் கூட்டணிக் கட்சிகளுடைய பெருமை! இன்னும் சொல்லப்போனால், நாங்கள் கவனிக்கத் தவறும் இடங்களைச் சுட்டிக்காட்டும் உரிமை எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் உண்டு. ஆனால், அந்தக் கடமையிலிருந்து தவறி, என்ன நிலைக்கு அவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதுதான் எனக்கும் வேதனையாக இருக்கிறது. இருந்தாலும், அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவை பல ஆரோக்கியமான விவாதங்களை கண்டிருக்கிறது. அதேபோன்ற ஆரோக்கியமான விவாதமாகவே உங்கள் அனைவரது உரைகளையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். ஆதரித்தாலும், எதிர்த்தாலும் மக்களுக்காகத்தான் பேசுகிறீர்கள் என்று எடுத்துக் கொள்பவனாக, ஏற்றுக் கொள்பவனாக நான் இருக்கிறேன். ஆசிரியராய் இருந்து இந்த அவைக்கு தலைமை ஆசிரியராக

மட்டுமல்ல, சட்டமன்ற நெறிமுறைகளுக்கு ஆசானாகவும் திகழ்ந்து வரும் பேரவைத் தலைவரான தங்களுக்கும் எனது நன்றியைத் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

உள்துறை மீதான மானியக் கோரிக்கை விவாதத்தில் 12 பேர் பேசி இருக்கிறார்கள். பாராட்டி பேசி இருந்தாலும், விமர்சித்து பேசி இருந்தாலும் இரண்டு தரப்புக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில காவலர்களின் செயல்பாடுகள் குறித்து இங்கே விமர்சனங்கள் வைக்கப்பட்டன.

இதுபற்றி பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதை, இதே அவையில் பேசியதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். “எந்த சமுதாயத்தில் இருந்து போலீஸ் படையினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அந்தச் சமுதாயத்தைப் பிரதிபலிக்கின்ற நிலைக் கண்ணாடியாக அந்தப் படையினர் விளங்குவார்கள். அந்தச் சமுதாயத்திலிருந்து வெகுதூரம் அவர்கள் விலகி இருப்பது இல்லை.

போலீஸ் படை நன்றாக நேர்த்தியாகச் செயல்படுகிறது என்றால், அது சமுதாயத்தின் தன்மையைக் காட்டும். அதேபோல் போலீஸ் படையினர் எங்கேனும் செயலாற்றுவதில் தவறு இழைத்தால், சமுதாயத்தில் நிலவும் குறைபாட்டையே அவை காட்டுகின்றன. தங்களால் உருவாக்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டியவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். முரண்பாடு ஏற்படுகின்ற இடங்களில் எல்லாம் அவர்கள் இருந்தாக வேண்டியிருக்கிறது.

சகல விதத்திலும் சகிப்புத் தன்மையோடு அவர்கள் நடந்துகொள்ள வேண்டியிருக்கிறது. உள்ளக் கொந்தளிப்பு அடையாமல் பற்றற்ற அமைதியுடன் நடந்துகொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். பெற்ற பயிற்சிக்கு ஒப்ப, கடமை உணர்ச்சி மிக்கவர்களாக அவர்கள் நடந்துகொள்ள வேண்டி இருக்கிறது" என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள், அப்படித்தான் காவல் துறையினர் நடந்து வருகிறார்கள்.

அவர்களது செயல்பாட்டில் குற்றங்குறைகள் இருக்கலாம். குறையே இல்லை என்று நான் சொல்ல மாட்டேன். குறை கண்டுபிடிக்கப்பட்டதும், அவை திருத்தப்பட்டனவே தவிர, கண்டும் காணாமல் விடப்படவில்லை. சம்பவம் நடந்ததும் குற்றவாளி தப்பிவிட்டார் என்றோ, குற்றவாளியைக் கைது செய்யவில்லை என்றோ, குற்றவாளியைக் காப்பாற்றினார்கள் என்றோ புகார் இருந்தால் சொல்லுங்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன், அதில் உறுதியாக நான் இருக்கிறேன். எந்தக் குற்றவாளியையும், அது யாராக இருந்தாலும், எப்படிப்பட்ட கொம்பனாக இருந்தாலும், அவர்களை நாங்கள் நிச்சயமாக காப்பாற்ற மாட்டோம் என்று இந்த மாமன்றத்தில் உறுதியாகக் கூறுகிறேன். சிறுசிறு தவறுகள் நடந்திருந்தாலும், அதனைத் திருத்திக்கொள்ளும் பண்பை காவல் துறையினர் பெறவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மானியக் கோரிக்கை மீதான விவாதத்துக்கு பதிலளித்து பேசிய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அனைவரும் இந்த மாநிலத்தில் என்னென்ன இருக்கிறது என்று பேசினார்கள். என்னென்ன இல்லை என்பதைச் சொல்வதாக என்னுடைய உள்துறை அமைந்துள்ளது.

தமிழ்நாட்டில் சாதிச் சண்டைகள் இல்லை.

மதச்சண்டைகள் இல்லை.

கூட்டு வன்முறைகள் இல்லை.

கலவரங்கள் இல்லை.

துப்பாக்கிச் சூடு இல்லை.

காவல் நிலைய மரணங்கள் இல்லை.

இப்படி இல்லை... இல்லை... இல்லை... என்றுதான் என்னால் சொல்ல முடியும்.

இதெல்லாம் இல்லை என்பதற்கு அடையாளமாகத்தான்...

புதிய தொழிற்சாலைகள் வருகின்றன.

புதிய முதலீடுகள் வருகின்றன.

புதிய நிறுவனங்கள் வருகின்றன.

அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சி வருகிறது.

ஆட்சிக்கு நல்ல பெயர் வருகிறது.

“அமைதியான மாநிலம் தமிழ்நாடு” என்ற நற்பெயர் வருகிறது.

ஒரு மாநிலம் வளருகிறது என்றால், அது அமைதியான மாநிலமாக இருக்கிறது என்று பொருள்.

சட்டம் ஒழுங்கைப் பேணி, பொதுமக்களிடம் அச்ச உணர்வைப் போக்கி இருக்கிறது நமது அரசு. எந்தவிதக் குறுக்கீடும் இன்றி காவல் துறையை செயல்பட அனுமதித்துள்ளோம். இதனால்தான் சமூகவிரோதிகள், கொள்ளையர்கள், வன்முறையாளர்கள் உடனுக்குடன் கைது செய்யப்படுகிறார்கள்.

“ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை” - என்கிறார் வள்ளுவர்.

அதாவது, ஒருவர் செய்த குற்றங்களை எப்பக்கமும் சாயாமல், நடுநிலையோடு பாரபட்சமின்றி ஆராய்ந்து, குற்றத்திற்குத் தக்க தண்டனையை வழங்குதல் நீதியாகும் என்ற அய்யன் வள்ளுவரின் வாக்குப்படி அரசு செயல்பட்டு வருகிறது. மாநில காவல் துறையினர் சட்டம்-ஒழுங்கை, தொடர்ந்து சிறப்பாகப் பராமரித்து வருவதோடு, குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் மீது பாரபட்சமின்றி கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். தமிழ்நாட்டில் சாதி, சமய வெறியர்கள், சமூக விரோதிகள் மீது அரசு மேற்கொண்ட கடும் நடவடிக்கைகள் காரணமாக, சாதி, சமய பூசல்கள் ஏதுமின்றி மாநிலத்தில் அமைதி நிலவுகிறது.

காவல்துறையினர், மாநிலம் முழுவதும், குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் ரவுடிகள் மற்றும் கொள்ளையர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்து கொலை, கொள்ளை மற்றும் சமுதாயக் குற்றங்களில் ஈடுபடுவோர் மீதும், ஆட்களை கடத்தி பணம் பறித்தல், தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டுக்கள் விற்பனை, மணல் மற்றும் ரேஷன் அரிசி கடத்துதல், கட்டப்பஞ்சாயத்துகளில் ஈடுபடுதல், அதிக வட்டி வசூலித்தல் போன்ற சமூக விரோத செயல்களில் ஈடுபடுவோர் மீதும், கஞ்சா, நிதி நிறுவன மோசடி, சைபர் குற்றங்கள், சமூக வலைதளங்களில் வதந்திகளைப் பரப்புவோர் ஆகியோர் மீதும் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து, அவர்களைத் தடுப்பு காவலில் அடைத்து வருகின்றனர். குற்றம் நடந்ததும் உடனடியாக நடவடிக்கை எடுப்பதால் குற்றங்கள் குறைந்துள்ளன.

மிகப்பெரிய மோதல் ஒன்று அரசின் வேகமான நடவடிக்கைகளால் எப்படி தவிர்க்கப்பட்டது என்பதற்கு எடுத்துக்காட்டுதான், வடமாநிலத் தொழிலாளர்கள் தாக்கப்படுகிறார்கள் என்று பரப்பப்பட்ட வதந்திகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள். தமிழ்நாட்டில், பீகார், அசாம், மேற்கு வங்கத்தைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியாற்றி வருகின்றனர். புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் பாதுகாப்பாகவும், அமைதியாகவும் தங்கள் தொழில்களில் ஈடுபடும் வண்ணம் மாநில அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இதற்கிடையேதான், அந்த வதந்தி தமிழ்நாட்டில் பரப்பப்பட்டது. இதுகுறித்து, என்னுடைய தலைமையில் அவசர ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. இவ்வாறு வதந்திக் காணொளிகளை பரப்புவோர் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டேன்.

வடமாநிலங்களில் இரு பிரிவினரிடையே நடைபெற்ற மோதல் சம்பவத்தை தமிழ்நாட்டில் நடந்தது போன்று சித்தரித்துக் காட்டியுள்ளதாகக் காவல் துறை இயக்குநர் அவர்கள் உடனடியாக விளக்கம் தந்தார். அந்தந்த மாவட்ட நிருவாகத்தினரும், காவல் துறையினரும், வடமாநிலத்தவர்கள் அதிகம் பணிபுரியும் இடங்களில் குறிப்பாக உணவு விடுதிகள், கட்டுமான நிறுவனங்கள், பல்வேறு தொழிற்சாலைகள் போன்றவற்றுக்குச் சென்று புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டில் உரிய பாதுகாப்பு வழங்கப்படும் என்பதைத் தெளிவுபடுத்தி, அவர்களது அச்சத்தைப் போக்கக்கூடிய வகையில் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

பீகார் மாநில முதலமைச்சர் மாண்புமிகு நிதீஷ் குமார் அவர்களை நானே தொலைபேசியில் தொடர்புகொண்டு

வடமாநில தொழிலாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் பாதுகாப்பு குறித்து விரிவாக எடுத்துரைத்தேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நாடாளுமன்றக் குழுத் தலைவர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் 07.03.2023 அன்று பீகார் முதலமைச்சரை நேரடியாகச் சந்தித்து வடமாநில தொழிலாளர்களின் பாதுகாப்பிற்கு மாநில அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கை குறித்துப் பேசியிருக்கிறார் என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள்.

பீகார் மாநில ஊரக வளர்ச்சித் துறை செயலாளர் திரு. பாலமுருகன் தலைமையிலான நான்கு பேர் கொண்ட குழு தமிழ்நாட்டிற்கு வந்து சென்னை, திருப்பூர், கோயம்புத்தூர் உள்ளிட்ட இடங்களில் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகளோடு கலந்தாலோசனை செய்ததோடு, பீகார் மாநில தொழிலாளர்களையும் சந்தித்துப் பேசினார்கள். இந்தக் குழுவினர் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கை குறித்து மகிழ்ச்சி தெரிவித்ததோடு அதுகுறித்து பத்திரிகைகளுக்குப் பேட்டியும் அளித்திருக்கின்றனர்.

07.03.2023 அன்று திருநெல்வேலி மாவட்டம் காவல்கிணறு பகுதியில் வடமாநிலத் தொழிலாளர்களை நானே நேரிடையாக சந்தித்து அவர்களின் பாதுகாப்புக்காக அரசு மேற்கொண்டுவரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்கி பேசினேன். இந்த விவகாரம் தொடர்பாக, இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் தற்போது வரை மொத்தம் 88 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன, 178 பேர் கைது செய்யப்பட்டார்கள்.

குறிப்பாக, தமிழ்நாடு காவல் துறையின் தனிப்படையினர் தெலுங்கானா, பீகார் மற்றும் ஜார்கண்ட் மாநிலங்களுக்கு நேரடியாகச் சென்று பீகார் மாநிலத்தைச் சேர்ந்த ரூபேஷ் குமார் என்பவரை 06.03.2023 அன்று தெலுங்கானாவிலும்,

பிரசாந்த் குமார் என்பவரை 11.03.2023 அன்று ஜார்கண்ட் மாநிலத்திலும், உபேந்திர சஹானி என்பவரை 18.03.2023 அன்று பீகாரிலும் கைது செய்து தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்தனர். வதந்தி காணொலியைப் பரப்பிய உத்திர பிரதேச மாநில பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் பிரசாந்த் உம்ராவ் என்பவர் மீதும் வழக்கு தொடரப்பட்டு, உயர்நீதிமன்ற ஜாமீன் பெற்றுள்ளார்.

அது மட்டுமின்றி, யூடியூப் சேனல் நடத்தி வரும் பீகார் மாநிலத்தைச் சேர்ந்த மணிஷ் காஷ்யப் என்பவர் கைது செய்யப்பட்டு, தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் அடைக்கப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் சமூக வலைத்தளங்களில் பரப்பப்படக்கூடிய வதந்திகளால் உலகளவில், சட்டம் ஒழுங்கு பிரச்சினை பெருமளவில் இருக்கும் என்று பலராலும் கூறப்படுகின்ற நிலையில், வடமாநிலத் தொழிலாளர்கள் பிரச்சினையில் தமிழ்நாடு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை பிற மாநில அரசுகளும் மனந்திறந்து பாராட்டின.

முன்னணி ஊடகங்களான ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ தலையங்கம் எழுதியது. ‘நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்’, ‘ஃபிரண்ட் லைன்’ போன்ற இதழ்கள் பாராட்டியும் கட்டுரைகள் எழுதியிருக்கின்றன. மாநிலத்தின் வளர்ச்சிக்கு வடமாநில தொழிலாளர்களின் பங்களிப்பை இந்த அரசு நன்றாக உணர்ந்துள்ளது.

வந்தாரை வாழ வைக்கும் தமிழ்நாட்டில் புலம்பெயர்ந்த வடமாநிலத்தவர்களையும் நமது மாநிலத்தவராக கருதி அவர்களுக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மாநில அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு அரசு துரிதமாக

நடவடிக்கை எடுத்ததால்தான் தமிழ்நாட்டிலும், சில வடமாநிலங்களிலும் கொந்தளிப்பு எழாமல், அது தவிர்க்கப்பட்டது.

மாநிலத்தில் சட்டம்-ஒழுங்கைப் பராமரிப்பதைப் பொறுத்தவரையில், போராடியவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது யார் ஆட்சியில் என்பதையும், அதற்கு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் தலைமையில் ஆணையம் அமைத்து, விசாரித்து நடவடிக்கை எடுக்கப்பட்டது எந்த ஆட்சியில் என்பதையும் இந்த மாமன்ற உறுப்பினர்களும் தமிழ்நாட்டு மக்களும் நன்கு அறிவார்கள். அதைப் பற்றியெல்லாம் விளக்கமாக பேசி, மீண்டும் ஒருமுறை விவாதத்திற்குள் செல்ல நான் விரும்பவில்லை.

ஆனால், நேற்று இந்த அவையில் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது, ஸ்டெர்லைட் துப்பாக்கிச்சூட்டைப் பற்றிப் பேசினார். நான் ஒரே ஒரு கேள்வி மட்டும் எழுப்ப விரும்புகிறேன். அறையிலிருந்து அவர்கள் கேட்டுக் கொண்டிருப்பார்கள். எனவே, அந்த உரிமையோடு அவர்களை கேட்க விரும்புகிறேன். 100 நாட்கள் அமைதியாக நடந்த அந்த போராட்டத்தில் துப்பாக்கிச்சூட்டிற்கு உத்தரவிட்டது யார்? அதை மட்டும் எதிர்க்கட்சித் தலைவர் ஏன் சொல்லவே மாட்டேன் என்கிறார். முதலமைச்சராக இருந்தபோதும் சொல்ல விரும்பவில்லை. இப்போது எதிர்க்கட்சித் தலைவர் ஆன பின்பும் அவர் சொல்ல விரும்பவில்லை. ஆனால், நமது அரசைப் பொறுத்தவரை, துப்பாக்கிச்சூடு சம்பவங்களில் பொதுமக்கள் ஒருவர் கூட உயிரிழக்காதவாறு சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு வருகிறது.

12.07.2022 அன்று கள்ளக்குறிச்சி மாவட்டம், கனியாமூர் தனியார் பள்ளி மாணவி உயிரிழந்ததையடுத்து நடந்த

தாக்குதல் சம்பவத்தை காவல் துறையினர் திறமையாக கையாண்டதோடு உயிரிழப்பு ஏதும் இல்லாமல் பார்த்துக்கொண்டனரே, அதுவே ஒரு அரசு மக்கள் போராட்டத்தை எப்படி பொறுப்புடன் கையாள வேண்டும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

காவல்நிலைய மரணங்களை தடுப்பதைப் பொறுத்தவரையில், அதிலும் இந்த அரசு சாதனை படைத்துள்ளது. 2019ஆம் ஆண்டு 11 காவல் நிலையங்களில் 11 நபர்கள் இறந்த நிலை மாற்றப்பட்டு, 2023ஆம் ஆண்டு இதுநாள் வரையில், காவல்நிலைய மரணங்கள் ஏதும் நடைபெறவில்லை என்ற நிலையை அடைந்துள்ளோம். கடந்த ஆட்சியோடு ஒப்பிடும்போது தற்போதைய ஆட்சியில் காவல் நிலைய மரணங்கள் பெருமளவில் குறைந்துவிட்டன. காவல் நிலைய மரணங்களே இல்லை என்ற நிலையை அடைவதற்கான வழிவகைகளில் இந்த அரசு நிச்சயம் ஈடுபடும்.

குற்றங்களைத் தடுப்பதே இந்த அரசின் முக்கிய இலக்கு. அதையும் மீறி அங்கும் இங்குமாக ஓரிரு இடங்களில் நடைபெறக்கூடிய குற்றங்களிலும் வழக்கமாக நடைபெறும் குற்றச் சம்பவங்களிலும் குற்றவாளிகள் உடனுக்குடன் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

தீவிரவாத - மதவாத - தடைசெய்யப்பட்ட இயக்கங்களின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கண்காணித்தும், மாநில எல்லைகளில் சோதனைச்சாவடிகள் அமைத்தும், கடலோர மாவட்டங்களில் சோதனைகளை தீவிரப்படுத்தியும், மலைப்பகுதிகளில் உள்ள வனப்பகுதிகளில் அடிக்கடி தீவிர சோதனைகள் நடத்தியும், தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை காவல் துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 23.10.2022 அன்று கோயம்புத்தூர் உக்கடம் பகுதியில் நடந்த கார் சிலிண்டர் வெடிப்பு சம்பவம் தொடர்பாக வழக்குப் பதிவு செய்யப்பட்டதோடு, சம்பவத்தில் ஈடுபட்ட எதிரிகள் உடனடியாக கைது செய்யப்பட்டனர். மேலும், 26.10.2022 அன்று எனது தலைமையில் நடந்த ஆய்வுக்கூட்டத்தில், வழக்கில் மாநிலம் தாண்டிய பரிமாணங்களும், பன்னாட்டுத் தொடர்புகளும் இருக்க வாய்ப்பு இருந்ததால், இவ்வழக்கை தேசிய புலனாய்வு முகமைக்கு மாற்றிட ஒன்றிய அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது.

மூன்றே நாளில், ஒரு மாநில அரசு இதுபோன்ற வழக்கை தேசிய புலனாய்வு முகமை விசாரணைக்கு மாற்றியது என்றால், அது தமிழ்நாடு அரசுதான். இந்தியாவிலேயே தமிழ்நாடு அரசுதான் இவ்வளவு விரைவாக வழக்கினை மாற்றியிருக்கும். மேலும், கோயம்புத்தூர் மாநகரின் பாதுகாப்பைக் கருதி கரும்புக்கடை, சுந்தராபுரம், கவுண்டம்பாளையம் ஆகிய இடங்களில் புதிய காவல் நிலையங்கள் அமைக்கவும், இத்தகைய சம்பவங்களைத் தடுக்க காவல் துறையில் சிறப்புப் படையை உருவாக்கவும், கோயம்புத்தூர் பகுதியில் முக்கிய இடங்களில் கூடுதல் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தவும் முடிவுகள் எடுக்கப்பட்டன.

தமிழ்நாடு காவல் துறை நுண்ணறிவுப் பிரிவின் ஒரு அங்கமாக விளங்கும் சிறப்புப் பிரிவின் நுண்ணறிவுத் தகவல்களின்படி விரைவாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் மூலம் மதரீதியான மோதல்கள் எதுவுமின்றி தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக திகழ்ந்து வருகிறது.

தீவிரவாத அமைப்புகளின் மூளைச்சலவையில் இருந்து இளைஞர்களைக் காக்க சமய அறிஞர்கள்,

உளவியல் நிபுணர்கள் மற்றும் பெற்றோர்கள் உதவியோடு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. அதன்படி, 2022-2023ஆம் ஆண்டில் 20 இளைஞர்கள் நல்வழிப்படுத்தப்பட்டுள்ளனர்.

சட்டம் ஒழுங்கு சிறப்பாகச் செயல்பட்டுவருவது குறித்து, புள்ளிவிவரத்தைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

2021 மற்றும் 2022 ஆகிய ஆண்டுகளில் தாக்கலான: 182 ஆதாயக்கொலை வழக்குகளில் 171 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 3 ஆயிரத்து 194 கொலை வழக்குகளில் 3 ஆயிரத்து 144 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 252 கூட்டுக் கொள்ளை வழக்குகளில் 242 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 5 ஆயிரத்து 281 கொள்ளை வழக்குகளில் 4 ஆயிரத்து 240 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 874 வன்புணர்வு வழக்குகளில் 849 வழக்குகளில் எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 90 பாலியல் துன்புறுத்தல் வழக்குகளில், 75 வழக்குகளில் எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். 9 ஆயிரத்து 440 போக்சோ வழக்குகளில். 9 ஆயிரத்து 340 வழக்குகளில் எதிரிகள் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இந்த அரசின் விழிப்புணர்வு பிரச்சாரங்களால் குற்றம் நடைபெற்றவுடன் புகார் கொடுக்க மக்கள் முன் வருகிறார்கள். காவல் நிலையங்களில் “வரவேற்பாளர்” நியமனம், காவல்துறையின் மனிதநேய அணுகுமுறை போன்றவற்றால் பதிவு செய்யப்படும் வழக்குகள் ஒரு சில குற்றங்களில் அதிகரிக்கலாம். அதற்கு காரணம், புகார்கள் வரும்பொழுது, கடந்த ஆட்சியில் இழுத்தடித்ததுபோல் இல்லாமல், இப்போது உடனடியாக வழக்குகள் பதிவு

செய்யப்படுகின்றன. அப்படி பதிவு செய்யப்பட்ட வழக்குகளை மூடி வைக்காமல் உடனடியாக விசாரித்து குற்றவாளிகளும் கண்டுபிடிக்கப்படுகிறார்கள், எதிரிகள் கைது செய்யப்படுகிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டுதான் மேற்கண்ட புள்ளிவிவரங்கள் என்பதை இந்த மன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நேற்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது, ஆருத்ரா போன்ற நிதிநிறுவனங்களின் மோசடிகள் பற்றிக் குறிப்பிட்டு பேசினார்கள். நான் நேற்றே இதுகுறித்து விளக்கமாக பதிலளித்து இருக்கிறேன். இருந்தாலும் ஒன்றை மட்டும் அழுத்தம் திருத்தமாக இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். மக்களிடம் ஆசையைத் தூண்டி இதுபோன்ற நிறுவனங்கள் ஏமாற்றுகின்றன. இத்தகைய நிதி நிறுவனங்கள் அனைத்தையும் கண்காணிக்குமாறு காவல்துறைக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

இத்தகைய நிதி நிறுவனங்களின் மோசடிகளைத் தடுக்க முதன்முதலில் சட்டம் கொண்டு வந்ததும், முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் என்பதைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். மேலும், இதுபோன்ற நிதி நிறுவனங்களில் முதலீடு செய்யும்போது பொதுமக்கள் எச்சரிக்கையோடும், விழிப்புணர்வோடும் இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் நடைபெற்ற சில முக்கியமான குற்றச் சம்பவங்களில் உரிய நடவடிக்கை எடுக்காததால், தி.மு.க. ஆட்சி அமைந்ததும் உரிய நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்பதற்கு சில உதாரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொள்ளாச்சி பாலியல் புகார் வழக்கும் சென்ற ஆட்சியினுடைய தலைப்புச் செய்திகளுள் ஒன்று என்று உறுப்பினர்கள் எல்லோரும் நன்கு அறிவீர்கள். இந்த விவகாரத்தில் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யவே பொதுமக்கள் ஒருபக்கம் போராடினார்கள். அரசியல் கட்சிகள் ஒருபக்கம் போராடினார்கள் தி.மு.க. கட்சி ஒருபக்கம் போராடினார்கள். ஆக, இப்படி தன்னார்வ தொண்டு அமைப்பைச் சார்ந்தவர்கள் எல்லோரும் போராடினார்கள். அப்படி ஒரு நிலை சென்ற ஆட்சியில் ஏற்பட்டது. பிறகு, மாநில குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றப்பட்டு, அங்கும் முறைப்படி விசாரிக்காத காரணத்தாலே மீண்டும் அதற்காகப் போராடி, அந்த வழக்கை சிபிஐ-க்கு கொண்டு போனோம். இவ்வழக்கில் கைது செய்யப்பட்ட 9 பேரில் அ.தி.மு.க. இளைஞரணி நிருவாகி ஒருவரும் உண்டு. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறைகளை ஒழிக்க விரும்பக்கூடிய கழக அரசு பொறுப்பேற்றவுடன், சிபிஐ விசாரணைக்கு உதவி செய்ய தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு பெண் எஸ்.பி.-யை நியமித்தோம்.

19 இலட்சத்து 42 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, சிறப்பு நீதிமன்றம் அமைத்தோம். அந்த சிறப்பு நீதிமன்ற வளாகத்தில் சிசிடிவி கண்காணிப்பு, காணொளி விசாரணை அறை, நீதிபதி அறை, சாட்சிகளுக்கான தனி பாதுகாப்பு அறை உள்ளிட்ட வசதிகள் செய்யப்பட்டன.

மூன்று மாதங்களுக்கு முன்பு நீதிமன்ற விசாரணை துவங்கப்பட்டு, 80 சாட்சிகளில் இதுவரை 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். பெண்களுக்கு பாலியல் தொல்லை கொடுத்தவர்கள் உரிய தண்டனை பெற இந்த அரசு

வழக்குகளின் அடிப்படையில் விசாரணையை உன்னிப்புடன் கண்காணித்து விரைந்து முடிக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் நேற்று பேசும்போது, 'கொடநாடு வழக்கை நாங்கள் சிபிஐ-க்கு கொண்டு போக கோரிக்கை வைக்கப் போகிறோம்' என்றார். இந்த சம்பவம் நடைபெற்றது அ.தி.மு.க. ஆட்சியில். கொடநாடு பங்களா என்பது, அந்தக் கட்சியின் முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்கள் "முகாம் அலுவலகமாக" பயன்படுத்திய பங்களா. அங்கு மர்மமான முறையில் கொலை, கொள்ளை, தற்கொலை, விபத்து எல்லாம் நடந்தன.

அவர்கள் ஆட்சிக் காலத்திலேயே முறையாகக் கண்டுபிடித்திருந்தால், இந்தக் கோரிக்கையை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இப்போது வைத்திருக்க வேண்டிய அவசியமே வந்திருக்காது. அந்தச் சம்பவம் நடந்ததும், உடனடியாக ஆதாரங்கள் சேகரிக்கப்பட்டு, தடயங்களையும் காப்பாற்றி, வாக்குமூலங்களையும் முறையாகப் பெற்று வைத்திருந்தால், வழக்கை விரைந்து முடித்திருக்க முடியும்.

ஆண்டுகள் பல உருண்டோடியதால், சில விஷயங்களை முழுமையாக வெளிக்கொண்டுவர தாமதம் ஏற்படுகிறது. ஆனாலும், சிபிசிஐடி விசாரணையில் முக்கியத் தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தி.மு.க. ஆட்சிக்கு வந்தபோது, 2021 செப்டம்பர் 9ஆம் தேதி பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "கொடநாடு வழக்கை நடத்துங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை, புது விசாரணை செய்யுங்கள், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை" என்று சொன்னார்கள். அவரே ஆகஸ்ட் 18ஆம் தேதி பேசும்போது, 'வழக்கு முடியும்

தருவாயில் இருக்கும்போது எதற்காக மேல் விசாரணை செய்ய வேண்டும்?' என்று பேட்டியும் கொடுத்தார்கள். இப்போது சிபிஐ-க்குப் போவேன் என்கிறார். எத்தனை முரண்பாடு? ஏன் இந்தத் தடுமாற்றம்?

இன்னொன்றையும் குறிப்பிட்டுள்ளார். கொடநாடு வழக்கில் சம்பந்தப்பட்ட சயனுக்கு தி.மு.க. வழக்கறிஞர்கள் உதவி செய்தார்கள் என்று கூறியிருக்கிறார். சம்பந்தப்பட்ட எதிரிகள் 11.01.2019 அன்று புதுடெல்லியில் தெஹல்கா பத்திரிக்கையாளர், மேத்யூ சாமுவேல் என்பவரோடு பத்திரிக்கையாளர்களைச் சந்தித்து, கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில், அப்போது முதலமைச்சராக இருந்த மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் மீது குற்றம் சாட்டினார்கள். உடனே அதிகாரத்தைப் பயன்படுத்தி, அச்சுறுத்தும் வகையில் அவர்கள்மீது வழக்கு புனைந்தது யார்? ஒரு முதலமைச்சர் மீது புகார் கூறுவோர் மீது பொய் வழக்கு போடும்போது, பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக அன்று இருந்த தி.மு.க.வின் வழக்கறிஞர்கள் சட்ட உதவியைச் செய்தார்கள். இதுதான் உண்மை.

முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களின் பங்களாவில் நடைபெற்ற கொலை, கொள்ளையை அவர் கட்சியின் முதலமைச்சராக இருந்தவரே மறைக்க முயலும்போது, தி.மு.க. எப்படி சும்மா இருக்க முடியும்? ஆகவே, கொடநாடு வழக்கில் உண்மை குற்றவாளிகள் யார், முறையாக விசாரணையை நடத்தாமல் திசை திருப்பியது யார் என்பதை எல்லாம், உறுதியாக சொல்கிறேன்; நிச்சயமாக சொல்கிறேன்; சிபிசிஐடி விசாரணையில் வெளிவரும் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அ.தி.மு.க. ஆட்சி விட்டுச் சென்ற "பேரழிவுகளில்" போதைப் பொருட்கள் நடமாட்டமும் ஒன்று. 10 ஆண்டு ஆட்சியில் இருந்தவர்கள் விட்டுச் சென்ற படு பாதகங்களில் ஒன்றுதான், இந்தச் சீரழிவுக்குக் காரணம். அதனால்தான் ஆட்சிக்கு வந்தவுடன் முதலில் "ஆப்பரேஷன் கஞ்சா வேட்டைகள்" அடுத்தடுத்து தொடங்கப் போவதை அறிவித்து, போதைப் பொருட்களையெல்லாம் கைப்பற்றினோம்.

போதை மருந்துகள் மற்றும் உள வெறியூட்டும் பொருட்கள் சட்டம், 1985இன்படி கஞ்சா விற்போரின் சொத்துக்கள் மற்றும் வங்கிக் கணக்குகளை முடக்குவது ஓர் இயக்கமாகவே தொடங்கப்பட்டது. போதைப் பொருட்களை ஒழிக்க என் தலைமையில் மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. முதலமைச்சரின்கீழ் இதற்காக ஆய்வுக் கூட்டம் தனியாக நடத்தப்பட்டது இதுதான் முதல் முறை. இதுவரையில் இதுபோன்ற ஒரு கூட்டம் நடந்ததே கிடையாது. தி.மு.க. ஆட்சிக்கு வந்ததற்கு பிறகு, என் தலைமையில் நடைபெற்ற கூட்டம்தான் முதல் கூட்டம்.

இப்படி தொடர் நடவடிக்கைகளின் பலனாக, இன்று கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்களின் நடமாட்டம் அ.தி.மு.க. ஆட்சியில் இருந்ததைவிட பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சில காவல் நிலைய எல்லைகளில் போதைப் பொருட்களே இல்லை என்ற நிலை எட்டப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் கஞ்சா பயிரிடுவது முற்றிலுமாக ஒழிக்கப்பட்டுள்ளது.

வெளி மாநிலங்களிலிருந்து கஞ்சா மற்றும் போதைப் பொருட்கள் தமிழ்நாட்டிற்கு கடத்தப்படுவதை தடுக்கும்பொருட்டு, தற்போது மாவட்டங்களில் செயல்பட்டு

வரும் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவை போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப் பிரிவுடன் ஒன்றிணைத்து அனைத்து மாவட்டங்களிலும் புதிதாக அமலாக்கப் பிரிவு குற்றப்புலனாய்வுத் துறை உருவாக்கப்பட்டுள்ளது.

பள்ளி, கல்லூரி மாணவர்களிடத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்தும்பொருட்டு, 11.08.2022 அன்று ஒரே நாளில் 74 இலட்சம் மாணவர்கள் "போதைப் பொருட்கள் ஒழிப்பு உறுதிமொழியை" எடுத்துக்கொண்டார்கள். அது ஒரு உலக சாதனை நிகழ்வாக அமைந்தது; அதில் நானும் கலந்து கொண்டேன். ஆகவே, அனைத்து முனைகளிலும் சட்டத் துணையுடன் அரசு நடத்தும் இந்த தாக்குதலில், பத்தாண்டு காலமாக வேரூன்றியிருந்த "போதைப் பொருட்கள் சாம்ராஜ்யம்" சரிந்துள்ளது. அதுதான் இந்த அரசினுடைய சாதனை!

கோட்டையில் அமர்ந்து திட்டங்களைத் தீட்டினால் மட்டும் போதாது; அவையெல்லாம் தானாக நடந்துவிடும் என்று நினைக்காமல், மக்களுக்கு நெருக்கமாகச் சென்று திட்டங்களைக் கண்காணிக்கவும் வேண்டும் என்ற நோக்கத்தோடுதான், 'கள ஆய்வில் முதலமைச்சர்' என்ற திட்டத்தை நான் தொடங்கினேன் மாவட்டங்களுக்கே நேரடியாகச் சென்று, தொடர்புடைய அதிகாரிகளை அழைத்துப்பேசிவருகிறேன். இது அனைத்துத் துறைகளிலும் ஒரு நல்ல விளைவுகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

இதில் காவல் துறை செயல்பாடுகள் தொடர்பாக தனி ஆய்வுக் கூட்டமே நடத்துகிறேன். வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, இராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டக்

காவல் துறை அதிகாரிகளுடன் நேரடி ஆலோசனைகள் நடத்தியிருக்கிறேன். இந்த ஆய்வுக் கூட்டங்களின்போது, நிலுவையில் உள்ள முக்கிய வழக்குகள், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருட்கள் தொடர்பான குற்றங்கள் எனக் குற்ற வழக்குகள் தொடர்பான தகவல்கள் மட்டுமின்றி, காவலர் மற்றும் பொதுமக்கள் நலனில் காவல் துறையின் பங்கும் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வுகளின்போது வழங்கப்பட்ட அறிவுரைகளின் காரணமாக, சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் காவல் நிருவாகத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக உயரதிகாரிகள் எனக்கு அடிக்கடி தகவல் தந்து கொண்டிருக்கிறார்கள்.

கடந்த மூன்று மாதங்களுடன், சென்ற ஆண்டின் முதல் மூன்று மாத சராசரியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கொலை சம்பவங்கள் 13 விழுக்காடு குறைந்துள்ளன, கொள்ளை சம்பவங்கள் 18 விழுக்காடு, கன்னக்களவு 11 விழுக்காடு, கலவர வழக்குகள் 26 விழுக்காடு குறைந்துள்ளன. குறிப்பாக, முக்கிய வழக்குகளில் புலன் விசாரணையை தீவிரப்படுத்துதல், போதைப் பொருட்கள் நடமாட்டம் தொடர்பாக தொடர் சோதனைகள் மற்றும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்துதல், நிலுவையில் உள்ள பிடியாணைகளை நிறைவேற்றுதல், பொதுமக்கள் மற்றும் காவலர் குறை தீர்ப்பு முகாம்களை காவல் கண்காணிப்பாளர்கள் முறையாக நடத்தி மனுக்களுக்குத் தீர்வு காணுதல், காவலர் வரவேற்புத் திட்டம் மற்றும் வார ஓய்வுத் திட்டம் ஆகியவற்றை முறையாக அமல்படுத்துதல் போன்றவற்றில் கூடுதல் ஈடுபாட்டுடன் செயல்படுவதாக நான் அறிகிறேன்.

இத்தகைய கள ஆய்வின்போது காவல் நிலையங்கள் உள்ளிட்ட எந்த அரசு அலுவலகங்களிலும் நான் திடீர் சோதனை மேற்கொள்ளக்கூடும் என்ற எதிர்பார்ப்பு அனைவர் மத்தியிலும் எழுந்துள்ளது. இதனால் காவல் நிலையங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு அலுவலகங்களின் செயல்பாடுகளில் புது வேகம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

கடந்த 29.09.2021 அன்று தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டை காவல் நிலையத்திற்கும், 15.04.2022 அன்று அம்பத்தூர் காவல் நிலையத்திற்கும் சென்று ஆய்வு மேற்கொண்டு, வழக்குகளின் பதிவேடுகள், பொதுமக்கள் அளித்த புகார்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்து, உரிய அறிவுரைகளை வழங்கினேன். இவை அனைத்தும் காவல் துறை அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கும் ஆட்சிக்குமான நெருக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

குற்றங்களுக்குத் தண்டனை வாங்கித் தரும் துறையாக மட்டுமல்ல, குற்றங்கள் நடைபெறாமல் தடுக்கும் துறையாகக் காவல் துறை செயல்பட வேண்டும் என்று நான் தொடர்ந்து அறிவுறுத்தி வருகிறேன். அந்த வகையில் காவல் துறையின் செயல்பாடு காரணமாக குற்றங்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகின்றன. குற்றங்களைத் தடுக்க காவலர்களுக்கு நவீன தகவல் தொழில்நுட்ப சாதனங்கள் (Body worn Camera) வழங்கப்பட்டுள்ளது.

தி.மு.க. ஆட்சி அமைந்த பின்னர் காவல் துறையில், 1) ஸ்மார்ட் காவலர், 2) முகம் அடையாளம் காணும் திட்டம் (Face Recognition System), 3) தேசிய கைரேகை அடையாளம் காணும் திட்டம் (National Fingerprint Identification System), 4) காவல் உதவி செயலி, 5) Senior Officer

பெட்டிஷன் சிஸ்டம், 6) E-Office, 7) பந்தோபஸ்து மேனேஜர், 8) Road Safety Portal, 9) Drones - எனப் புதுமையான பல திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இவற்றுள் ஒரு சில திட்டங்கள் முன்பு அறிவிக்கப்பட்ட பழைய திட்டங்களாக இருந்தாலும், இங்கே, நேற்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் 45 நிமிடங்கள் அவர்களுடைய ஆட்சியில் என்ன நடந்தது, என்ன திட்டம் தீட்டினார்கள் என்று பட்டியல் போட்டார். ஆனால், அதுவெல்லாம் எந்த நிலையில் இருந்தது என்று சொல்லவில்லை. செயல்படாமல் இருந்த நிலையையெல்லாம் இன்றைக்கு நாங்கள் சீர்படுத்தி, அதையெல்லாம் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, முன்பு அறிவிக்கப்பட்ட பழைய திட்டங்களாக இருந்தாலும், அவர்கள் அறிவித்தார்களே என்று கிடப்பில் போட்டுவிடவில்லை. அதை இன்றைக்கு முறைப்படுத்தி, அதையெல்லாம் இப்போது அரசு முழு வீச்சில் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது. இதுதான் உண்மை.

தமிழ்நாட்டைக் காவலர்கள் பாதுகாக்கும்போது அவர்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உள்ளது என்பதை நான் நன்றாக அறிவேன். கழக ஆட்சிக் காலத்தில் காவலர் நலன் எப்போதும் பேணிப் பாதுகாக்கப்பட்டுள்ளது. காவலர் நலன் காக்க, தி.மு.க. எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ, கலைஞர் எப்போதெல்லாம் முதலமைச்சராக வருகிறாரோ, அப்போதெல்லாம் ஆணையங்கள் மூன்று முறை அமைக்கப்பட்டுள்ளது. காவல் துறைக்காக, காவல் துறையினுடைய சீர்திருத்தத்திற்காக ஆணையங்கள் அமைக்கப்பட்டது.

கடந்த ஆட்சிக் காலத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த நான், காவல் ஆணையம் அமையுங்கள், அமையுங்கள் என்று பலமுறை இதே அவையில் கோரிக்கை வைத்தேன். அமைக்கப்படும் என்று அன்றைய முதலமைச்சர் வாக்குறுதி அளித்தார். ஆனால் அந்த நான்காவது காவல் ஆணையத்தையும் முறையாக அமைக்கவில்லை. பெயருக்கு அறிவித்தார்கள். அதை முறையாக அமைக்கவில்லை; செயல்படவும் இல்லை.

எனவே, நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதும், ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி சி.டி. செல்வம் அவர்கள் தலைமையில் ஐந்தாவது காவல் ஆணையத்தையும் புதிதாக அமைத்துள்ளோம்.

அந்த ஆணையத்தின் இடைக்கால அறிக்கை 17.03.2023 அன்று பெறப்பட்டது. அதன் பரிந்துரைகளின் அடிப்படையிலான நடவடிக்கைகளை இன்றைய அறிவிப்புகளில் நீங்கள் காணலாம். முழு அறிக்கை வந்தவுடன், காவலர் நலன் காக்கும் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் உறுதியாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் நிலையங்களுக்கு வரும் பொதுமக்களை இன்முகத்தோடு வரவேற்றுக் குறைகளைக் கேட்டறிய ஒவ்வொரு காவல் நிலையத்திலும் வரவேற்பாளர்கள் (Receptionist) நியமிக்கப்பட்டனர். இப்பணிக்கு மறைந்த காவலர்களினுடைய வாரிசுகள் 1,132 பேருக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கப்பட்டது. இதில் 1,088 நபர்களுக்கு இதுவரை பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

13.06.2021 முதல் முதலமைச்சர் மற்றும் முக்கியப் பிரமுகர்களின் வழிக்காவல் பணியிலிருந்து பெண்

காவலர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டது. அவர்களுக்கு இலகுவான பணிகளை வழங்கவும் உத்தரவிடப்பட்டது.

09.11.2021 முதல் காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர் மற்றும் துணை கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு தற்போது வழங்கப்படும் வீடுகளின் அளவை விட விகிதாச்சாரப்படி உயர்த்தி வழங்கி ஆணையிடப்பட்டது.

10.11.2021 முதல் காவல் ஆளிநர்கள் தற்செயல் விடுப்பிற்கு ஒப்புதல் அளிக்கும் மென்பொருள் "CLAPP", அது ஒரு APP "CLAPP" 10 இலட்சம் ரூபாய் செலவில் அமல்படுத்தப்பட்டது.

16.11.2021 அன்று காவலர்களுக்கு காவல் நிலையங்களில் உடற்பயிற்சி மேற்கொள்ள 38 மாவட்டங்கள் மற்றும் 7 மாநகரங்களில் உடற்பயிற்சிக்கூடம் அமைக்க தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் 90 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது.

காவல் துறையினரின் நலன்களைப் பாதுகாக்க காவலர்களுக்கு வழங்கப்படும் இடர்படி 24.11.2021 அரசாணையின்படி 800 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

01.12.2021 முதல் காவலர்களின் வாழ்க்கை துணைவியாருக்கும் மருத்துவ பரிசோதனை, பெண்களுக்கான சிறப்பு பரிசோதனை ஆகியவை அளிக்கப்பட்டு வருகிறது.

24.01.2022 முதல் காவல் நிலையங்களில் உடனடி மற்றும் அவசரச் செலவுகளை மேற்கொள்ள ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் ரொக்க சில்லறை செலவின நிதி (Cash Contingency Fund) உயர்த்தி வழங்கப்பட்டது. 04.03.2022

அன்று புதிதாக ஆறு மாவட்டங்களில் காவலர் அங்காடிகள் நிறுவ உத்தரவிடப்பட்டது. 01.08.2022 அரசாணைமூலம் மெரினா கடற்கரையில் பொதுமக்கள் நீரில் மூழ்குவதை தடுக்க "மெரினா கடற்கரை உயிர் காப்பு பிரிவு" அமைக்கப்பட்டது. இப்படி அறிவிப்புகளை ஆணையாக உடனுக்குடன் பிறப்பித்துள்ளதன் காரணத்தால்தான் இந்த அரசு இதை கம்பீரமாக, இவைகளையெல்லாம் நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். அதிலும் குறிப்பாக பெண் காவலர் நலனுக்காக ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. போலீஸ் போன்ற அதிகாரமிக்க பணிகளில் பெண்கள் ஈடுபடுத்தப்பட வேண்டும் என்று தந்தை பெரியார் அவர்கள் வலியுறுத்தினார்கள். இதற்கு செயல்வடிவம் கொடுத்தவர் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்.

வரும் ஜூன் 3ஆம் நாள், 'தமிழினத் தலைவர்' கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தொடங்கவிருக்கிறது. அவரது நூற்றாண்டு தொடங்கும் ஆண்டிலேயே, அவர் முன்னெடுத்த முக்கியத் திட்டமான, தமிழ்நாடு காவல்துறையில் மகளிர் காவலர்கள் இணைந்ததன் 50ஆவது ஆண்டு நிறைவு பெறுகிறது. முத்தமிழறிஞர் கலைஞரின் முயற்சியால்தான் இன்று ஏராளமான பெண்களின் காவல்துறை கனவு நனவாகிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் அதிக பெண் காவலர்களைக் கொண்ட முதல் ஐந்து மாநிலக் காவல்துறைகளில் தமிழ்நாடு காவல்துறையும் இன்றைக்கு இடம்பெற்றிருக்கிறது. தற்போது, எனது பாதுகாப்புக்கான உள்வட்ட பாதுகாப்புப் பிரிவிலேயே ஒரு பெண் உதவி ஆய்வாளர் மற்றும் எட்டு பெண் காவலர்கள் பணியாற்றி வருகிறார்கள்.

தமிழ்நாடு காவல்துறையில் மகளிர் காவலர்கள் இணைந்ததன் 50ஆம் ஆண்டு பொன்விழாவைத்தான்

17.03.2023 அன்று சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கிலே சிறப்பாகக் கொண்டாடினோம். அந்த நிகழ்ச்சியிலே சிறப்பு அஞ்சல் உறையினை வெளியிட்டோம். பெண்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் 'அவள்' திட்டத்தை அறிமுகப்படுத்தி வைத்தேன். அந்த விழாவில் பெண் காவலர்களுக்கான சிறப்பு வாய்ந்த நவரத்தின திட்டங்களை அறிவித்தேன். ரோல்கால் என்ற காவல் வருகை அணிவகுப்பிற்கான நேரம் காலை 7 மணி என்பதைத் தளர்த்தி 8 மணியென மாற்றியமைக்கப்படும். சென்னை மற்றும் மதுரையில் பெண் காவலர்கள் தங்கும் விடுதிகள் அமைக்கப்படும். அனைத்து காவல் நிலையங்களிலும் பெண் காவலர்களுக்குக் கழிப்பறைகளுடன் தனி ஓய்வு அறை கட்டித்தரப்படும். தேவையான அனைத்து இடங்களிலும் காவல் குழந்தைகள் காப்பகம் அமைக்கப்படும். கலைஞர் காவல் பணி விருதும், கோப்பையும் ஆண்டுதோறும் வழங்கப்படும். பெண் காவலர்கள் குடும்ப சூழ்நிலைக்கு ஏற்ப விடுப்பு மற்றும் பணியிடமாறுதல் வழங்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்படும். பெண் காவலர்களுக்கு துப்பாக்கி சுடும் போட்டி ஆண்டுதோறும் நடத்தப்படும். பெண் காவலர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண 'காவல் துறையில் பெண்கள்' என்ற தேசிய மாநாடு ஆண்டுதோறும் நடத்தப்படும். பெண் காவலர்களின் நலனுக்காக பணி ஆலோசனை வழிகாட்டுதல் குழு அமைக்கப்படும் என்பன அந்த 9 அறிவிப்புகள். இவற்றை விரைந்து நிறைவேற்றவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் பெண்ணியத்தையும், பெண் உரிமையையும், பெண் பாதுகாப்பையும் உறுதிசெய்யக்கூடிய வகையில், காவல்துறையில் பெண்காவலர்கள் முதல் பெண் அதிகாரிகள் வரை அனைவரின் தேவைகளைப் பூர்த்தி

செய்வது, அவர்களது நலனை மேம்படுத்த வேண்டியது அவசியம். இதனை உணர்ந்தே தி.மு.க. அரசு பெண் காவலர்களுக்குப் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.

காவலர் பணியிடங்களைப் பொறுத்தவரைக்கும் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், காலிப்பணியிடங்களைநிரப்புவதற்குஉரியநடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இரண்டாம் நிலைக் காவலர், சிறைக்காவலர், தீயணைப்பாளர் பணியிடங்களுக்கு 11 ஆயிரத்து 812 நபர்கள் 2021ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அதேபோன்று, 2022ஆம் ஆண்டு, 3 ஆயிரத்து 552 காலிப்பணியிடங்களுக்கு, காவலர்களை நியமித்திட தேர்வு நடத்தப்பட்டு, 29.03.2023 அன்று தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. சார்பு ஆய்வாளர் பணியிடத்திற்கு 2022இல் தேர்வு நடத்தப்பட்டு, 438 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், ஆயுதப்படை, தமிழ்நாடு சிறப்புக் காவல் படை மற்றும் தாலுகா உள்ளிட்ட பிரிவுகளுக்கு, 615 சார்பு ஆய்வாளர்களை தேர்வு செய்வதற்காகவும், ஆயுதப்படை மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல்படையில் 2 ஆயிரத்து 599 பணியிடங்களை நிரப்புவதற்கும், 106 சார்பு ஆய்வாளர் (தொழில்நுட்பம்) பணியிடங்களை நிரப்புவதற்கும், 63 சார்பு ஆய்வாளர் (விரல் ரேகை) பணியிடங்களை நிரப்புவதற்கும் உரிய அறிவிக்கைகள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

காவல் துணைக் கண்காணிப்பாளர்களைப் பொறுத்தவரையில், அந்தப் பணியிடங்களை நிரப்புவதற்கு, கடந்த 2021-2022ஆம் ஆண்டிற்கான 91 நபர்களை உள்ளடக்கிய தேர்ந்தோர் பட்டியல் வெளியிடப்பட்டு,

பணியாணைகள் வழங்கப்பட்டுள்ளன. 2022-2023 ஆம் ஆண்டைப் பொறுத்தவரையில், காவல் துணைக் கண்காணிப்பாளருக்கான காலிப்பணியிடம் 47 என நிர்ணயிக்கப்பட்டு, தேர்ந்தோர் பட்டியல் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2021-2022ஆம் ஆண்டு காவல் துறையின் மானியக் கோரிக்கையின்போது, காவலர்கள் மீதான சிறு தண்டனைகள் கைவிடப்பட்டு, அவர்களுக்கு உரிய பதவி உயர்வு மற்றும் சலுகைகள் வழங்கப்படும் என்ற அறிவிப்பினை வெளியிட்டோம். அந்த அறிவிப்பிற்கிணங்க, கடந்த 07.12.2021 அன்று அரசாணை வெளியிடப்பட்டு, அதன் அடிப்படையில் 2,249 சிறுதண்டனைகள் அரசால் ரத்து செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், "உங்கள் துறையில் முதலமைச்சர்" என்ற திட்டத்தின்கீழ், மொத்தம் 3,329 மனுக்கள் காவலர்களிடமிருந்து, காவல் துறை தலைமை இயக்குநர் அவர்களால் 01.07.2021 முதல் 31.03.2023 வரை பெறப்பட்டு, அவற்றுள் 2,930 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, தண்டனைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அதோடுமட்டுமல்லாமல், நான் காவல் துறை தலைமை இயக்குநர் அலுவலகத்தை, 22.09.2022 அன்று ஆய்வு செய்தபோது, சிறு தண்டனைகளை ரத்து செய்யக் கோரி, காவலர்கள் என்னிடம் மனுக்களை அளித்தனர்.

அவற்றில், மொத்தம் 336 மனுக்கள் "உங்கள் துறையில் முதலமைச்சர்" திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, தற்போது அவை அரசின் நடவடிக்கையில் உள்ளது. எனவே, காவலர்கள் மீதான சிறுதண்டனையைப் பொறுத்தவரையில், மொத்தம் பெறப்பட்ட 5,922 மனுக்களில், 5,179 மனுக்களுக்கு

தீர்வு காணப்பட்டு, காவலர்கள் மீதான தண்டனை ரத்து செய்யப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்திற்கு மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

குற்றவாளிகளை கண்டுபிடிப்பதில் தடய அறிவியல் துறையின் பங்கு இன்றியமையாதது. நமது ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு 15 தடயவியல் ஆய்வுப் பிரிவுகள் கொண்ட சென்னை தலைமை ஆய்வகம் 13.05.2022 அன்று இந்தியத் தரச்சான்று நிறுவனத்தின் சான்றிதழை பெற்றுள்ளது.

2022 துவக்கத்தில் 19 ஆயிரத்து 347 வழக்குகள் ஆய்வுக்காக நிலுவையில் இருந்தன. 2022இல் பெறப்பட்ட 81 ஆயிரத்து 328 வழக்குகளையும் சேர்த்து, மொத்தம் 1 இலட்சத்து 675 வழக்குகள். இவற்றில் 31.12.2022 வரை 91 ஆயிரத்து 506 வழக்குகளில் தடய அறிவியல் துறை ஆய்வு அறிக்கை வழங்கியிருக்கிறது.

தடய அறிவியல் துறை வரலாற்றில் முதல் முறையாக கழக ஆட்சியில்தான் 91 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆய்வு அறிக்கைகள் அளிக்கப்பட்டு, இப்படியொரு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதை பெருமையுடன் நான் சொல்லிக்கொள்கிறேன்.

இதை மேலும் வலுப்படுத்தும் வகையில், கோவையில் புதிய மரபணு ஆய்வுப் பிரிவு, மதுரை அறிவியல் ஆய்வகத்திற்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் அதி நவீன மரபியல் ஆய்வுக் கருவி, போதைப் பொருட்களை துல்லியமாக கண்டறிய 2 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் LC-MS எனும் அதி நவீன கருவி வாங்க ஒப்புதல் என பெண்களுக்கு எதிரான குற்றங்கள், போக்சோ குற்றங்களின் விசாரணை, போதைப் பொருள் ஒழிப்பிற்கு

தேவையான விரைவான ஆய்வு என அனைத்திற்கும் முன்னுரிமை அளித்து, இத்துறை இந்த அரசில் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை தன்னலமற்று உயிர்களையும், உடைமைகளையும் காப்பாற்றும் பணியினை சிறப்பாக செய்து வருகிறது. தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளில் உடனடியாக தலையிட்டு, 2022ஆம் ஆண்டில் 6 ஆயிரத்து 275 மனித உயிர்களையும், 249 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள உடமைகளையும் காப்பாற்றியிருக்கிறார்கள்.

தீயணைப்பு வீரர்கள் பாதுகாப்பாக இருந்தால்தான் மக்களை பாதுகாக்க முடியும். அதனால், 1,350 தீ பாதுகாப்பு உடைகள், 450 மூச்சுக் கருவிகள், பாதுகாப்பு உபகரணங்களுடன்கூடிய 3,000 மீட்பு உடைகள் 49 கோடியே 62 இலட்சம் மதிப்பில் வாங்கி, வழங்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் சிறப்பான சேவைக்கு தீயணைப்பு நிலையங்கள் மிக, மிக முக்கியம். ஆகவே, 62 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பில், மாநிலம் முழுவதும் 17 இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் மற்றும் 4 தரம் உயர்த்தப்பட்ட தீயணைப்பு நிலையங்கள் துவக்கி வைக்கப்பட்டுள்ளன. ட்ரோன்கள், புதிய நீர் தாங்கி வண்டிகள், அவசர கால சிறிய மீட்பு ஊர்திகள், வான்நோக்கி நகரும் ஏணி கொண்ட ஊர்தி, உயரழுத்த நீர் தாங்கி வண்டி உள்ளிட்ட தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிக்குத் தேவையான பல்வேறு வாகனங்கள் 24 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஒப்பளிப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

செங்குன்றம், போடிநாயக்கனூர், துறையூர், இராணிப்பேட்டை, சிவகாசி, பெரும்பாக்கம் உள்ளிட்ட

6 இடங்களில் தீயணைப்பு அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு 40 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பில் 172 குடியிருப்புகள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. தீயணைப்புத் துறை பணியாளர்களின் நலனுக்காக இவ்வாறு பல்வேறு திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றி வருகிறது.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கு உரையாற்றும்போது, தமிழ்நாட்டில் இயக்கப்படும் வாகனங்களின் எண்ணிக்கை, அதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை போன்ற விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று தெரிவித்திருந்தார்கள். இதனைப் பொறுத்தவரையில், மானியக் கோரிக்கை எண் 25, இயக்கூர்திகள் சட்டங்கள்-நிருவாகம் குறித்த உள்துறை போக்குவரத்து (Home Transport) கொள்கை விளக்கக் குறிப்பில், பக்கம் 56-ல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சாலைப் பாதுகாப்பைப் பொறுத்தவரையில், எங்களது அரசு பல சீரிய முயற்சிகளை எடுத்து வருகிறது. சாலைப் பாதுகாப்பு தொடர்பாக அரசுக்கு அவ்வப்போது உரிய ஆலோசனைகளை வழங்கிட, மாநில குற்ற ஆவணக் காப்பகத்தின் காவல் துறை கூடுதல் இயக்குநர் அவர்களின் தலைமையில் சாலைப் பாதுகாப்புக்கான சிறப்புப் பணிக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சாலைப் பாதுகாப்பு முயற்சிகளைத் திறம்பட செயல்படுத்திட 'இன்னுயிர் காப்போம் திட்டம்' எங்களது அரசால் வகுக்கப்பட்டு, சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் 19.04.2023 வரை விபத்துக்குள்ளான 1,56,000 நபர்கள் பயன் அடைந்திருக்கிறார்கள். இத்திட்டத்தின்கீழ் 138 கோடியே 13 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

2019இல் சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 18,129ஆக இருந்த நிலையில், தமிழ்நாடு அரசின் சீரிய நடவடிக்கையால் 2022இல் 17,884ஆக குறைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சரின் விபத்து நிவாரண நிதியின்கீழ் 2023-2024 ஆண்டிற்கு 120 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த அரசைப் பொறுத்தமட்டில், கடந்த அ.தி.மு.க. ஆட்சி உச்ச நீதிமன்றத்துக்கும், ஒன்றிய அரசுக்கும் விபத்து எண்ணிக்கையைக் குறைத்து, தவறான தகவல் அளித்ததுபோல் இல்லாமல், விபத்து குறித்த உண்மைத் தகவல்களைக் கொள்கை விளக்கப் புத்தகத்தில் வெளியிட்டுள்ளது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி V. ஜெயராமன் அவர்கள், பொள்ளாச்சியில் காவலர் குடியிருப்புகள் கட்டுவதற்கான இடம் தயார் நிலையில் இருப்பதாகவும், அதனை உடனே கட்டித் தரவேண்டுமென்றும் ஒரு கோரிக்கை வைத்திருந்தார். அவரது கோரிக்கையைப் பொறுத்தவரையில், பொள்ளாச்சி வட்டம், ப்ளாக் எண் 26, வார்டு எண் D, பொள்ளாச்சி நகரத்தில் சர்வே எண்கள் 1592, 1594, 1597, 1599 காவல் துறைக்குச் சொந்தமான இடத்தில், 8 ஆய்வாளர் குடியிருப்புகளும், 20 உதவி ஆய்வாளர் குடியிருப்புகளும் மற்றும் 204 தலைமைக் காவலர் மற்றும் காவலர்களுக்கான குடியிருப்புகளும் கட்டுவதற்குத் திட்டமிட்டு, அதற்கான மதிப்பீடு 104 கோடி ரூபாய்க்கு தயார் செய்யப்பட்டு, தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

காவல் துறையின் மானியக் கோரிக்கையில் பேசிய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள், திரு. தி. வேல்முருகன் அவர்கள், திரு. ம.சிந்தனை செல்வன் அவர்கள், திரு. நயினார் நாகேந்திரன் அவர்கள் உள்ளிட்டோர் "1996ஆம் ஆண்டு நேரடி உதவி ஆய்வாளர்களாக நியமனம் செய்யப்பட்ட 1,100 காவல் உதவி ஆய்வாளர்கள், காவல் ஆய்வாளர்களாகப் பதவி உயர்வு பெற்ற பின்னர், அவர்களில் 241 பேர் காவல் துணைக் கண்காணிப்பாளர்களாகப் பதவி உயர்வு பெறாமல் உள்ளனர் என்றும், அவர்களுக்குக் காவல் துணைக் கண்காணிப்பாளர் பதவிக்குரிய பயிற்சி வழங்கப்பட்டு, பணி ஆணை வழங்கப்படாமல் உள்ளதாகவும், இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் கோரிக்கை விடுத்தார்கள். பொதுவாக காவல் துறையில் குறிப்பிட்ட பதவிகளுக்கு காலிப் பணியிடங்கள் உருவாகும்போது அதற்கேற்றவாறு அந்தப் பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன.

ஆகவே காலிப்பணியிடங்கள் உருவாக, உருவாக நிச்சயம் காலதாமதம் இன்றி பதவி உயர்வு வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சென்னை மாநகர காவல் எல்லைக்குள் இரண்டரை இலட்சம் கண்காணிப்பு கேமராக்கள் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வைக்கப்பட்டதாக கூறினார். ஆனால் அ.தி.மு.க. ஆட்சியில் உள் துறையிலிருந்து கடந்த 12.11.2020 அன்று வெளியிடப்பட்ட அரசாணை எண் 1348இன்படி அரசு நிதி மற்றும் தனியார் ஒத்துழைப்பில் பொருத்தப்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து 282 மட்டுமே

குறிப்பிடப்பட்டு, அவற்றின் பராமரிப்பிற்காக 50 இலட்சம் ரூபாய் வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இரண்டரை இலட்சம் சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்படவில்லை என்பதே உண்மை!

அது மட்டுமல்ல, தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் சென்னை மாநகர காவல் துறை லிமிட்டில் நடத்தப்பட்ட ஆய்வில், வெறும் 60 ஆயிரத்து 997 கண்காணிப்பு கேமராக்கள் மட்டுமே இருந்தது. அவற்றிலும் அரசு செலவில் நிறுவப்பட்டவை வெறும் 2 ஆயிரத்து 853 மட்டுமே! மற்றவை தனியார் நன்கொடை மூலமும், தனியார் இடத்தில் அவர்களாலும் பொருத்தப்பட்டவை என்பதும் கண்டறியப்பட்டது.

சில இடங்களில் நாடாளுமன்ற, சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியையும் பயன்படுத்தி அந்த கேமராவை பொருத்தியிருக்கிறார்கள். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகுதான், 22 ஆயிரத்து 229 கேமராக்கள் இரண்டரைக் கோடி ரூபாய் செலவில் "வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம்" செய்யப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது, புதிய கண்காணிப்புக் கேமராக்களும் பொருத்தப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தனை செல்வன் அவர்கள் சமூகநீதி கருத்துகளை உள்ளடக்கி, பயிற்சி பெறும் காவலர்களுக்குப் பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டுமென கோரிக்கை வைத்திருந்தார். இதனைப் பொறுத்தவரையில், இணையவழிக் குற்றங்கள் (Cyber Crime), சமூக ஊடகங்களைக் கொண்டு, பொய்ச் செய்திகளைப் பரப்புவோர்மீது உரிய நடவடிக்கை எடுப்பது மற்றும் மனித உரிமை குறித்தான வளர்ச்சி, நவீன

தொழில்நுட்பங்கள் போன்ற முக்கிய அம்சங்கள் இப்புதிய பாடத் திட்டத்தில் இடம் பெறும். அதற்கான கோப்பில் இரண்டு தினங்களுக்கு முன்புதான் நான் கையொப்பமிட்டேன். இதற்கான ஆணைகள் ஓரிரு நாட்களில் வெளியிடப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதனால், தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வு வாரியத்தின்மூலம் தெரிவு செய்யப்படும் நேரடி உதவி ஆய்வாளர்கள் மாற்றியமைக்கப்பட்ட பயிற்சி பாடத்திட்டம் மற்றும் நடத்தை விதிகளின்படி பயிற்சிகளைப் பெறுவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே பேசும்போது முஸ்லிம் விடுதலைப் பற்றி குறிப்பிட்டார்கள். பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 113ஆவது பிறந்த நாளை முன்னிட்டு சிறையில் நீண்டகாலம் சிறைவாசம் அனுபவித்துவரும் ஆயுள் தண்டனை கைதிகளின் தண்டனை பற்றிக் குறிப்பிட்டார்கள். நல்லெண்ணம் மற்றும் மனிதாபிமானம் அடிப்படையில் தண்டனையைக் குறைத்து முன்விடுதலை செய்வது குறித்து, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு உரிய விரிவான வழிமுறைகளை வகுத்து அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டு சிறைகளில் 10 ஆண்டுகள் மற்றும் 20 ஆண்டுகள் தண்டனை முடித்தும் இதன்கீழ் பயன்பெற முடியாத ஆயுள் தண்டனை சிறைவாசிகள் மற்றும் வயது முதிர்ந்த சிறைவாசிகள், பல்வேறு இணை நோய்கள் இருக்கக்கூடிய உடல்நலம் குன்றிய சிறைவாசிகள், தீராத நோயுற்ற மற்றும் மனநலம் குன்றிய சிறைவாசிகள் மற்றும் மாற்றுத்திறனாளி சிறைவாசிகள் ஆகியோர் நிலையை மனிதாபிமான அடிப்படையில் கருத்தில்கொண்டு இதுகுறித்தான

மாண்பமை உச்ச நீதிமன்றத் தீர்ப்புகள் மற்றும் இது தொடர்பாக தற்போது நடைமுறையில் உள்ள சட்டம் மற்றும் விதிகளின் அடிப்படையில் இவர்களின் நிகழ்வுகளை ஆராய்ந்தும், அவர்களின் முன்விடுதலைக்கு உரிய பரிந்துரை வழங்க ஏதுவாக, மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் திரு. என். ஆதிநாதன் அவர்களின் தலைமையின் கீழ் 6 பேர் அடங்கிய ஒரு குழு அமைக்கப்பட்டது.

ஆகவே, தி.மு.க. தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற இந்த அரசு பொறுப்பேற்றவுடன் செயல்பட்டு நடவடிக்கை எடுத்திருக்கிறது. அவ்வாறு அமைக்கப்பட்ட ஓய்வுபெற்ற நீதியரசர் திரு.என்.ஆதிநாதன் அவர்களின் தலைமையிலான குழு தனது பரிந்துரைகளை அளித்துள்ளது. முன்விடுதலையின் அடுத்த கட்டமாக அந்தப் பரிந்துரைகளை சம்பந்தப்பட்ட அரசு துறைகளின் செயலாளர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் சட்ட வல்லுநர்கள் உள்ளிட்டோர் பரிசீலித்து வருகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

காவல்துறையினர் எந்தவிதக் குறுக்கீடும் இன்றி சுதந்திரமாக செயல்படுகிறார்கள். மாநிலத்தில் சட்டம் - ஒழுங்கை சிறப்பாக பராமரித்து குற்றங்களில் ஈடுபடுவோர் யாராயினும் அவர்கள்மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அதனால், புதிய முதலீட்டாளர்கள் தமிழ்நாட்டைத் தேடி வரக்கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறோம். தொழில் பெருகி, நம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது.

ஆகவே, மாநிலத்தின் வளர்ச்சியில் தமிழ்நாடு காவல்துறை முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை, அதுவும் குறிப்பாக, 10 ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திற்குப் பிறகு, தமிழ்நாடு காவல்துறை "ஸ்காட்லான்ட் யார்டு" காவல்துறைக்கு இணையாகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறது. அத்தகைய சுதந்திரத்தைக் காவல் துறைக்கு இந்த அரசு கொடுத்திருக்கிறது. இரண்டு ஆண்டுகள் தமிழ்நாடு காவல் துறை நிகழ்த்திய சாதனைகளுடன் திருப்தி அடையக்கூடியவன் அல்ல நான்.

அகில இந்திய அளவில் தமிழ்நாடு காவல் துறை இப்போது பிடித்துள்ள முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைக்க வேண்டும் என்பதே இந்த அரசினுடைய இலக்கு. அதற்கு இந்த அரசு முழு முயற்சி எடுக்கும். தமிழ்நாடு காவல் துறையின் கடினமான பணியை, நம் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நன்கு உணர்வார்கள். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த வேண்டுகோளை வைக்கிறேன்.

அவரவர் தொகுதியில், சட்டம் ஒழுங்குப் பணியில் நியாயமாக, நேர்மையாக நடக்கும் காவலர்களை, காவல் துறை அதிகாரிகளை நீங்களும் மனதாரப் பாராட்டி, அவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும். தமிழ்நாடு காவல் துறை, இந்தியாவில் முதலிடத்தைத் தொடர்ந்து தக்க வைத்துக்கொள்ளும் அளவிற்கு உதவிட வேண்டும் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். காவல் துறைக்கு நாம் ஆற்ற வேண்டிய கடமையும், காவல் துறையினர் நம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளும் இணைந்து, நமது 'திராவிட மாடல்' ஆட்சியில் தமிழ்நாட்டை முன்னேற்றப்

பாதையில் நிச்சயம் கொண்டு செல்லும் என இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த மார்ச் 20ஆம் தேதியன்று தொடங்கிய இந்த சட்டமன்றக் கூட்டத் தொடர், இன்றுடன் முடிவடைகிறது. இந்த 21 அலுவல் நாட்களும் இந்த அவை ஆக்கப்பூர்வமாகச் செயல்பட்டது. மக்களாட்சிக்கு மதிப்பளிக்கும் விதமாக, அவை நடவடிக்கைகளில் ஈடுபட்ட அத்தனை சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத் தொடரிலும், ஆளுங்கட்சி உறுப்பினர்களைவிட எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கே அதிக நேரம் பேச வாய்ப்பு தரப்பட்டதாக நான் கருதுகிறேன். அந்த வகையில், இந்த அரசுக்குப் பல்வேறு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்கிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், பல்வேறு கட்சிகளின் சட்டமன்றக் குழுத் தலைவர்கள் என அனைவருக்கும் இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
*திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்,*
காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறை குறித்த
மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து,
ஆற்றிய உரை - 21.04.2023

"மகளிருக்கு உள்ளாட்சிப் பதவிகளில்
உரிய இட ஒதுக்கீடு, பெண்
குழந்தைகளை பாதுகாக்க சிறப்புத்
திட்டம் என மகளிர் நலன் காப்பதில்
நாட்டிற்கே முன்னோடித் திட்டங்களை
உருவாக்கித் தந்த பெருமைக்
கொண்டது நமது சட்டமன்றம்."

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை - 9.